கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

241

புரட்டாதி
01.09.2024

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



தாமரைச்செல்வி
வசந்தி தயாபரன்
என். சரவணன்
கோகிலா மகேந்திரன்
கந்தர்மடம் அ.அஜந்தன்
ஶ்ரீரங்கன்
இ.தியாகலிங்கம்
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்
வில்வரசன்
ஜலீலா முஸம்மில்
ஷெல்லிதாசன்
கனகசபாபதி செல்வநேசன்
வ.ந.கிரிதரன்
தமிழ்கவி
சிவகுருநாதன் கேசவன்
திருஞானசம்பந்தன் லலிதகோ

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024 - புரட்டாதி (01.09.2024)

# பொருளடக்கம்

## சிறுகதைகள்

கந்தர்மடம் அ. அஜந்தன் – 06
ஸ்ரீரங்கன் – 11
இ.தியாகலிங்கம் – 23
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் – 29

## கவிதைகள்

வில்வரசன் – 13
ஜலீலா முஸம்மில் – 16
ஷெல்லிதாசன் – 26
கனகசபாபதி செல்வநேசன் – 44



## நூல் விமர்சனம்

திருஞானசம்பந்தன் லலிதகோபன் – 14
சிவகுருநாதன் கேசவன் – 27

## தொடர் நாவல்

வ.ந.கிரிதரன் – 33
தமிழ்க்கவி – 41

## கட்டுரைகள்

**ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்தூழியம்: சமகால வாழ்வின் தரிசனங்கள்: இன்றைய காலத்தின் வெட்டுமுகம்**
தாமரைச்செல்வி – 03



**“தண்பதப் பெரு வழி: சோலைக்குயில்களின் கதைகள் வாசிப்பனுபவம்**
வசந்தி தயாபரன் – **06**




**மகாவம்சத்தின் 6வது தொகுதி(1978-2010) குறித்து அதன் தலைவி பேராசிரியர் மாலனி எந்தகம, பேராசிரியர் சி.பத்மநாதன் ஆகியோருடனான உரையாடல்**
என்.சரவணன் – 17

**முடிவைத்தொடுவாய் முயன்று - 9**
கோகிலா மகேந்திரன் – 31

# ஜீவநதி

**2024 புரட்டாதி இதழ் – 241**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

# யாழ்ப்பாண வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'யாழ்ப்பாண சர்வதேச புத்தகத்திருவிழா 2024'

யாழ்ப்பாண வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற "யாழ்ப்பாண சர்வதேச புத்தகத்திருவிழா 2024" ஆவணி மாதம் 9, 10, 11 ஆகிய தினங்களில் வெகு சிறப்பாக யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. பல்வேறு பதிப்பகங்கள் இங்கு புத்தகக் கண்காட்சியை மேற் கொண்டு இருந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். மூன்று நாட்களும் மக்கள் நிறைந்த கண்காட்சியாக வெற்றி கண்ட கண்காட்சியாக அமைந்தமை மனதிற்கு மகிழ்வைத் தருகின்றது பல்லாயிரக்கணக்கான நூல்கள் மக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டமை பாராட்டிற்கு உரியது. யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக பல்வேறு குழுமங்கள் கண்காட்சிகளை நடாத்தி வெற்றி கண்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் ஒரு குடையின் கீழ் பல்வேறு பதிப்பகங்கள், வெளியீட்டகங்கள் ஒன்றிணைந்த நிகழ்வாக இது அமைகின்றது. இவ்வாறான கண்காட்சிகள் மக்களிடையே வாசிப்பின் ஆர்வத்தை தோற்றுவிக்கும். மேலும் பல ஒன்றிணைந்த திட்டமிடல்கள் மூலம் இந்த கண்காட்சியை மேலும் சிறப்புற அமைக்கலாம். குறிப்பாக ஒரே புத்தகங்கள் பல்வேறு விலைகளில் ஒவ்வொரு பதிப்பகங்களிலும் விற்கப்பட்டது பெரும் குறையாக இருந்ததோடு, கண்காட்சிக்கு உரிய இடத்துக்காக ஒவ்வொரு பதிப்பாளர்களும் 60000.00 என்பது பெரியதொரு தொகை ஜீவநதி போன்ற பதிப்பகங்கள் இதில் பங்கு பற்ற முடியாமைக்கான காரணங்களாக இருந்துள்ளது. பல்வேறு பிரதேசத்தை சேர்ந்த எழுத்தாளர்களையும் இங்கு காணக்கூடியதாக இருந்தது. எதிர் காலத்தில் சில நூல் வெளியீடுகளையும் மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும். இக்கண்காட்சியை ஒழுங்கமைத்த அனைவருக்கும் ஜீவநதியின் வாழ்த்துக்கள். எதிர்கால வெளிச்சத்திற்கான முன்மாதிரியான செயல்.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

அரசியல் என்பது படித்தவர் முதல் பாமரர் வரை அனைவர் வாழ்விலும் ஊடுருவி நிற்பது. அதன் விளைவுகள் மனிதர் வாழ்வை அசைத்துப் பார்க்கும் சக்தி கொண்டவை.

**சமுதாயத்துக்கான ஒரு படைப்பாளி :**

அவற்றை எழுத்தில் கொண்டு வருவது என்பது இச்சமுதாயத்துக்கு ஒரு படைப்பாளி செய்யும் மகத்தான பணியாகும். இவற்றை ஆவணப் படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.

சமகாலத்தில் நடப்பவைகளின் பதிவுகள் எதிர்காலச் சந்ததியினருக்கு பெறுமதி வாய்ந்த ஆவணங்களாக கை மாற்றப்படுகிறது. அது சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்று எந்த வடிவமாகவும் இருக்கலாம். கட்டுரை என்றாலும் அதற்கும் ஒரு இலக்கிய வடிவம் உண்டு.

திரு ஐங்கரன் அவர்கள் ஒரு சமுதாயப் பணியை அமைதியான முறையில் பொறுப்போடு செய்து வருகிறார். காலையில் வரும் பத்திரிகைகளில் ஏதாவது ஒன்றில் ஐங்கரனின் கட்டுரைகள் பிரசுரமாகி இருக்கும். இப்படி தொடர்ச்சியாக எழுத எப்படி இவருக்கு நேரம் கிடைக்கிறது என்று யோசிக்கத் தோன்றும்.

**சமூக நேசிப்பும் அயராத முயற்சியும்:**

திரு ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்களின் மூன்று நூல்கள் சமீபத்தில் வெளியாகியிருக்கின்றன. “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்”, “பாலஸ்தீனம் எரியும் தேசம்”, “ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்” ஆகிய நூல்களே அவை. அவுஸ்திரேலியாவின் பல மாநிலங்களிலும் இந்நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல்களின்

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்தூழியம் : சமகால வாழ்வின் தரிசனங்கள்... இன்றைய காலத்தின் வெட்டுமுகம்

**தாமரைச் செல்வி**



பேசு பொருள் பலரின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன.

இலங்கை இதழியல் துறையில் தவிர்க்க முடியாத ஆளுமையாக இருந்தவர் திரு. சிவகுருநாதன் அவர்கள். அவரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூல் நமக்கு உதவுகிறது. ஒரு நாட்டின் தேசியப் பத்திரிகையில் ஆசிரிய பீடத்தில் சுமார் நாற்பது வருட காலம் பணியாற்றியமை என்பது சாதனைக்குரியது. இலங்கை தமிழ் இலக்கியத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தினகரன் மூலம் பெரும் பங்காற்றியவர் இவர். அவருக்கான கௌரவத்தை ஐங்கரனின் இத் தொகுப்பு வழங்கியிருக்கிறது எனலாம்.




மற்ற இரு நூல்களும் அரசியல் சார்ந்தவை. எம்மோடும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டவை. பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் எரிந்து கொண்டிருக்கும் தேசங்களில் நடைபெறும் நிகழ்வுகள் நாம் ஈழத்தில் அனுபவித்த துயரங்களையும் தொட்டுச் செல்வதை வலியோடு எம்மால் உணர முடிகிறது.

அவருக்குள் இருக்கும் சமூக நேசிப்பும் அதனது எழுத்து இந்த சமூகத்துக்கான பதிவாக இருக்க வேண்டும் என்ற உந்துதலும்தான் அவரது அயராத முயற்சிக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்ற புரிதலும் எமக்கு ஏற்படுகிறது.

தொடர்ச்சியான இவரது எழுத்துக்கு இவரது மாணவப் பருவத்திலேயே பிள்ளையார் சுழி போடப்பட்டு விட்டது. சிறு வயதிலிருந்தே தனக்குள் இருக்கும் எழுத்துத் திறமையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்.

**சிறுவர் இலக்கிய ஆய்வாளர் :**

1990 ஆம் ஆண்டு இவருக்கு எத்தனை வயது இருக்கும்? அந்த வயதிலேயே சிறுவர் இலக்கியம் பற்றிய நாற்பது தொடர் கட்டுரைகளை தினகரன் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இளம் வயதிலேயே சிறுவர் பத்திரிகைகள், இலக்கிய நூல்கள், ஈழத்து சிறுவர் இலக்கியம் பற்றிய ஆய்வையும் மேற் கொண்டவர்.

இதுவரை இவர் பன்னிரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னும் இருட்டினில், உறக்கம் தேடும் உலகிற்காய், வெண்பனிச் சுவடுகள், காற்றோடு பேசுதல், அக்கினிப் பிரவேசம், உள்மன யாத்திரை போன்ற புதுக் கவிதைத் தொகுதிகளையும் உனக்குள்ளேயே உள்ளிருப்பு, இழப்புக்களை இழப்போம், கல்லறைக்குள் கதிரவன் ஆகிய ஹைக்கூ கவிதைத் தொகுதிகளையும் படைத்துள்ளார். இவரின் நூல்களின் தலைப்புக்களே வித்தியாசமானவையாகவும் நயம் மிகுந்தவையாகவும் இருப்பதைக் காணலாம்.

இவை தவிர அடுத்தவர்கள் பற்றிய தொகுப்புக்களையும் முன்நின்று வெளியீடு செய்திருக்கிறார். வடமராட்சி ஒபரேஷன் லிபரேஷன் படுகொலைகள் எம் மண்ணின் வரலாற்றில் பதியப் பட்ட துயர வரலாறு. உலகையே அதிர வைத்த படுகொலைகளின் களம் அது. அக்கொலைகளை நினைவு கூரும் வகையில் எட்டு இளம் கவிஞர்களின் "கல்லறை மேலான காற்று" எனும் கவிதைத் தொகுதியினை 1988 ஆம் ஆண்டு தொகுத்தளித்தவரும் இவரே. அது தவிர ஈழப்போரின் வலியைச் சுமந்த அகிலன் திருச்செல்வத்தின் கவிதைகள் நூலைத் தொகுத்தவரும் இவரே. அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக 1990 இல் "மரணம் வாழ்வின் முடிவல்ல" என்ற கவிதைத் தொகுப்பும் வெளிவந்தது.


**சர்வதேச அரசியல் ஆய்வுகள்:**


ஈழத்துப் பிரச்சினைகளை மட்டும் பேசாமல் சர்வதேச அரசியல் ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் எழுதி வருவது இவரது பரந்த பார்வையை நமக்கு அடையாளம் காட்டுகிறது. ஐங்கரன் எனும் பெயரில் மட்டுமின்றி சார்ள்ஸ், நவீனன் எனும் புனைபெயர்


















களிலும் எழுதும் இவரது எழுத்துக்கள் பலராலும் விரும்பி வாசிக்கப்படுகிறது.

ஈழ விடுதலை பற்றியும் அதன் அரசியல் பற்றியும் ஆழமான புரிதல் உள்ள இவர் உலக அரசியலையும் புரிந்து கொண்டு அவற்றை எழுத்தில் தருவது இவரது திறமைக்கு ஒரு சான்றாகிறது.

எத்தனையோ வல்லரசு நாடுகளின் பிரச்சினை களை மட்டுமன்றி உலக வரைபடத்தில் சிறு புள்ளி களாகத் தோற்றம் தரும் மிகச் சிறிய நாடுகளின் பிரச்சினைகளையும் இவர் தன் எழுத்துக்களில் முன் நிறுத்துகிறார். எமக்கு அறிமுகமற்ற அந்த நாடுகளின் நிலைமைகளை இவரது கட்டுரைகள் மூலம் நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. அந்தக் கட்டுரைகளை எழுதும் முன் அந்தந்த நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ள இவர் எவ்வளவு மெனக்கெட்டிருக்க வேண்டும். எவ்வளவு நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அந்த தேடலே இவரது எழுத்துக்களை உண்மைத் தன்மைக்கு மிக நெருக்கமாக மாற்றுகிறது.

எளிமையான மொழிநடை இவருக்கு கை வந்திருக்கிறது. கனதியான விஷயங்களை எல்லாம் மிக இலகுவாக யாவரும் புரிந்து கொள்ளும்படி எழுத இவரால் முடிகிறது. ஈழத்துக் கவிஞன் தீபச்செல்வன் ஐங்கரனைப் பற்றி ஓரிடத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"உலக அரசியலின் முகங்களை, ஆயுத அரசியலின் அர்த்தங்களை, ஒப்பந்தங்களின் உள்ளடக் கங்களை, சமகால உலக அரசியலில் பொதிந்துள்ள தந்திரங்களின் முகங்களை என இவர் அதனது எழுத்துக்களின் வழியாக தரும் செய்திகள் மிகவும் அதிர்வு தரக்கூடியன."

உண்மைதான். அரசியலின் சூழ்ச்சி எல்லா தேசங்களிலும் நடந்திருக்கிறது. எல்லா மக்களையும் துயர் கொள்ள வைத்திருக்கிறது. ஈழ மண்ணிலும் நடந்திருக்கிறது. அவைகளை இவரது எழுத்துக்களில் பார்க்கும் போது அனுபவித்த வலி புதுப்பிக்கப் படுகிறது. இதுவே இவரது எழுத்தின் பலம் எனலாம்.

சமகால நிகழ்வுகளை எழுத்துக்களாக பதிவு செய்வதாகட்டும் இந்த சமூகத்துக்கு தன்னாலான மனிதாபிமான சேவைகளைச் செய்வதாகட்டும் தன்னை ஒரு சமூக நேசிப்பாளராக அடையாளம் காட்டும் ஐங்கரன் பல பேருக்கு முன் மாதிரியாகத் திகழ்கிறார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**சமகால வாழ்வின் தரிசனங்கள்:**

இவரை அசுரவேக எழுத்தாளர் என்று குறிப்பிடுவதிலும் தவறு ஏதும் இல்லை. யந்திரமயமான இன்றைய வாழ்வுக்குள் நேரத்தை தேடி எடுப்பது என்பது எத்தனை சிரமம். அப்படி எடுக்கும் நேரத்துக்குள் இப்படி தொடர்ச்சியாக எழுதுவதற்கு எவ்வளவு உழைப்பைக் கொட்ட வேண்டியிருக்கும். அதை மிகுந்த விருப்போடு செய்யவும் எத்தனை ஆர்வம் இருக்க வேண்டும். இவருக்குள் இருக்கும் ஆர்வமே இவரை தொடர்ச்சியாக எழுத வைக்கிறது. சமூகத்துக்கான இவரது முன்னெடுப்பு பாராட்டுதற்குரியது.

அவரது எழுத்துக்கள் இன்றைய காலத்தின் வெட்டுமுகம். இன்றைய வாழ்வின் ஆவணங்கள். எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கப் போகின்ற சமகால வாழ்வின் தரிசனங்கள். இவரது எழுத்து எம் சமூகத்திற்கானது. அதை அவர் தொடர்ந்தும் செய்ய வேண்டும்.

# அடுத்த கட்டப் போர்

- கந்தர்மடம் அ.அஜந்தன் -



காலை தன் மகன் கேட்ட கேள்விகள் ஏற்படுத்திய வலியை கயல்விழியால் தாங்கிக் முடியவில்லை. நான் எப்படி இதனை அவனுக்கு புரிய வைப்பது? இத்தனை நாளும் நான் உண்மையை மறைத்து அவனுக்கு நிழலுருவாய் காண்பித்துக்கொண்டிருக்கும் தந்தையை எப்படி நான் நிஜமாகக் காண்பிப்பது?. இன்னும் எத்தனை நாளுக்குத்தான் இந்த நாடகம் என்று தனக்குள் நொந்து கொண்டாள். அன்று அவளுக்கு வேலை ஓடவில்லை. அங்குமிங்குமாய் அலைந்து திரிந்தாள். மாமாவும் மாமியும் அவளை ஆறுதற்படுத்த முயன்று தோற்றுவிட்டனர். விடை தெரியாத வினாக்களின் வலியை அவர்களும் உணர்வர்.

கயல்விழி பத்திரப்படுத்தி வைத்த பாதி எரிந்த புகைப்படத்தினை உற்றுப் பார்த்தபடி முற்றத்து மாமரத்தடியில் அமர்ந்திருந்தாள். எப்பொழுதும் தன் கடந்த காலத்தை இரைமீட்பது இந்த மாமரத்தடியில்தான். அதற்கு ஒரு காரணமும் உண்டு. அவளது கணவன் மாறன் ஒரு இயற்கை விரும்பி. மரம் வளர்ப்பதில் சிறுவயதிலிருந்தே நாட்டம் உள்ளவர். வீட்டில் நிற்கும் அனேக மரங்கள் அவர் நட்டவைதான். இந்த மாமரமும் அவர்களது திருமண நாளில் நாட்டப்பட்டதுதான். அரைகுறையான அந்தப் புகைப்படமும் அந்த மாமர நிழலும் கயல்விழியின் வாழ்வின் நினைவுகளை பின்னோக்கி நகர்த்தியது.

யுத்தம் நிறைவுபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தாமாகவந்து சரணடையுமாறு அறிவுறுத்தப்பட்டதாலும், அவர்களின் உயிருக்கு உத்தரவாதம் தருவதாக வாக்குறுதி வழங்கியதாலும் மக்கள் தமது பிள்ளைகளை, கணவரை, சகோதரர்களை ஒப்படைத்தனர். கயல்விழிக்கு அச்சம் தொற்றியது யாராவது என் கணவரைக் காட்டிக்கொடுத்தால் கொன்றுவிடுவார்களே. ஆனால் நாமாக ஒப்படைத்தால் மன்னித்து விடுவார்கள். என்று எண்ணிக்கொண்டு தன் கணவரை சரணடையுமாறு கேட்டுக்கொண்டாள். மாறன் மறுத்துவிட்டான். அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள் என்று அஞ்சினான்.

“நான் என்ன உங்களை கொல்லச் சொல்லியா ஒப்படைக்கப்போகின்றேன் ?. நாமாகச் சரணடைந்தால் உங்களை உயிருடன் விட்டு விடுவார்கள். அதுவும் எமக்குக் கைக்குழந்தையும் இருக்கிறது எனவே குழந்தையோடு சென்று சரணடைவோம், நீங்கள் முழு நேரமும் போராளியாகச் செயற்படவில்லை என்பதால் கண்டிப்பாக மன்னிப்பர்”என்றாள்.

ஒப்படைப்பதற்கு ஆரம்பத்தில் மாறனின் பெற்றோர்விரும்பாத போதும், உள்மனதில் அச்சமிருந்தும் கயல்விழி சொல்வது சரி என்ற முடிவிற்கு வந்தனர்.

பெற்றோரின் வற்புறுத்தலிலும் மனைவியின் வற்புறுத்தலிலும் மாறன் சரணடையச்சம்மதித்தான்.

உள்ளுக்குள் அச்சம் குடிகொண்டிருந்தபோதும் எங்கோ மூலையில் எதுவும் நடக்காது என்ற நம்பிக்கைக் கீற்றின் வழி முடிவெடுத்துவிட்டாள். கைக்குழந்தையையும் தூக்கிக்கொண்டு மாறனின் தந்தையின் துணையோடு தன் கணவரை ஒப்படைத்தாள். பதிவுகள் முடிந்தபின் விட்டுவிடுவார்கள் என்று நம்பிக் காத்திருந்தாள். பதட்டமும் பரிதவிப்பும் அவளை ஆட்கொண்டிருந்தது. பதிவு முடிந்ததும் அவர்களை வரிசையாக ஒரு வாகனத்தில் ஏற்றமுற்பட்டனர். குழந்தையோடு அழுதுபுலம்பினாள். மாறனை விட்டுவிடுமாறு கதறினாள். விசாரணையின் பின் விடுவதாகக் கூறினார்கள். அவளது நம்பிக்கையின் அத்திபாரத்தில் விரிசல் விழுந்தது. அச்சத்தோடு குற்றவுணர்வும் அவளுக்குள் குடிகொண்டது. மாறன் பார்வையிலிருந்து அகலும் வரை கண்ணீர் மல்கப் பார்த்திருந்தாள். அவன் பார்வையிலிருந்து மறைந்தான். பூமி காலடியில் நழுவுவதுபோல் உணர்ந்தாள். தன் மாமனைப் பார்த்தாள். ஏக்கத்தோடும் கண்ணீரோடும் மாறனைக் கொண்டுசென்ற வழியை நோக்கித் தரித்திருந்தது அவர் பார்வை.

தன்னை மன்னிக்கும்படி மாமனின் காலில் விழுந்து அழுதாள். மருமகளை ஆதரவாக தூக்கி.

“நீ நன்மை நிகழும் என்டு நினைச்சுச் செய்தாய் பயப்பிடாதை. அவன் விசாரணை முடிய வருவான். பிள்ளையை அதிகநேரம் வெயிலில் வைத்திருக்க வேண்டாம்” என்று அழைத்துச்சென்றுவிட்டார்.

நாட்கள் மாதங்களாகவும் வருடங்களாகவும் உருண்டோடியது. அதன் அடியில் சிக்குண்டவளாய் கயல்விழி அவன் நினைவால் துடித்தாள். தன் குழந்தையின் அசைவையும், அழகையும், குறும்பையும் இரசிக்க

முடியாத தாயாகிப்போனாள். காலம் செல்லச்செல்ல எதிர்பார்ப்புக்கள் கரையத் தொடங்கின. தன்னையே நம்பியிருக்கும் மகன்மீது தன் கவனத்தைத் திருப்பத் தொடங்கினாள். இடைப்பட்ட காலத்தில் அவளுக்கு ஆறுதல் அளிப்பது அவளது மகன் கீர்த்தனன் தான். அவளுக்கு எல்லாமாக அவள் மகனே தென்பட்டான். தன் தந்தைக்கு நிகந்த துன்பியல் சம்பவத்தை மகனிடம் மறைத்தாள். அவன் வளர்ந்து கதைக்க ஆரம்பிக்கும் போது மாறன் வெளிநாட்டில் இருப்பதாக நம்ப வைத்திருந்தாள்.

ஒரு தாயாய் அந்தப் பிஞ்சுக் குழந்தைக்கு வேறு எதைச் சொல்வது என்று புரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டார் என்றால் பிஞ்சுக் குழந்தைக்குப் புரியுமா?,

இறுதிப் போரின் உக்கிரத்தை வர்ணிக்க முடியுமா?

ஆண்டுகள் பலவற்றைத் தாண்டிவிட்டதால் இறந்துவிட்டாரென்று கூற மனம் சம்மதிக்குமா? அல்லது எந்த நம்பிக்கையில் அவர் வருவார் என்று கூறுவது?.

இப்படிப் பல கேள்விக்கணைகளால் தன்னைத் தானே துளைத்துக்கொண்டாள். இறுதியாக எடுத்த தற்காலிக முடிவுதான் தந்தை வெளிநாட்டில் இருப்ப தாகக் கூறப்பட்ட பொய்.

ஒருமுறை கீர்த்தனனின் நண்பன் ஒருவன் தனது தந்தை வெளிநாட்டிலிருந்து அனுப்பியதாக ஒரு கடிகாரத்தை புத்தகப் பைக்குள் இருந்து எடுத்துக் காண்பித்தான். அன்றே தன் தாயிடம் அப்பாவிடம் தனக்கும் ஒரு கடிகாரத்தை அனுப்புமாறு சொல்லும் படி கேட்டுக்கொண்டான். இதனை தனது மாமனிடம் கூறி அழுதாள் கயல்விழி. மாமாவுக்குத் தன் பேரனின் பிடிவாதம் தெரியும். அது பிடிவாதம் என்பதை விட தந்தையிடம் பொருள் கேட்கும் உரிமையை யாராலும் மறுக்கமுடியாது என்பதையும் ஒரு தந்தையாக புரிந்துகொண்டார். சொன்ன பொய்யை தொடர்வதில் பல சிரமங்கள் வரும். அதில் ஒன்றுதான் மறந்தும் யதார்த்தம்போல் நடிப்பதைக் கைவிடாதிருப்பது. எனவே உடனே வாங்கிக் கொடுக்காமல் ஒரு கிழமை கழித்து "உன் நண்பனிடம் காட்டு" என்று ஒரு சிறந்த புதிய கைக்கடிகாரத்தை பொதிசெய்து கொடுத்தார்கள். அவனுக்கு அது அளவற்ற மகிழ்வைத்தந்தது. ஆனால் கயல்விழிக்கு தினமும் அச்சத்தையே அவனது கதைகள் ஏற்படுத்தின.

அவ்வாறான சூழலிற்தான் அவன் காலை தாயிடம் சில கேள்விகளைக் கேட்டான்.

"என் நண்பனின் அப்பா அடிக்கடி அவனோட போனில கதைக்கிறார். ஏன் என்ர அப்பா என்னோடை கதைக்கிறதில்லை ?"

"அவருக்கு என்னில கோபமா? அல்லது என்னை மறந்துட்டாரா?"

"உங்களோடை கதைக்கிறவரோ?"

இடைவிடாத எறிகணைகளுக்கு நடுவில் வாழ்வைக் கடந்தவளுக்கு இந்தக் கேள்விகளைக் கடப்பது கடினமாகவே இருந்தது. தான் சொன்ன பொய்யின் தாக்கம் உணரப்படும் தருணமாகவே இத்தருணத்தை அவள் உணர்ந்தாள். பதில் கண்களில் கண்ணீராகக் கசியத் தொடங்கியது. அதற்குள் மாமா சுதாகரித்துக்கொண்டார்.

"அப்பிடியொண்டுமில்லைத் தம்பி எங்கடை நேரத்துக்கும் அவையளின்ர நேரத்துக்கும் வித்தியாசம் இருக்கு. நீங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போனபிறகுதான் அவைக்கு விடியும். நீங்கள் வீட்டுக்கு வருகிற நேரம் அவருக்கு வேலை தொடங்கும் அதுதான் கதைக்க நேரமில்லாமல் போட்டுது." என்று சமாளித்தார்.

"அப்படியென்டா நான் இண்டைக்கு பள்ளிக் கூடத்துக்கு போகாமல் லீவு போடுறன். அப்ப அப்பா வோட கதைக்கலாம்தானே?" இன்று எப்படியாவது கதைத்துவிடவேண்டும் என்பதில் அவன் விடாப்பிடி யாக நின்றான்.

"இல்லை நீங்கள் பள்ளிக்கூடத்துப் போங்கோ நான் அப்பாவ லீவு போடச் சொல்லிறன் பின்னேரம் கதைப்பம்" என்று வந்த அழுகையை அடக்கிக் கொண்டு சொன்னாள் கயல்விழி.

பாடசாலை முடிந்ததும் அப்பாவோடு கதைத்து விடுவேன் என்ற மகிழ்வில் பாடசாலைக்குச் செல்லச் சம்மதித்தான்.

"நான் என்ர பிரண்டுக்குச் சொல்லவேணுமம்மா அவன்தான் கிண்டலடிக்கிறவன்" என்று கூறிக் கொண்டே பெருமகிழ்ச்சியோடு புறப்பட்டான்.

அவன் வரும்போது எதைச் சொல்லி அவனை சமாதானப்படுத்துவது?,

தந்தை ஒரு தேசப்பற்றுள்ளவர் என்று சொல்வதா?

தோற்றுப்போன ஒரு இனத்தின் அபராதமாக உன் அப்பாவையே வென்றவர்களுக்குக் கொடுத்து விட்டேன் என்று சொல்வதா?

உயிரைப் பாதுகாக்க சரணடைந்த முன்னாள் வீரன் என்று சொல்வதா?

விசாரணையின் பின் விட்டுவிடுவார்கள் என்று நம்பிய என் முட்டாள்த்தனத்தால்தான் அப்பாவைத் தொலைத்தேன் என்று சொல்வதா?

இவற்றைச் சொன்னால் தன் தந்தையின் வீரத்தைப் பார்ப்பானா அல்லது என்னைக் குற்றவாளி யாகப் பார்ப்பானா?

நான் உண்மையை மறைத்ததால் என்னை அவன் வெறுத்துவிட்டால் என்ன செய்வது?

அவனையே உலகமென்று நினைத்து வாழும் என் நிலை என்னவாகும்?

எத்தனை இரவுகள் மாறன் சரணடைய மறுத்த காட்சி என் கனவில் வந்திருக்கும்? அப்பொழுதெல்லாம் நான் குற்றவுணர்வில் பட்ட துன்பத்தை என்மகன் விளங்கிக்கொள்வானா?....

கேள்விகளால் நிறைந்திருந்த அவளது சிந்தனையை ஊடறுத்துக்கேட்டது வாயிற்கதவு திறக்கும் சத்தம்.

முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம், மூன்றாம் கட்டமென்று நகர்ந்த போரின் அடுத்த கட்டப் போர் மனப்போராட்டமாக அவள்முன் நின்றது.

அந்தப் பாசப் போர்க்களத்தை எதிர்கொள்ள அவள் தயாரானாள்.

# "தண்பதப் பெருவழி" சோலைக்குயில்களின் கதைகள் வாசிப்பனுபவம்

வசந்தி தயாபரன்




பெருவழிகளை அவற்றின் இயல்பின் அடிப்படையில் "செந்நிலப் பெருவழி" எனவும் "தண்பதப் பெருவழி" எனவும் சங்க இலக்கியம் வகுத்துக்கூறுகிறது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த "அதியமான் பெருவழிக்கற்கள்" இரண்டு தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன என்பது இன்றைய தொல்லியலாளர் கூறும் செய்தி. பண்டைப் பெருமை மிக்க "பெருவழி" எனும் அப்பதத்தை இன்றைய "நெடுஞ்சாலை" என்ற அடையாளத்துடன் நாம் பொருத்திப் பார்க்கலாம்.

"தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழி" என்பது சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் எமக்குக் காட்டுகின்ற கவின்மிகு காட்சி. பிரிவுத்துயரால் வாடியிருக்கும் தனது தலைவியைக் காணவென, "தளவுப்பிணி அவிழ்ந்த தண்பதப் பெருவழி"யில் வேகமாகச் செல்லும் முல்லைப்பாட்டின் தலைவனின் உருவமும் எம் அகத்தில் தோன்றுகிறது.

சோலையில் தமது இச்சைப்படி இசை பாடும் குயில்கள் என்றுமே எம்மை மகிழ்விப்பன. இன்று இந்த சோலைக்குயில்களுக்கெனவே உருவாக்கப்பட்டுள்ள "தண்பதப் பெருவழி" என்ற கதைத்தோப்பிலும், அவை சுதந்திரமாகப் பாடிக்களிக்கின்றன. தண்பதமாம் புதுப்புனலில் மூழ்கிக்குளித்துத் திளைக்கின்றன. இந்நூலின் தலைப்பு இந்தப் புதிய காட்சியினை எம்முன் விரியச் செய்கிறது. இந்நூல் ஜீவநதியினதும் சோலைக்குயில் அவைக்காற்றுக்களத்தினதும் இணைமுயற்சியில் 2024 ஆனி மாதத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

குயில்களின் அரங்கத்துக்குள் நுழைவதற்கு "முன்வழி" என்று ஒன்றை இந்நூலின் தொகுப்பாளரும் பதிப்பாளருமாகிய கோகிலா மகேந்திரன் இணைத்துள்ளார். அதிலே கோகிலா கூறுகின்றபடி, "பழைய குயில்கள், புதிய குயில்கள், புலம்பெயர்ந்த குயில்கள்" என இருபத்திரண்டு குயில்கள் இத்தோப்பில் கூவித்திரிகின்றன. ஆறு கதைகள் ஆண்களால் எழுதப்பட்டவை. ஏனையவை பெண்களுடையவை. உலகு குறித்தும் மனிதர்கள் குறித்தும் அவரவருக்கே உரிய பார்வையைப் பதிவு செய்வன வாக, அப்படைப்புகள் அமைந்து விடுகின்றன. எனினும் குயில் கூட்டத்துக்கே உரிய பொதுப்பண்பு ஒன்று எல்லாக்கதைகளிலும் இழை யோடத்தான் செய்கிறது.

இப்பெருவழியில் சிறகடித்துப் பறக்கின்ற எழுத்தாளர்களுக்கு வண்ணங்கள் பற்பல. அட்டைப்படம் சுட்டுவதும் அதுவே என நம்புகிறேன். இவர்களிற் பலர், படைப்பாளிகள் என்ற அடையாளத்தைச் சுமப்பவர்கள் அல்லர். வெறும் நுகர்வுக்கானதாக அல்லது பொழுதுபோக்குக்கானதாக அன்றி, அவர்கள் தமது அகத்தைத் திறந்து காட்டுவதற்கான ஓர் அரிய வாய்ப்பாக இத்தொகுப்பைப் பயன்படுத்திக் கொண்டவர்கள். வாசகரின் மனதைத் தொட்டும் சீண்டியும் அவர்தம் மனச்சாட்சியை விழித்தெழச் செய்கின்ற சில கதைகள், மனிதனின் இருப்பு தொடர்பான ஆழமான சிந்தனையைத் தூண்டும் வேறு சில கதைகள், அபத்தங்களின் நடுவே வாழ்தலின் நெருடல் பற்றிய இன்னும் சில கதைகள் என இத்தொகுதி கதம்பமாகச் சிறப்புறுகிறது. இப் பன்முகத்தன்மை, ஒவ்வொரு எழுத் தாளருக்கும் ஒரு தனித்துவமான அடையாளத்தையும் பெற்றுத் தந்து விடுகிறது.

இத்தொகுதியில் எழுதியுள்ள பலரும், சோலைக்குயில் அவைக் காற்றுக் களத்தினரினால் நடத்தப் படும், உளநலம் குறித்த கற்கைநெறி யில் இணைந்துகொண்டவர்களாக இருக்கலாம் என்பது எனது புரிதல். அவர்தம் சிந்தனைத்தடம், சமூகத் தில் எதிர்ப்படும் மனிதரது நடத்தைக் கோலங்கள் தொடர்பான பகுப் பாய்வுக்கும் புரிதலுக்கும் பயிற்றப் பட்டது. எனவே, அவர்களால் பின்னப்படுகின்ற கதைகள் ஏதோ ஒரு வகையில் எம்மைத் தொடர்ந்து இடர்ப்படுத்தும் சிக்கல்களை விடுவிப் பதற்கான வாசல்களைச் சுட்டுவன. அக்கருத்தினை கோடிட்டுக் காட்டு கின்ற கதைத் தலைப்புகள் சில வற்றை இங்கு குறிப்பிடலாம். "உண்மை உணரப்படும் வரை பொய் தான்", "தண்மை", "விலகும் மூட்டம்", "ஒத்துணர்வு", முதலியன அவற்றில் சிலவாகும்.

முதலாவதாக இடம்பிடித் திருக்கும் கோகிலா மகேந்திரனின் கதையான "வைரஸ் ஒன்றின் வாக்குமூலம்" தாய்க்குயிலின் குரல்!

தனித்துவமான குரல்! கோகிலா, நாடறிந்த எழுத்தாளர், பல தசாப்தங்களாக எழுத்தைத் தனது குரலாக வரித்துக் கொண்டவர் என்ற வகையில், அவரது கதை குறித்த நுணுக்கமான விபரிப்பு இங்கு அவசியமற்றது என நான் நம்புகிறேன்.

இ.புஷ்பா எழுதிய "பார்வைகள்" கதையும், ராஜி கங்காதரனது "நெருஞ்சி முள்" கதையும் எமக்கு சுட்டுகின்ற செய்தி ஒன்றே. "சின்னப் பிள்ளைகள் அப்பா அம்மாவோட இருக்கத்தான் விரும்புவினம்" என்பதே அது! ஆனால், கதைக்களம். சம்பவம் நிகழும் காலம், கதாபாத்திரங்கள், வித்தியாசமான உத்திகள் என முற்றிலும் வேறுபட்ட தளங்களில் அது ஆராயப்படு கிறது. "பார்வைகள்" கதையில், குடும்பத்தைப் பிரிந்து வாழ்கின்ற தன் ஏக்கத்தை ஓவியமாக வெளிப்படுத்தும் பதின்ம வயதுச் சிறுவன், அதைப் புரிந்துகொள்ளும் உளநல அருட்டுணர்வுள்ள ஆசிரியை, அம்மாவுடன் மனந்திறந்து பேசும் வாய்ப்புப்பெற்ற இன்றைய சிறுவன், அவனது உணர்வினைப் புரிந்துகொண்டு முடிவெடுக் கும் அம்மா என அவர்கள் இருபத்தோராம் நூற்றாண் டின் சிந்தனைப்பாதையில் நடைபோடுகிறார்கள்.

"நெருஞ்சி முள்" கதையில் காட்டப்படும் கதாபாத்திரங்களோ வெவ்வேறு தலைமுறைகளைப் பிரதிநிதிப்படுத்துபவர்கள்! எண்பதுகளில் போர்ச்சூழல் தந்த நெருக்கடியால் மனம் ஒப்பாமலே பதின்ம வயது மகளை வெளிநாட்டில் கல்விகற்க அனுப்பிவிட்டு, வாழ்க்கை முழுவதும் பாசச்சுமையைத் தாங்கி நடந்த ஒரு தாய், இன்று வெளிநாட்டில், தனது மகள் பேரப் பிள்ளையை நெறிப்படுத்தும் சாதுரியத்தைக் கண்டு, "எங்கள் காலத்தில் இதொன்றும் எங்களுக்குத் தெரியாது... இப்போதெல்லாம் பிள்ளை பிறக்க முதலே அவர்களை வளர்ப்பது பற்றிச் சொல்லிக் கொடுக் கிறார்கள்..குறிப்பாக வெளிநாடுகளில்" என்று அப்பாவித் தனமாக எண்ணுகின்றபோது, கடந்த தலைமுறையின் குறியீடாக அவர் கச்சிதமாக வார்க்கப்பட்டிருக்கிறார். இன்று அவர் பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி மகிழ்கின்ற வயதிலே "அம்மா எனக்குக் கோபம் கூடக்கூட வருகுது... மற்றவையோட அன்பு காட்டிப் பழக முடியேல்லை...என்னால என்னைப் புரிஞ்சு கொள்ள முடியேல்லை... சின்ன வயதில பெற்றோரைப் பிரிந்து மற்றவையோட வாழ்ந்ததும் இதுக்குக் காரணமாக இருக்கலாம் எண்டு கவுன்சிலர் சொல்லுறார்..." என்று மகள் "வெப்பிசாரத்துடன்" சொல்வதைக் கேட்டு அம்மா அதிர்கிறார். மகளின் உளவடு, தாயின் இதயத்துள் இடம் மாறிப்புக்கு, குற்ற உணர்வாகக் குடிகொள்கிறது! சூழல் விதித்த நிர்ப்பந்தங்களால் அன்று எடுத்த முடிவு தவறோ என்று மனம் பதைக்கிறது. இக்கதை. ஆழமான உளவியல் நெருக்கடியைப் பேசுகிறது. "நெருஞ்சி முட்களின் மேல் இதயம் கழன்று விழுந்தது.... பிழை செய்தோமோ..." என்ற தாயின் வார்த்தைகள் வெளிப் படுத்தும் வலி எம்மையும் முள்ளாகத் தைக்கிறது. இதற்கு என்ன மாற்று என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

எக்காலத்துக்கும் சாசுவதமான கதைக்கருக் களில் ஒன்றுதான் பெண் பற்றிய சமூகத்தின் வக்கிரப்பார்வை. அதை ஒட்டியதாக, சில கதைகளைக் காணலாம். ஒருபுறம், "சுகமான சுமைகள்" கதையில் தியாகதீபமான பெண்ணைக் காண்பிக்கும் பாகீரதி கணேசதுரை! இன்னொருபுறம், "விடியலைத் தேடி"யில் ஏழைப்பெண்ணை கொத்தடிமையாக நடத்தும் புகுந்த வீட்டாருக்குப் பாடம் புகட்டும் பெண்ணைக் காட்டும் கௌதீதகி ஜசிதரன்! சமூகத்தின் வெவ்வேறு மனிதர் களுக்கு, வெவ்வெறு சூழ்நிலைகளில் எதுதான் பொருத்தமான வழி? அடித்துத் திருத்துவதா அல்லது விட்டுக்கொடுத்துத் திருத்துவதா? அடிப்படை மனப் பாங்கு மாற்றம் நிகழும்வரை எதுதான் சரி? விசனத்தை யும் கேள்விகளையும் எழுப்பும் கதைகள்! இவ்வரிசை யில் "நெருங்கினால் நெருப்பு" "உண்மை உணரப்படும் வரை பொய்தான்" என்ற கதைகளும் சமூகத்தைச் சாடுவனவே.

இந்த ஏக்கத்துக்கு மாற்றாக, எழுத்தாளர் கந்தர்மடம் அஜந்தன், "ஒத்துணர்வு" என்ற தனது படைப்பில், "பெண் என்ற ஒத்துணர்வு" ஒன்றின் முன்னால், மொழி, இனம் என்ற சமூகக் கட்டமைப்புகள் குறுக்கிட முடியாது என்ற வாதத்தை முன்வைக்கிறார். கதைக்கரு யதார்த்த உலகைச்சுற்றி செழுமையாகப் பின்னப்பட்டுள்ளது. வாமதேவன் வலவன் எழுதியுள்ள "வாழ்வும் வாழும்" கதையானது, தனது தலைப்பு, சொல்முறை என்பவற்றால் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. ஒரு காதல் கதைக்குள் இன்றைய தொழினுட்ப உலகத்தின் வாழ்வியலையும் மனித உணர்வுகளில் நுகர்வுக் கலாசாரத்தின் தாக்கம் உள்ளிட்ட நவீன விடயங்களையும் கொண்டுவர முயற்சித்துள்ளார். அதனால் கதை தவிர்க்க முடியாதபடி அதிக பக்கங்களை எடுத்துக்கொண்டதோ! அஜந்தன், வலவன் இருவரது கதைகளிலும், உலகளாவிய மாற்றங்கள் எல்லாமே ஏதோ ஒரு வடிவில் பெண்களின் பிரச்சினைகளாகவே உருமாறுகின்றன என்ற கொடுமையான உண்மை அழுத்திக் கூறப் படுகிறது.

அன்புக்குரியோரின் இழப்பினை ஏற்றுக் கொள்ளலும் அத்துயரைக் கடந்து வருதலும் இலேசான விடயங்களல்ல! தந்தையின் இழப்பினால் துவள்கின்ற மனதுக்கு இசை எப்பேர்ப்பட்ட அருமருந்து எனற அறிவியல் உண்மையை உணர்வுபூர்வமாக வடித் துள்ளவை, சதீஷ் பாலமுருகனின் "திருப்பம்", நளாயினி யின் "வீணை" எனும் கதைகள். தந்தை இல்லாத குடும்பத்தில் கட்டுக்கோப்புக் குலைவதையும், கூடா நட்பால் பிள்ளைகள் போதைக்குள் விழுவதையும், பெண்தலைமைத்துவப் பொறுப்பை சரிவர நிறைவேற்ற முடியாத நிலையில், தாயின் உயிர் பிரிவதையும் உருக்கமாக எடுத்துச் சொல்லும் கதை, சங்கமித்தா ஜெயக்குமாரின் "விழிப்பு".

சிவதர்சனின் "நெஞ்சம் துடித்ததடி" கதை, ஒரு வைத்தியசாலையின் சட்டதிட்டங்கள் ஏழைக்கும் பணக்காரனுக்கும் இருவேறு விதமாக நடைமுறைப்

படுத்தப்படுவதால் நோயாளியின் நோய்க்கூறுகளுடன் மன உளைச்சலும் சேர்ந்து கொள்வதை அறச் சீற்றத்துடன் கூறுகிறது. கிருஷாந்த் எழுதியுள்ள "கிராம லயம்" கதையில், கிராமிய வாழ்வுடன் ஒன்றி, அதனை இரசித்து வாழ்ந்த பசுமையான நினைவுகள், இன்று நினைவுகளாகவே நின்றுவிட்டதன் மனஅழுத்தம் ஆழ ஊடுருவியுள்ளது. "மனிதர்கள்மேல் அன்பு செலுத்தவும் அக்கறைப்படவும் உதவி செய்யவும் தேவையான வாழ்வியலைக் கற்றுக்கொண்ட இடமாக செம்புழுதித் தெருக்கள்தான் இருந்தன..." என்ற வரிகள் இன்று ஒட்டுமொத்த மனித சமூகமும் எவற்றையெல்லாம் இழந்து நிற்கிறது என இடித்துரைக்கிறது. ஏக்கமும் துயரும் நிராசையும் எம்மைச் சூழ்ந்து கொள்கின்றன!

மாணவரின் உளநலத்தை மேம்படுத்துதலின் வழி, அவர்களை ஊக்கப்படுத்தவும் உயர்ந்த கல்வி அடைவு மட்டங்களை நோக்கி இட்டுச்செல்லவும் முடியும் என்ற உண்மையைக் கூறும் கதைகளின் வரிசையில், ஆசிரியரின் வகிபாகத்தைப் பேசும் "தண்மை", "மாற்றம்" என்ற கதைகள், தந்தை மகன் இடையேயான புரிதலின் போதாமை பற்றிப் பேசும் "உறவுகள்" கதை என்பன குறிப்பிடத்தக்கவை. அவ்வாறே, தாயின் புரிதலும் அரவணைப்பும் மனந் திறந்த உரையாடலும்கூட பிள்ளையின் மனக்குழப்பங் களுக்கு மருந்தாகலாம் என்பதை "விலகும் மூட்டம்" வழியே வானதி காண்டீபன் மென்மையாகக் காட்டிச் செல்கிறார்.

மரம் நாட்டல், உயிர்ப்பல்வகைமை, சூழல் பாதுகாப்பு என்பவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கதைகள் இத்தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கருத்தியல் பற்றிய பரப்புரை இன்றைய முக்கிய தேவையாக உள்ளது. நாம் நன்கறிந்த, தலவிருட்ச வழிபாடு என்ற வழக்கின் தோற்றுவாய் எதுவாக இருக்கும் என்ற தேடலுக்குள் நம்மிற் பலர் நுழைவ தில்லை. அமெரிக்கப் பழங்குடிகளால் புனிதமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்ட, கலிபோர்னியாவின் புகழ்பெற்ற "றெட்வூட்ஸ்" வனப்பகுதி உலகிலே மிகச் சிறப்பான வனம் என்ற தகைமையைப் பெற்றுள்ளது என அறிந்து கொள்வதிலும் நாம் ஆர்வம் காட்டுவதில்லை. அவ்வனம், மிகப்பழமையான மரங்களையும், முக்கிய மான நீர்நிலைகளையும் கொண்டுள்ளது, அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள் பலவற்றின் காப்பிடமாக வும் உள்ளது, ஈராயிரம் ஆண்டு வயதுள்ள மரம் இன்றும் வாழ்கின்றது, அண்மையில், அதன் 500 ஏக்கர் பரப்பளவை, அரசாங்கம் மீண்டும் அதன் பண்டைய காவலர்களான பழங்குடியினர்வசம் ஒப்படைத்துள்ளது முதலிய தகவல்கள், எமது பார்வைப் புலத்தை அகட்ட வல்லன! அறிவூட்டுவன! "துளசி வேம்பு", "விருட்ச தேவதை" இரண்டுமே இவை குறித்த கரிசனையையும் உளப்பாங்கு மாற்றத்தையும் ஏற்படுத்த முயல்வன. "விருட்ச தேவதை" யின் எடுத்துச்சொல்லல் முறை, தொகுப்பாளர் கோகிலா மகேந்திரனின் பாணியை நினைவுபடுத்துகிறது!

"மனப்பாங்கு" என்ற கடுகுக் கதையை தமிழினி பாலசுந்தரி தந்துள்ளார். அது, ஏனையவற்றிலிருந்து வேறுபட்ட உருவில் மனதை "சிக்" கெனக் கௌவிப் பிடித்தது! கடுகுக்குள் காரம் செறிவாகவே இருந்தது. "மாயை"யை ஆன்மிகவாதிகளும் உளவியலாளர்களும் தத்தமக்கே உரிய தளங்களில் நின்று ஆராய்கிறார்கள். பாரதி, தனது "காலமாம் வனம்" கவிதையில், "இதெல்லாம் அவள் புரியும் மாயை" என அற்புதமாகப் பாடுவான். கதாசிரியர் திவா தனது புனைவில் எளிய நடையில், இரசிக்கத்தக்க வகையில் அதனைக் கையாண்டுள்ளார்.

கதைகளின் கருப்பொருள் வேறுபடினும், ஏற்கனவே கூறியதுபோன்று, அவற்றின் ஊடுபாவாக மனிதமனமும் அதன் திரிபுகளும் விளைவுகளும் ஆராயப்படுகின்றன. தீர்வுகள் எழுத்தாளரின் கண்ணோட்டத்தில் முன்மொழியப்படுகின்றன. அல்லாதவிடத்து. வாசகரிடம் அவை பற்றிய சிந்தனை யையாவது எழுப்பிவிடுகின்றன. இயற்கையுடன் கைகோர்த்து நடப்போர், கனதியான சொற்களால் வியக்க வைப்போர், நெஞ்சை நெகிழ வைப்போர் என, இக்கதைகளில், ஒவ்வொருவரும் தத்தமக்கே உரிய ஓர் அடையாளத்தைப் பதித்துள்ளனர் என்பதில் ஐய மில்லை. ஒருவிதத்தில் கோகிலா அவர்கள் கூறுகின்ற "வாசிப்புச் சிகிச்சை"யும், உள உணர்வு நலத்திலான மேம்படுத்தலும் இங்கு நடந்தேறுகின்றன. எழுத்தாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம், கதைகளின்வழி புலனாகிறது. தொகுப்பாளர், தனது எல்லையை சரியாகவே வகுத்துக்கொண்டுள்ளார். எனினும். சில கதைகளின் வடிவமைப்பில் மட்டுமாவது, அவரது செவ்விதாக்கம் துணைபோயிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

தனிமனிதனின் உளச்சிக்கல்கள், அவன் சார்ந்த சமூகத்தின் கட்டமைப்பில் இடரைத் தோற்றுவிப்பதும், மறுதலையாக, சமூகத்தின் மனப்பிறழ்வின் கூட்டு விளைவான நடவடிக்கைகள் மனிதனின் நடத்தைக் கோலங்களில் செல்வாக்குச் செலுத்துவதும் சங்கிலித் தொடரான நிகழ்வுகள்! இக்கதைகள், இவ்விரண்டு நிலை களையும் சுட்டிக்காட்டுவன. பல கதைகளில், அன்புக் காக ஏங்கும் இதயங்களும், ஆதரவான தோளைத் தேடும் சீவன்களும், புரிதல் இல்லாத வாழ்க்கையை தீவிர உளவடுக்களுடன் சுமப்பவர்களும் முகங்காட்டு கிறார்கள். இருப்பினும், மனவிகாரம் முற்றிய இன்றைய சமூகத்தில், பெண்ணை தியாகத்தின் உருவாகக் காண்பித்தல் என்பது, ஒரு கோட்பாட்டு வெளிப்பாடாக மட்டுமே நின்றுவிடலாம் என்பது எனது மனக்கணிப்பு.

ஓரிருவரைத் தவிர இத்தொகுதியின் எழுத்தாளர் கள் பலரும் முதல் முதலாக எழுத வந்தவர்கள், என்ற வகையில், தமக்கான படைப்பாக்கத் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர் என்றே கூறத் தோன்றுகிறது. அவர்களை மேலும் உற்சாகமூட்டுவதும் எமது கடமையாகிறது. குயில்கள் குதூகலிக்கலாம்! புதுப்புனலில் தொடர்ந்தும் முங்கி எழலாம்!

# கன்னித்தாய்



ஸ்ரீரங்கன்

அம்மா... கீதாம்மா... என்று அவள் கூப்பிட்ட சத்தத்திற்கு கூண்டுக்குள் நின்ற நாய்கள் குரைத்தன. பாடசாலை செல்வதற்காக ஆயத்த மாகிக் கொண்டிருந்த கீதாம்பிகை ஜன்னல் வழியாக இவளைக் கண்டதும்

"நீ அங்கேயே நில்.. நான் கதவைத் திறக்க மாட்டன். இனி உனக்கு இங்க வேலை இல்லை"

என்றாள் கோபமாக.

"இந்த ஒரு தடவை என்னை மன்னிச்சு கொள்ளுங்கம்மா. என்ர மூத்த மகளின் பிள்ளைப் பெத்துக்காகத் தான் நான் லீவு எடுத்தனான். இனி எடுக்க மாட்டன்"

அழாக் குறையாக அவள் தன்னை நியாயப்படுத்தினாள்.

"என்னடியப்பா ரெண்டு மூணு வருஷத்துக்கு முன்னம் தானே உன்ர மூத்த மகளுக்கு சாமத்தியம் என்று சொன்னாப் போல இருக்கு. உன்ர வாயில நல்லாப் பொய் பொய்யா புரழுது"

"இல்லையம்மா இல்லை. என்னை நம்புங்கோ"

என்று கெஞ்சினாள் கமலம்." இந்த சாக்கு போக்கு எல்லாம் எனக்கு நீ சொல்ல வேண்டாம். உன்ர சீட்டை எப்பவோ கிழிச்சாச்சு. நீ நடையக் கட்டு."

என்றாள் கீதாம்பிகை. அந்த நேரம் பார்த்து மரக்கறி வாங்கிக் கொண்டு வந்த அவளின் கணவன் கேற்றடியில் தங்கள் வீட்டு வேலைக்காரி நிற்பதைப் பார்த்தார்.

"ஏன் கமலம் உள்ள வாவன்." என்று கேற்றைத் திறந்தவாறு கூப்பிட்டார்.

"அம்மா உள்ள வர வேண்டாம் என்று சொல்றாங்க அய்யா"

அவள் கண்கள் கலங்கி இருந்தன.

"இவள் இப்படித்தான். நீ வா..."

அவருடன் உள்ளே வந்த கமலம் வராண்டாவில் குந்தி அமர்ந்தாள்.

"நீங்கதான் உவளை குட்டிச்சுவர் ஆக்கப் போறீங்க. உங்கட சமையல் வேலைக்கு முழுக்குப் போடத்தான் இத்தனை கரிசனை."

"பென்ஷன் எடுத்ததும் போதும் உன்னோட படுற பாடும்போதும். எப்ப பாரு தொண தொணாப்புத்தான்"

சலித்துக் கொண்டார் முன்னைநாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணன். ஆசிரியராக இருந்து அதிபராக பின் உதவிக் கல்விப் பணிப் பாளராக எனப் படிப்படியாக பதவி உயர்வு பெற்றவர் தான் கிருஷ்ணன். பதவி உயர்வு பெற்றதும் ஆசிரியர்களை விரட்டி விரட்டி அவர்களின் முதுகின் மேல் சவாரி செய்யும் சில அதிகாரிகள் மத்தியில் மனிதப் பண்புமிக்க ஓர் அதிகாரி யாக கடமை புரிந்தவர். மாணவர் முன்னேற்றத்துக்காக ஆசிரியர்களோடு இணைந்து பல வேலை திட்டங்களை செய்து அதில் வெற்றியும் கண்டவர்.

வேகமாக வெளியில் வந்த கீதாம்பிகை தனது மோட்டார் சைக்கிளில் ஏறியவாறு கமலத்தைக் கோபமாய்ப் பார்த்தாள். கமலம் கொக்காய் இருந்தால் நிச்சயம் அவள் எரிந்து சாம்பலாய் இருப்பாள்.

கீதாம்பிகையின் தலைக்கறுப்பு மறையும் மட்டும் அமைதியாக இருந்த இருவரும் அவள் போன பின்பு ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

"நல்ல நேரம் நீங்க வந்தீங்க ஐயா இல்லாட்டி நான் எங்க வீட்டுக்கு நடையைக் கட்டி இருக்க வேண்டும்."

என்று தன் பயத்தை வெளிப்படுத்தினாள் கமலம்.

"சரி சரி நீ போய் சமைக்கிற அலுவலைப் பார்" என்ற கிருஷ்ணன் அன்றைய செய்தித்தாளுடன் கதிரைக்குள் ஐக்கியமானார்.

***

சமையல் கட்டுக்குள் நுழைந்த கமலா எண்ணிறைந்த பாத்திரங்கள் கழுவாமல் சிங்குக்குள் நிறைந்து இருப்பதை பார்த்து முகம் சுளித்தாள். பெரிய மனுசர் பலர் இப்படித்தான் வெளியே பகட்டு வாழ்க்கை வாழ்கின்றார்கள். ஆனால் உள்ளுக்குள் குப்பைதான். சிலரின் மனங்களும்தான். என்று எண்ணி

அருவருத்தாள். பின் மள மளவென்று கழுவி அடுக்கி வைத்தாள். குளிர்சாதனப் பெட்டியில் இருந்து புளிச்ச மணம் வந்தது. அதற்குள் பழைய சாப்பாடுகள் மற்றும் தோசை மா என்பன காணப்பட்டன.

"அவை பழுதடைந்திருப்பதைப் பார்த்து எல்லாவற்றையும் குப்பை வாளிக்குள் கொட்டினாள். பின்னர் குளிர்சாதனப்பெட்டியைக் கழுவி சுத்தம் செய்தாள். நேரமோ 8.30 ஐ தாண்டி விட்டது.

"ஐயா சாப்பாடு தரவா?" என்றாள் கமலம்

"கொஞ்சமா தாடி புள்ள. நீயும் போட்டுச் சாப்பிடு". என்றார் கிருஷ்ணன்

"நான் விடிய சாப்பிட்டு தான் ஐயா வந்தேன். எனக்கு இப்ப வேண்டாம்"

என்று சொல்லி அவருக்கு ஒரு தட்டில் சாப்பாட்டை போட்டு வந்து கொடுத்தாள்.

"என்ன ஐயா சமைக்கிறது?"

"இன்றைக்கு செவ்வாய்க்கிழமை தானே மரக்கறியாப் பார்த்துச் சமையன்"

பம்பரமாய் இயங்கத் தொடங்கியவள் இரண்டு மணித்தியாலங்களில் கத்தரிக்காய்ப் பொரிச்ச குழம்பு, மரவள்ளி கிழங்குக் கறி, பருப்பு, கீரை, அப்பளம், மிளகாய் என பல கறிகளுடன் சமைத்து முடித்தாள். பின்னர் பாவித்த உடுப்புக்களை அலம்பிக் காயப் போட்டாள். சுமார் ஒரு மணி அளவில் புறப்பட தயாரானாள் கமலம்.

"என்னடியப்பா பின்னேர சமையலையும் முடித்துக் கொண்டு ஐந்து மணிக்கு போற நீ இன்றைக்கு கெதியாய் வெளிக்கிட்டாய். எங்கனம் மனிசி வந்து கத்தப் போகுது."

என்று தன் ஆதங்கத்தை சொல்லி வைத்தார் கிருஷ்ணன்.

"நான் அம்மா வர முதலே வெளிக்கிட வேணும் ஐயா. இல்லையென்றால் அம்மா விடமாட்டா."

"என்னடியப்பா அப்படி அவசரம்?"

"என்ர மகளின் பிள்ளைக்கு பேர்த் சர்டிபிகேட் எடுக்க வேணும்"

"பேரப்பிள்ளை என்று சொல்லன்".

"இப்ப முறை தான் முக்கியம்" என்றாள் சலிப்பாக கமலம்.

"அது சரி எப்ப உன்ர மகளுக்கு கல்யாணம் நடந்தது? இதைப் பற்றி நீ சொல்லவே இல்ல?"

"நாங்கள் ஏழைகள் ஐயா. பெரிசா செய்ய எங்ககிட்ட காசும் இல்ல"

"அதுக்கு என்ன? நீ கேட்டிருந்தா கொஞ்சம் காசு உதவி செய்து இருப்பேன்"

"எனக்குத் தெரியும் ஐயா. அம்மாவும் கோபக் காரி தான். ஆனா அவ ரொம்ப நல்லவா. நிச்சயம் காசு தந்திருப்பா."

"பின்ன ஏண்டி புள்ள சொல்லல"

"எல்லாம் அவசரக் கலியாணம் ஐயா. இத வெளியில் சொல்லவும் முடியாது.சொன்னாப் பெரும் வெட்கக்கேடு"

ஓவென்று கதறியழத் தொடங்கி விட்டாள் கமலம்.

"அடி புள்ள அழாத. உன்ர மனக் குறைய சொல்லிட்டு போ. அதுவும் கஷ்டம் என்றால் வேண்டாம்" என்றார் கிருஷ்ணன்

"உங்க கிட்ட சொன்னால் என்ன என்ர மகளுக்கு இன்னும் கல்யாணமே நடக்கல"

இதைக் கேட்டதும் அதிர்ந்து போனார் கிருஷ்ணன்.

"கலிகாலமடி புள்ள.. கலிகாலம்..."என்று பெருமூச்சு விட்டார் கிருஷ்ணன்.

"படிக்கிற இடத்தில் குழப்படி விட்டுட்டாளே உன்ர பெட்ட"

"இல்லை ஐயா அப்படி இருந்தா கூட நான் சந்தோஷப்பட்டிருப்பேன்"

"அப்ப எங்க பிழை நடந்தது?"

"எங்க வீட்டுக்க தான் ஐயா"

"என்னடி குழப்புற. வீட்டுக்கு வெளியாக்கள் வாறவங்களே?"

"அப்படி என்றால் கூட பரவாயில்லை"

"அப்ப என்னதான் நடந்தது சொல்லித் தொலையன்."

"வேலியே பயிர மேஞ்சா...."

"யார் உன்ர சகோதரங்களே?"

"என்ர மனுஷன் ஐயா. என்ர பாலாய்ப் போன புருஷன்."

இதைக் கேட்டதும் நாடி நரம்பெல்லாம் மின்சாரம் தாக்கியது போல் உறைந்து போய் அமர்ந்து இருந்தார் கிருஷ்ணன்.எவ்வளவு நேரம் அப்படி இருந்தார் என்று அவருக்கே தெரியாது.

மனைவி வந்ததைக் கூட அவர் கவனிக்க வில்லை.

"என்னப்பா டைட்டானிக் கப்பல் மூழ்கியது போல் அவ்வளவு யோசனை"

நினைவுத் தொடர் அறுபட சுயத்துக்கு வந்த கிருஷ்ணன் மனைவியை பார்த்து

"இந்த ரெட் லைட் ஏரியாவை பற்றி நீ என்ன நினைக்கிற"

என்று தன் மனதின் ஆதங்கத்தை பட்டென்று போட்டு உடைத்து விட்டார்.

"என்னப்பா உளறுறீங்க"

"இல்ல... இந்த விபச்சார விடுதி பற்றி என்ன நினைக்கிற."

இதனை சற்று எதிர்பாராத கீதாம்பிகை

"உங்களுக்கு அரளை பேந்து போச்சு போல தான் கிடக்கு. கல்யாண வயசுல இரண்டு குமர்களை வைத்துக்கொண்டு கதைக்கிற கதையா இது?"

அடிமுடி தெரியாத கீதா எரிந்து விழுந்தாள்.

"ஒருவேளை நான் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தால் இந்த விபச்சார விடுதிகளை தொடக்க அனுமதி கொடுப்பேன்"

என்றவாறு பெருமூச்சுடன் மனைவியின் பதிலுக்கு காத்திராமல் எழுந்து சென்றார் கிருஷ்ணன்

"இந்த மனுஷனுக்கு என்னவோ ஆயிடுச்சு"

என்று புறுபுறுத்தவாறு உடுப்பு மாற்றச் சென்றாள் கீதா.

***

அன்று இரவு கிருஷ்ணனுக்கு நித்திரை வரவில்லை. எப்போதாவது அருமையாக அவர் செய்யும் கெட்ட பழக்கத்திற்கு இன்றும் அவர் அடிமையானார். பூனையைப் போல் மெதுவாக படுக்கையை விட்டு எழும்பி அடுத்த அறையை நோக்கிச் சென்றார். அங்கே அவர் ஒளித்து வைத்திருந்த சிகரெட் பெட்டியிலிருந்து ஒன்றை எடுத்து புகைப்பிடிப்பதற்காக வெளியில் வந்தார். நெருப்பைப் பற்ற வைத்து ஆழமாய் அதன் புகையை உள்ளிழுத்துக் கொண்டார். சுவாசத்திற்குள் சூடான புகை உள்ளிறங்கியது. நீண்ட இரவு நிசப்தமாய் நகர்ந்து கொண்டிருந்தது. இந்த உலகத்தில் இந்த நிமிஷம் வரை எம்மைச் சுற்றி எவ்வளவு அநீதிகள் நடந் தேறிக் கொண்டு இருக்கின்றது. ஆனால் நாம் எதுவும் அறியாத மானிட ஜென்மங்களாய் வாழ்க்கையை ஒட்டிக் கொண்டிருக்கின்றோம். எமது கையாலாகாத்தனத்தி னால் இவ்நீதிகளை கண்டும் காணாதிருக்கின்றோம். உண்மையில் நானும் ஒரு குற்றவாளி. உள் மனம் போராட்டக் களமாகியது. அவரின் மூக்கின் வழியாக வும் வாயின் வழியாகவும் எண்ணிறைந்த புகைச்சுருள்கள் கோலமிட்ட வண்ணம் இருந்தன.

***

குழந்தை அழுவது கூட கேட்காமல் எங்கோ வெறித்தவாறு அமர்ந்திருந்தாள் நிசா.

"பச்சிளங் குழந்தை பாலுக்கு அழுகிது.என்னடி யோசனை" என்று கத்தினாள் கமலம்.

துணியில் கிடத்தி இருந்த குழந்தையைக் கையைப் பிடித்து மெதுவாக தூக்கிய போது மீண்டும் கத்தினாள் கமலம்.

"இப்படி கை பிடிச்சு தூக்க குழந்தையின் பிஞ்சு கையெல்லோ கழண்டு போகும். குழந்தையைப் பெறத் தெரியுது ஆனா இது கூட தெரியல"

என்று கூறியவாறு குழந்தையின் தலைக்கு ஒரு கையையும் இடுப்புப் பகுதியில் மற்ற கையையும் கொடுத்து லாவகமாக தூக்கி நிஷாவின் மடியில் கிடத்தினாள் தாய்.

"நீ விட்ட பிழைக்கு என்னை திட்டுகின்றாய். அப்பா செத்து ஆறு மாசத்துக்குள்ள நீ ஒருவனைக் கொண்டு வரேக்க இத யோசித்து இருக்கனும்" என்று பாலை கொடுத்தவாறு விம்மினாள் மகள் நிஷா.

"எங்கட பாதுகாப்புக்காக தான் நான் அப்படிச் செய்தேன்."

"ஆனா எனக்கு பாதுகாப்பில்லாமல் போச்சே. இந்தப் 17 வயதில் நான் அம்மா ஆயிட்டேன் பார்." என்று அழுதாள் மகள்.

"அழாதடி புள்ள. இந்தப் பிள்ளையை நான் வளர்க்கிறன். நீ படி. நீ தொடர்ந்து படிக்க கிருஷ்ணா ஐயா உதவி செய்கிறதா சொல்லி உள்ளார்"

"இந்தக் கோலத்தில் இந்த ஊரில நான் எப்படிப் படிக்கிறதம்மா?"

"நீ இஞ்ச ஒண்ணும் படிக்க வேண்டாம். கொழும்பில் கொஸ்டலில் தங்கிப் படிக்க சேர் உதவி செய்கிறதா சொல்லி இருக்கார்"

அவள் எதிர்காலம் தூரத்தே சிறு ஒளிவட்டமாய்த் தெரிய தன் மடியில் குழந்தையை போட்டுக் கொண்டு தாயின் மடியில் தலை வைத்து படுத்தாள் அந்த கன்னித் தாய்.

# எல்லை கடக்கும் கனவுகள்

நாளைய விடியலில்
என் குரல்
எல்லை கடந்திருக்கலாம்,
பனியுறும் நிலத்தில்
சப்பாத்துக்களைத் திணித்தபடி
பனிக்கட்டிகளை அள்ளிக்கொண்டிருப்பேன்
உன் நினைவில்.

என் பகல்கள்
உன்னருகில் இரவுகளாய்
சபிக்கபட்ட நிலத்தில்
உன் வார்த்தைகளை சுவைக்க
தேடவேண்டியிருக்கும்
விடுமுறைகளை,

அடகு வைத்த
அம்மாவின் தாலிக்கொடி
அமுதாவுக்கென்றொரு ஸ்கூட்டி
வட்டிக்கு வாங்கிய ஒருகோடி
கட்டி முடிப்பதற்குள்
காணாமல் போயிருக்கக்கூடும்
இளமையின் தேடல்கள்.

அதுவரைக்கும்
பத்திரமாயிருக்கட்டும்
தெருமுனை வரைக்கும் நீளும்
மணல் வீதியில் பதிந்துகிடக்கும்
நம் காலடித்தடங்கள்.

வில்வரசன்-
இலங்கை.

# பானுபாரதியின் “உன்னத சங்கீதம்”

## (நார்வேஜிய கவிதைகளின் மொழிபெயர்ப்பு)

திருஞானசம்பந்தன் லலிதகோபன்




“இந்த கணம் எல்லாமுமானது
வாழ்வைப்போல முழுமையானது
இங்கே எல்லாமும் நிகழ்கிறது”
(மரிய தக்வாம்)

பானுபாரதி மொழிபெயர்ப்பு செய்துள்ள கவிதைகளில் இரண்டாவதாக வருகின்ற “நொடிப்பொழுதில்” அமைந்துள்ள வரிகளே இவை. முன்னர் ஒருபொழுது கவிஞர் நேசமித்திரன் அவர்களுடனான உட்பெட்டி உரையாடலில் இந்த கணப்பொழுதின் மேன்மை புரிந்தது. ஏனெனில் ஒரு கவிஞனாக அவரின் கவிதைக்கான வரைவிலக்கணம் என்பது “கவிதை கணப்பொழுதில் நிகழும் ஒன்று” என்பதாக அமைந்தது.

வாழ்வின் யதார்த்தம் நிலையாமையாக இருந்தபோதும், நிலையாமை குறித்தான சிந்தனைகள் இருத்தலை கேள்விக்குள்ளாக்கி விடுகின்றன. போலி என்றபோதிலும் இயங்குதலே வாழ்விற்கு உயிர்ப்பினை தருகின்றது. இந்த வரிகளில் வருகின்ற “நிகழ்கிறது” என்பதன் உள்ளுறை, இயக்கம் என்பதன் விரிபொருளே என்பது சொல்லி புரியத்தான் வேண்டுமென்பதில்லை. இக்கணத்தில் நிகழ்பவற்றில் தனது புலத்தினை செலுத்தும் ஒரு கவிஞனுக்கு வாழ்வு முழுமையாக தெரிகிறது. அது தோற்ற மயக்கமாயினும் கூட. இந்த இடத்திலேயே நான் மேலே கூறிய நேசமித்திரனின் புரிதலும் மரிய தக்வாத்தின் வரிகளும் ஒன்றிப்போகின்றன. இந்த தொகுதியின் ஏறத்தாழ எல்லா கவிதைகளுமே புலத்தின் வழியே கவிஞர்களின் அகத்தின் தெறிப்புக்களே என்பது எனது வாசக நிலை அனுபவம். எனவே இந்த கவிதைகள் எழுந்த பின்னணியை கூறும் சாரமாக மேற்கூறிய வரிகள் அமைகின்றன என்றால் அது மிகையல்ல.

ஈழத்தமிழர்களின் புலம்பெயர் மொழி என்பது ஆரம்ப நாட்களில் ஆங்கிலமாக அமைந்த போதிலும் (ஆங்கில மோகம் என்பது காலனித்துவ நாட்களின் எச்சம்) பின்னாட்களில் அவரவர் புகுந்த தேசத்திற்கேற்ப வெவ்வேறு மொழிகளாய் அமைந்தது.சாதாரண மொழி பயன்பாடு தவிர்த்து, இலக்கியம் என்ற வகையில் இது சாதகமான ஒன்றாக இருந்தபோதிலும், இன்றைக்கும் ஆங்கில மொழியிலிருந்தான மொழிமாற்ற பிரதிகளே தமிழ் வாசகப்பரப்பினை அதிகமாக பற்றியுள்ளன. ஆனால் ஏனைய மொழிகளில் இருந்தான பிரதிகள் தமிழினை வந்தடையாததன் பிரதான காரணம், நம்மவர்கள் அந்த மொழிகளின்மீது அவ்வளவான ஆர்வத்தை காண்பிக்கவில்லை என்பதே உண்மையாகிறது. இங்கிருந்து புலம்பெயர்ந்து ஆங்கிலம் புழங்கு மொழியாக இல்லாத மேனாடுகளில் வசிப்போர் கூட, வாசிப்பு என வருகையில் ஆங்கிலத்தையே தேர்வு செய்கின்றனர் என்பது நாமறிந்தது தான். அந்தவகையில் பானுபாரதியின் நோர்வேஜிய கவிதைகளின் மொழி பெயர்ப்பு தமிழ்கூறு நல்லுலகில் குறிப்பிடத்தக்க ஒரு முயற்சி என்றே கூற முடியும்.

நமது பொது வாசிப்பு மனமானது நமக்கு மனதில் பதிந்த சில எண்களையும் சொற்பதங்களையும் காண்கையில் அதனை நோக்கி ஈரக்கப்படுவது வழமை என்பதையும் விடவும் தன்னிச்சையான செயல் என்றே கூறவியலும். அந்த விதத்தில் இந்த நூலினை வாங்கி கவிதைகளின் பொருளடக்கத்தினை நோக்குகையில் சட்டென கவனத்தை ஈர்த்த தலைப்புக்கள் “1980” மற்றும் “கார்த்திகையாள்” என்பனவாகும். மரிய தக்வாம் அவர்களினால் எழுதப்பட்ட “1980” கவிதை எழுதப்பட்ட சூழல் குறித்து இந்த நூலில் எவ்வித குறிப்புக்களும் இல்லை. அரசியல் கவிதையாக நீண்டு செல்லும் இந்த கவிதையின் வரிகள், குறித்த சகாப்தத்தில் ஈழத்தில் நிலவிய துயரங்களுடன் ஒத் திசைகின்றனவாக இருக்கின்றன. தன்னிலையின் கூற்றாக அமையும் இதன் கூறல் முறை “அரசியல் போலி” ஒன்றின் வெளிப்பாடாக இருக்கின்றது.

“இறந்தவர்களோ மிகத் தொலைவில்
உயிரற்ற உடல்களினது
துர்நாற்றமும் அறிகிலேன்
விலா எலும்புகளும் ஒட்டியுலர்ந்து
அடையாளமற்று நலிந்ததெனவாயின”
“பல லட்சம் மக்கள் சாவின் மடியில்
மௌனமாக்கப்பட்டு
கடைசி எல்லையில் கிடந்தபோது
நான் அழகான ஏதோவொன்றை
உருவாக்குவது
பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்”

கார்த்திகை மாதமும் அது கிளர்த்தும் உணர்வுகளும் ஈழத்தினையும் தாண்டி

பிரபஞ்ச வெளியில் அலைவுறு வதை, இங்கர் ஹாகருப் எழுதிய "கார்த்திகையாள்" கவிதை நினைவுறுத்துகிறது. ஒரு பெண்ணாக உருவகிக்கப்படுகின்ற அவள் தற்காலத்தே "நம்பிக்கைகளை தொலைத்துவிட்ட வயதான பெண் ணாக" அறிமுக மாகிறாள். பொதுவாக நிலங்களும் பருவங்களும் மாதங்களும் பெண்ணாக புலத்தில் காட்டப்படுவது நமது தமிழ் மொழி வழக்கு. நார்வேஜிய மொழியிலும் அவ்வாறே இருப்பது கவிதைகளின் சர்வதேச அரசியலாகிறது. கார்த்திகை என்பது நார்வே நாட்டின் கால நிலையின் பிரகாரம் குளிர்காலமாக அமைகிறது. ஈழத்தில் அது மழைக்குரிய காலம். ஒற்றை தள வாசிப்பில் இந்த கவிதை காலநிலையினை பாடுவ தாகவே இருக் கிறது. ஆனால் கவிதையின் வரிகளும் ஈழ வாசகனின் மனதில் பதிந்துபோயிருக்கும் அனுபவங் களும் இந்த கவிதையினை பல்தள வாசிப்புக்கே உட் படுத்துகிறது. இதில் வருகின்ற வரிகளான "நேசத்திற் குரிய சூரியன் அவளை விட்டு செல்லுதல்" என்பது நேரிடை யான விம்ப கட்டமைப்புக்களை மேவி விடுகிறது.

"இலையுதிர் காலத்தின் கடைசி பூவையும்
கூந்தலிலிருந்து பிடுங்கி கொண்டு விட்டாள்
புயற்காற்றின்
தோத்திரப் பாடல்களுக்காக
உலர்ந்துபோன தனது
முழங்காலில் மண்டியிடுகிறாள்"

இந்த தொகுப்பில் மொத்தம் ஆறு கவிஞர்களின் கவிதைகள் இடம்பெறுகின்றன. இதில் மூன்று ஆண்களும் மூன்று பெண்களும் இருக்கின்றனர். இந்த கவிதையில் பரவலாக பெண்களின் துயரங்கள் வரிகளாக விரவி கிடக்கின்றன.

மரிய தக்வம் என்ற பெண் கவிஞரினால் எழுதப்பட்ட "ஒரு பெண்ணின் பணி முடிவடைகிறது" தொகுதியின் முதலாவது கவிதையாகும். பொதுவாக தாய் குறித்த கவிதைகள், "மூன்றாவது கண்" பார்வை யிலேயே எழுதப்படுகின்றன. இதன் மூலமாகவே தாய்மை குறித்த புனிதங்களும் கட்டமைக்கப்படு கின்றன.இந்த கவிதையின் எடுத்துரைப்பு முறையானது ஒரு தாயின் உள்மன குமுறலாகிறது.

"எனது சர்வாங்கமும்
திருமணத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கிடந்தது"

குறித்த கவிதையின் இடையில் வருகின்ற வரிகளாக இவை அமைகின்றபோதிலும், இந்த வரிகளை ஆரம்பமாக கொண்டு கவிதையினை வாசிக்கையில் வேறொரு காட்சி புலம் வாசகனின் மனதில் சாத்திய மாகின்றதை உணரலாம். ஏனெனில் திருமணமும் அதன் விளைவுகளான குழந்தைகளும் தாயின் வாழ்வில் பெரும்பகுதியை விழுங்கி விட்டதன் துயரார்ந்த யதார்த்தமே இந்த கவிதை. முற்காலத்து குழந்தைகள் தற்காலத்தே வெறும் "அந்நிய மனிதர்களாகி" போனமை இந்த கவிதையில் வரும் தாய்க்கு உரியது மட்டுமல்ல. எஞ்சிய நாட்களையாவது அர்த்தம் கொண்டதாக வாழ விரும்பும் ஒரு பெண்ணாக இதில் வரும் தாய் உறுமாறு கிறாள். தாயொருத்தியின் துயரத்தில் தொடங்கிய கவிதை, வரிகளின் நகர்வினூடே பெண்ணிய கவிதையாக எஞ்சுகிறது.

"நான் அதிகமாக தொந்தரவு செய்வதாக
முறைப்பாடு செய்கின்றனர்
நான் எனக்குள்ளே
புதையுண்டு போகாதபடி
எனக்கென்றொரு உகந்த பொழுதுகளை
நான் தேடியாக வேண்டும்"

Helge vatsend(நூலில் உள்ளதன் படி)என்ற ஆண் கவிஞரினால் எழுதப்பட்ட "உன்னத சங்கீதம்" என்ற கவிதை, ஒரு காதலனிடமிருந்து காதலியின் எதிர்பார்ப்பு என்னவென்பதை கூறுகிறது.பொதுவாக காதல் என்பதில் சமவுரிமை என்பது பெயரளவிலானதே. சமூக நிறுவனமும் இனத்தின் தொடர்ச்சிக்காக ஏற்படுத்தப் பட்டதுமான குடும்ப அமைப்பில் காதல் மற்றும் கல்யாணம் என்பவற்றில் ஆண்களின் மேலாதிக்கமே தொடர்கிறது. இந்த மேலாதிக்க பாங்கு பெண்களினா லும் ஏற்கப்பட்டு தொடர்வதே கால தரிசனம். ஆனால் இந்த கவிதையில் வருகின்ற பெண்ணின் எதிர்பார்ப்பு என்பது வேறானது.

"சுற்றிலுமாக மூடி அடைக்கப்பட்ட
பூங்காவனமாக என்னை ஆக்கி விடாதே அல்லது
உனக்கு தாகம் ஏற்படும் வேளைகளில்
அதை தணிப்பதற்கான ஊற்றாய் மட்டுமெண்ணி
உனதென்ற முத்திரையிட்டெனை மூடாதே"

இதே கவிஞரின் எழுதப்பட்டதும் இதற்கு முன்னால் அமைந்திருப்பதுமான "இறுதி வார்த்தை" என்ற கவிதை ஒரு ஆணின் குரலை அப்பட்டமாக எதிரொலிக்கிறது.

"நான்
ஆணாக பிறந்திருக்கிறேன்
இப்போதும்
ஒடுக்குமுறையாளனின் நிழல்
என்மீது படிந்துள்ளது
உனது
அழகிய முகத்தில்
அதனை காணுகிறேன்"

இந்த இருகவிதைகளையும் ஒருங்கே இணைத்து வாசிக்கையில் ஒரு பாடலின் சோடி குரல்கள் போன்ற தோற்றம் கிட்டுகிறது. பிரதிகள் மீதான வாசிப்பு இவ்வாறு அமைவது பொருண்மையின் பரிணாமத் தினை வேறொன்றாக்கி விடுகிறது.

ஒரு இருண்ட மெழுகுவர்த்தியின் ஒளியில் அறையில் குழந்தையுடன் இருக்கின்றோம்.வெறுமனே உட்கார்ந்து சுவரினை வெறித்தபடியும் இருக்கலாம் அல்லது நமது விரல்களினை பயன்படுத்தி பல்வேறு சித்திரங்களை சுவற்றில் நிழற்றி குழந்தைக்கு வேடிக்கை காட்டிடவும் முடியும்.பிரதி ஒன்றை வாசிக்கையில் மனம் ஒரு குழந்தையென கருதுகையில் நமது வாசிப்பு முறையினால் மாயங்களை நிகழ்த்த முடியும்.

குறித்த இரு கவிதைகள் மீதான இறுதி வரிகளை ஆண் மற்றும் பெண் தன்னிலைகளின் ஒருமித்த குரலாக்கி"உன்னத சங்கீதத்தின்" வரிகளினூடே

இவ்விதம் முடிக்கலாம்.

"நாமிருவரும் இணைந்திருப்போம்
நிபந்தனையற்று,
மனிதர்களாக மட்டும்
நாம் இணைந்திருப்போம்"

பானுபாரதி ஒரு பெண் கவிஞராக இருக்கிறார். எனவே பெண்ணியம் சார்ந்த அவரின் ஈடுபாடும் புரிந்துகொள்ளத்தக்கதே. நான் இந்த தொகுப்பின் முதலாவது மற்றும் இறுதி கவிதைகளை பெண்ணியம் சார்பான கவிதைகளாக உதாரணம் காட்டியமைக்கு காரணம் அவற்றின் செறிவான பரம்பலை காட்டு வதற்கே. எனினும் நமது பெண்ணிய வாசிப்பு சூழலில் பெருகி கிடக்கும் தீவிர பெண்ணியம் பேசும் கவிதை களாக இல்லை என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

மொத்தமான இந்த தொகுதியின்வாசிப்புமேதற்கால நவீன கவிதைகள் போன்று, கவிஞனின் தனி மனதின் விகசிப்புக்களினை வாசகனிடம் திணிப்பன போன்றவை அல்ல. மாறாக ஒரு மேடை மீது நிகழ்தப் படுகின்ற "அளிக்கைகள்" போன்றவை. மேலும் தெளிவாக கூறினால் ஒரு மேடையில் நிகழும் நாட்டியம் அல்லது நாடகத்தை பார்ப்பது போன்ற தோற்றத்தினை தருபவை. அந்த வகையில், இந்த தொகுதியில் உள்ள கவிதைகளில் ஒலிக்கும் குரல் வகைமைகளை இரண்டாக நோக்க முடியும்.

1.வாசகனை பார்வையாளனாக்கி, வாசகனிடம் கழிவிரக்கத்தினை கோருபவை

2.வாசகனையும் பங்காளியாக்கி உரத்து ஒலிப்பவை

அந்த வகையில் "ஒரு பெண்ணின் பணி முடிவடைகிறது", "மீண்டுமொரு முறை",நான் தேடினேன்", "என்னை இப்படித்தான் வேண்டும்" போன்ற கவிதைகள் தங்கள் ஆற்றுகை மூலமாக வாசகனிடம் கழிவிரக்கத்தினை கோரும் வகையானவை. மறுபுறத்தே, "aust vaagoy", "பொறுமையற்ற மனு வாய் இரு", "ஒரு கவிதை, ஒரு பறவை" போன்ற கவிதை களின் தொனி வாசகனையும் தங்களுள் உள்ளீர்ப்பவை யாயும் அமைந்துள்ளன.

பொதுவாக ஈழ வாசக பரப்பு அறியாத மொழியாகிய நார்வேஜிய மொழியில் இருந்து இவ்வாறு தேர்ந்தெடுக்கபட்ட கவிதைகளை மொழிபெயர்ப்பு செய்த பானுபாரதி அவர்களை பாராட்டிட வேண்டும். ஏனெனில் இந்த கவிதைகளின் தேர்வும் சிக்கல்கள் இல்லாத அவற்றின் மொழிபெயர்ப்பும் நர்வேஜிய இலக்கியங்கள் குறித்த ஆர்வத்தினை அதிகரிக்கிறது.

ஒரு வாசகனின் தேவை எதுவாக இருந்துவிடப் போகிறது "ஒரு கவிதை, ஒரு பறவை" இவ்வாறு சுட்டுவதை தவிர்த்து.

"நாங்கள் முன்னோக்கி செல்வதற்கு
எங்களுக்கு வார்த்தைகள் வேண்டும்"

"எம்மைத் தொடர்ந்து முன்னகர்த்தும் வார்த்தைகள்
எமது
இன்றைய நாளினை ஆளுகை செய்கின்றது"

# கண்ணாயிரம் வேண்டும்

அந்தி மயங்கி அல்லும் கவிந்து ஆட்கொள்ளும்
இராக்குருவிகள் இறகு குவித்து உடல் போர்த்தும்
இன்னிசையை விசித்திரமாய்
செடிகொடி மீதமர்ந்து பாடும்

மென்மழைத்தூறல் மிதமாகும் பொழுதில்
மண்மணம் எழுந்து மதிமீது போதை எழுதும்
மழையொலி மின்னி மனமீர்க்க
மேகத்துளி வளையங்களை
நிலம் விழுங்கும்

நுணலும் நாணி காதலிசைக்கும்
இராக்குளத்தில்
நிலா வீழ்ந்து மிதந்து வெண்ணொளி சிந்தியாடும்
நிறம்பெயர்ந்த விருட்சங்கள் கருமினுமினுப்பு மேனிபூசும்

விதையும் குளுமையில் கருமண் துளைக்கும்
வனாந்தரம் எங்கிலும் சிறுசெடி எழுந்து துளிர்க்கும்
விடைத்த அடர்வனப்புதுமைக்குள் கரும்பச்சை குளிக்கும்

சுடர்விடும் அமைதியில் செழித்திட்ட சோலை
ஜீவகாருண்ய வசந்தத்தில்
புனிதத்தின் பரியந்தம்
செம்பசுமை ஏந்திப் பரவும்
சுகந்தத்தின் நெடிகோடி

நந்தைகள் கூடோடு தத்தி நகரும் விழா
உயிரினங்கள் அத்தனையும் சுதந்திரமாக உலா
மலைமகளின் அருவிக்கூந்தல் கட்டவிழும்
மடிதவழும் குட்டிகளின் முகங்கள்
கருணையெழும்

பறவைகள் விலங்குகள் ஊர்வன
என எத்தனை?
பாந்தமாய் பல்லின உயிர்களின்
ஊர்வலங்கள் பார்த்திடு
கண்ணாயிரம் வேண்டும் காடு காண்பதற்கு
இன்னுயிராயதை ஓம்பிக்காப்பதே நன்று

- ஜலீலா முஸம்மில் - ஏறாவூர்

# மகாவம்சத்தின் 6வது தொகுதி (1978–2010) குறித்து அதன் தலைவி பேராசிரியர் மாலனி எந்தகம பேரா.சி.பத்மநாதன் ஆகியோருடனான உரையாடல்கள்

**என்.சரவணன்**




மகாவம்சத்தின் 6வது தொகுதியில் உள்ள தமிழர் விரோதப் போக்குகள் குறித்து ஆராய்கிறபோது அதை ஆக்கியவர்களைப் பற்றியும், ஆக்கிய வர்களின் தரப்பு கருத்துக்களையும் அறிவதே தார்மீக பொறுப்பு. மேலும் அதுவே ஆய்வு முறையியலுக்கு உகந்த அறிவியல் மார்க்கமும் கூட.

6வது மகாவம்ச தொகுதிக்கான குழு வின் தலைவியாக செயல்பட்டவரும், சுமார் 45 வருடகால மகாவம்ச எழுத்தாக்கத்தில் ஈடுபட்டு வருபவரு மான பேராசிரியர் மாலனி எந்தகமவின் நேர்காணலை இங்கே பதிவிடுகிறோம். நூறுக்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட இந்த மகாவம்ச குழுவுக்கு தலைவராக இருப்பவர் இலங்கையின் தொல்லியல் சக்கரவர்த்தி என்று கொண்டாடப்படும் பேராசிரியர் எல்லாவல மெத்தானந்த தேரர். இன்று தமிழர் பிரதேசங்களின் மீது தொடுக்கப்பட்டிருக்கும் தொல்லியல் போரின் சிருஷ்டியாகவும், வழிகாட்டியாகவும் அவரைக் கூறலாம். அவரின் தலைமையில் வெளியான மகாவம்சம் எப்பேர்பட்ட ஒன்றாக இருக்கக் கூடும் என்பதை நாம் கணிக்கலாம். அவர் தற்போது சுகவீனமுற்றிருப்பதால் அவரின் பணியையும் சேர்த்து ஆற்றி வருபவர் மகாவம்சம் 6 வது தொகுதியாக்கக் குழுவின் செயலாளரான பேராசிரியர் மாலனி எந்தகம.

மகாவம்சத்தின் 5ஆம் தொகுதியிலும் அங்கம் வகித்தவர் மாலனி எந்தகம. 1956 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை பதிவு செய்த 5வது தொகுதியை எழுதுவதற்கு ஜே.ஆர்.ஜெய வர்த்தன குழுவை அமைத்த வேளை அதன் ஆக்கக் குழுவில் பணியாற்றியவர். பின்னர் 6வது மகாவம்ச ஆக்கக்குழுவை தலைமையேற்று வழிநடத்தியவர். அவர் ஒரு சிரேஷ்ட வரலாற்று அறிஞராக கருதப்படுவ தால் அவரை பயங்கரவாதம் பற்றிய குழுவில் சேர்த்துக்கொண்டதாகத் தெரிகிறது. சிங்களத்தில் பல வரலாற்று நூல்களை எழுதியிருப்பவர். அவரின் நூல்கள் பாடப்புத்தகங்களாக பயன்படுத்தப்பட்டு வரு கின்றன. மகாவம்சம் தொடர்பிலான அறிஞராக கருதப் படுவதால் மகாவம்சம் பற்றிய பல்வேறு உரையாடல் களுக்கும் அழைக்கப்படுபவர். அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தினால் அமைக்கப்பட்ட பௌத்த உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளராக இயங்கியவர்.

அவரின் சிங்கள பௌத்த தேசியவாத சார்புப் பின்புலம் அவர் பக்கசார்பான போக்குக்கு தலைமை யேற்றிருக்கிறார் என்றே விமர்சிக்க முடிகிறது. இதனை அவர் நேர்காணலில் கொடுக்கின்ற பதில்களில் இருந்து உறுதி செய்து கொள்ளவும் முடியும்.

சுமார் ஒரு வருடத்துக்கும் மேல் காத்திருந்து பேராசிரியர் மாலனி எந்தகம அவர்களுடன் 15.05.2023 ஒரு பின்னேரப் பொழுது வட்ஸ்அப் மூலம்

தொலைவழியில் மேற்கொண்ட உரையாடல் இது. அவரின் கருத்து நமது இந்த ஆய்வுகளுக்கு மிகவும் அவசியமான விளக்கங்களைத் தருவதுடன் பல முடிச்சுகளையும் அவிழ்க்கின்றன. இந்த நேர் காணலுக்கு முன்னர் அவர் தொலைக்காட்சி நேர் காணல் ஒன்றில் கூறிய விபரங்கள் நாம் கவனிக்க வேண்டிய பல விடயங்கள் இருந்தன. அதனை அடியாகக் கொண்டே அவரிடம் பின்னர் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. அது மட்டுமன்றி அவர் இந்த நேர்காணல்களில் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் பற்றி குறிப்பிட்ட விபரங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்திய தால் இறுதியில் அவரிடமும் இக்கருத்துக்களின் மீதான எதிர்வினைகளை நேர்காணலாக பெற்றுக் கொண டேன். அதுவும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1936 வரையான மகாவம்சம் மூன்று தொகுதி களாக அதுவரை எழுதப்பட்டிருந்தது. அதுவரை காலம் பௌத்த பிக்குகளால் எழுதப்பட்டுவந்த மகாவசத் தொடர் தொகுதிகள் அதற்குப் பின்னர் மகாவம்சத்தை உருவாக்கும் குழுவொன்றை அரசு நியமித்து அதற்கு ஊடாக இவை மேற்கொள்ளப்பட்டன. இதற்கான பொறுப்பை கலாசார அமைச்சின் கீழ் இயங்கிய கலாசார திணைக்களமே மேற்கொண்டது. இவ்வாறு நான்காவது தொகுதி 1936 தொடக்கம் 1956 வரை மேற் கொள்ளப்பட்டது. 1956ஆம் ஆண்டு தான் முதன் முதலில் கலாசார அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தன பதவிக்கு வந்த போது, முன்னர் எழுதப்பட்டுவந்த மகாவம்சத்தை ஏன் தொடர்ந்தும் எழுத முடியாது என்று, கலாசார அமைச்சின் கீழ் மகாவம்ச ஆக்கக் குழுவை ஏற்படுத்தினார். 1956 தொடக்கம் 1978 வரையான காலப் பகுதியைக் கொண்ட 5வது தொகுப்பை எழுதுவதற்கான குழு பல பௌத்த பிக்குமார்களையும் கொண்டு அமைக்கப்பட்ட போது அதன் ஆக்கக் குழுவில் கட்டுரை சமர்ப்பிக்கும் பணியில் நானும் இடம்பெற்றேன்.

பின்னர் 1978 இலிருந்து 2010 வரையான காலப்பகுதியைக் கொண்ட 6ஆவது தொகுப்பை எழுதுவதற்கான குழு அமைக்கப்பட்டபோது அதில் நானும் முக்கிய அங்கம் வகித்தேன்.

**தமிழில் மகாவம்சம்?**

தமிழில் மொழிபெயர்க்கும் பணியை செய்வ தற்கு சரியான அறிஞர்கள் கிடைக்கிறார்கள் இல்லை. இறுதியில் தற்போது களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பேராசிரியர் யோகராஜா அவர்கள் அதனை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார். அவரின் தலைமையில் தான் அந்தக் குழு அப்பணியை மேற்கொண்டு வருகிறது.

6வது தொகுதி முடிந்த நிலையில் அடுத்த கட்ட தொகுதியை ஆக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் இன்னமும் வெளியிடப்படாததால் அப்பணிகளைத் தொடங்காமல் இருக்கிறோம். அது வெளியிடப்பட்டதன் பின்னர் அதன் தமிழ் மொழிபெயர்ப்புப் பணியும் தொடங்க முடியும்.

**முதலாவது தொகுதியை மாத்திரம் இதுவரை தமிழில் ஐந்து பேர் மொழிபெயர்த்து இருக்கிறார்கள்.**

உண்மையாகவா. நான் அறிந்திருக்கவில்லை. பல வருடங்களுக்கு முன்னர் ஒரு பௌத்தத் துறவி தமிழுக்கு மொழிபெயர்த்த ஒரு பிரதி எங்களிடம் உள்ளது. ஆனால் அது இதுவரை வெளியிடப்பட வில்லை. அதை சரிபார்த்து திருத்தும் பணிகள் தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அதை திருத்து வதில் மிகுந்த சிரமம் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஏனென்றால் அந்த பௌத்த துறவி அதனை பழைய தமிழ் மொழியில் எழுதி இருக்கிறாராம். இன்றுள்ளவர் களுக்கு அது சிரமமாக இருக்கிறதாம். அதை அப்படியே வெளியிடுவதில் அர்த்தமில்லை என்பதே பேராசிரியர் யோகராஜா அவர்களின் கருத்தும் கூட. இதுவரை அவர்கள் இரண்டு அத்தியாயங்களைத் தான் முடிக்க முடிந்ததாக தெரிவித்திருக்கிறார்கள்.

இறுதியாக வெளிவந்த 6வது மகாவம்சத் தொகுதியை மொழிபெயர்ப்பதன் அவசியத்தை உணர்ந்து நான் மொழிபெயர்க்க முற்பட்டேன். ஆனால் கலாசார திணைக்களத்தினர் அதனை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்த கிடைத்த தகவலில் காரணமாக அம்முயற்சியைக் கைவிட்டேன். ஆனால் முன்னைய தொகுதிகளை மொழிபெயர்ப்பதைவிட 6வது தொகுதியை மொழிபெயர்ப்பது இலகுவானதும் கூட என்பதை நான் அடையாளம் கண்டேன்.

உண்மை.

அத் தொகுதியில் மொழிப் பாவனை மிகவும் எளிமையானது. முன்னைய மூன்று தொகுதி களிலும் பாளி கலப்பு அதிகம் என்பதும் ஒரு காரணம்.

இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். முதல் மூன்று தொகுதிகளும் முதல் தொகுதி ஆக்கும் போது அக்காலத்தில் ஆட்சி செய்தவர்களை மையப்படுத்தியே எழுதுவது மகாவம்ச மரபு. அரசர், ஆளுநர், பிரதமர், ஜனாதிபதி என்கிற அடிப்படையில் தான் எழுதப்பட்டது. ஆனால் நான்காவது தொகுதியில் இருந்து அந்த மரபில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. உதாரணத்துக்கு ஆட்சியாளரை மையப்படுத்தாமல் ஒரு பண்பாட்டுக் கட்டுரைகளின் தொகுதி போல அது ஆக்கப் பட்டிருந்தது. நாங்கள் மீண்டும் அம்முறையில் மாற்றத்தைக் கொண்டு வந்தோம். மகாவம்ச மரபின் படியே நாங்கள் இப்போது எழுதி வருகிறோம். அதுபோல நான்காவது தொகுதியையும் அம்மரபுப் பிரகாரம் கொண்டு வருவதற்காக திருத்தும் பணிகளையும் தற்போது செய்து வருகிறோம். குறிப்பாக அத் தொகுதி யில் கட்டாயம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதை அடையாளம் காண்கிறோம். அதையும் முடித்ததன் பின்னர் தான் தமிழுக்கு அதனை மொழிபெயர்க்க முடியும்.

**ஏற்கெனவே வெளிவந்த மகாவம்சத்தை பின்னர் திருத்துவது சரியா? அவ்வாறு இதற்கு முன்னர் திருத்தப்பட்டிருக்கிறதா?**

மகாவம்சம் என்பது அதில் உள்ளதை உள்ளபடியே ஏற்றுக்கொள்ளும்படி சொல்லும் நூலல்ல. அதன் மீது விமர்சனம் வைக்க முடியும். அதனைத் திருத்தவும் முடியும். நீங்கள் அறிவீர்களா தெரியாது, முதலாவது மகாவம்சத்தை 12ஆம் நூற்றாண்டில் திருத்தப்பட்டு மொக்கலான மகாவம்ச பிரதி என்று என்கிற ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் சிறப்பு என்னவென்றால் முன்னைய பிரதியை விட மேலதிகமான பல விபரங்களைக் கொண்டிருக்கிறது மொக்கலான பிரதி.

**நீங்கள் குறிப்பிடுவது கம்போடிய மகாவம்சத்தைத் தானா?**

சரியாக சொன்னீர்கள் அதே தான்.

**அடுத்த மகாவம்சத் தொகுதியை ஆக்கும் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டதா?**

இதில் ஒரு சிக்கல் உண்டு. இதற்கு முன்னர் எல்லாம் ஆட்சித் தலைவர்கள் இறந்ததன் பின்னர் தான் அவர்களின் ஆட்சிக் காலத்தை பற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த தொகுதி தான், ஆட்சியாளர் உயிருடன் இருக்கும்போதே எழுதப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு விதி இல்லை. ஆனால் அவ்வாறு செய்யும் போது இவற்றை சேர்க்கவில்லை, அவற்றை சேர்க்கவில்லை என்று பலவித விமர்சனங்களுக்கும், எதிர்ப்புகளுக்கும் உள்ளாக நேரிடும்.

எனவே இப்போது எமது குழு தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளையும், நான்காவது தொகுதியை திருத்தும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

**பல ஆண்டுகளாக அரசே பொறுப்பேற்று கலாசார திணைக்களத்தின் கீழ் அதற்கென ஒரு பிரிவையும் உருவாக்கி மேற்கொள்ளப்படும் மகாவம்சத்தை அரசின் அறிக்கையாக, அல்லது அரசின் கருத்தாக எடுத்துக் கொள்ளலாமா?**

இல்லை அப்படி எடுத்துக்கொள்ள முடியாது. நான் வரலாற்றுத் துறையை சேர்ந்தவர். அதுபோல இதன் ஆக்கக் குழுவில் இருந்த அத்தனை பேரும் பல்வேறு துறைகளில் புலமையாளர்கள். முதலில் அவர்களை அழைத்து நாங்கள் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்தோம். மகாவம்ச ஆக்க மரபு என்னவென்பது குறித்து முதலில் வழிகாட்டினோம். அதில் அவர்களுக்கு கொடுத்த வழிகாட்டல் என்னவென்றால், அவர்கள் தகவல்களைத் தான் திரட்ட வேண்டும். ஒருபோதும் அவர்களின் சொந்தக் கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையில் அதனை செய்யக் கூடாது. எனவே அரச தலையீடுகள் எங்களுக்கு கிடையாது.

**அப்படியென்றால் இந்தக் குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வது யார்? ஏதேனும் புலமைசார் நிறுவனமா? அல்லது குழுவா?**

இல்லை, கலாசார அமைச்சின் செயலாளர், இயக்குனர் ஆகியோரால் கலாச்சார அமைச்சரின் அங்கீகாரத்துடன் தான் இக்குழுவினர் நியமிக்கப்படுகின்றனர்.

**அப்படிப்பட்ட மகாவம்சக் குழுவில் ஏன் சிங்கள பௌத்தர்களை மாத்திரம் கொண்டிருக்கிறது. ஏன் பன்முகத்தன்மை கொண்டவாறு மற்ற இன மதத்தவர்களை உள்ளடக்கப்படவில்லை?**

நான் ஏற்கெனவே கூறியது போன்று இக்குழுவில் இடம்பெற்றிருப்பவர்கள் தமது கருத்துக்களை எழுதவில்லை. தகவல்களைத் தான் தொகுத்து தந்திருக்கிறார்கள். அதன் பின்னர் மூன்று மொழியிலும் மொழியாக்கம் செய்யப்படும். பின்னர் தேவைப்படும் விமர்சனங்களை எவரும் வெளியிடலாம்.

வெவ்வேறு இனத்தவர்களை இணைத்துக் கொண்டால் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். பௌத்தத் துறவிகளால் எழுதப்படுகிற மரபொன்று தான் மகாவம்சத்துக்கு அதுவரை இருந்து வந்தது. இப்போது அதற்கென ஒரு சபை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் எழுதப்பட்ட எதுவும் பக்கசார்பாக எழுதபட்டதில்லையே.

**மகாவம்ச உள்ளடக்கத்தின் மீது ஏற்கெனவே இருக்கிற குற்றச்சாட்டுகளின் காரணமாகவே இந்தக் கேள்வியை எழுப்பினேன்!?**

நீங்கள் அறிந்தீர்களா தெரியவில்லை. இறுதியாக வெளிவந்த மகாவம்சம் குறித்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகர தன்னைப் பற்றி போதிய அளவு எழுதவில்லை என்று பாராளுமன்றத்தில் குற்றம்சாட்டியிருந்தார். இதற்கு என்ன பதிலைக் கூறுவது என்று என்னிடம் அமைச்சின் செயலாளர் கேட்டிருந்தார். மகாவம்சம் என்பது நபர்களைப் பற்றி எழுதுவதல்லவே. அது சம்பவங்களைப் பற்றிய பதிவு. நபர்கள் ஆற்றிய பாத்திரம் பற்றிய பதிவுகள் வரும் ஆனால் அப்பாத்திரங்களின் பணிகள் சரியா பிழையா என்பதைப் பற்றிய விமர்சனங்களை பதிவதில்லை. தகவல் பிழைகள் இருந்தால் எவரும் சுட்டிக்காட்ட முடியும். அப்படி இருந்தால் அதனை நாங்கள் பரிசீலிக்க முடியும். ஆனால் அவரைப் பற்றி குறைவாக எழுதபட்டிருக்கிறது, ஷவேந்திர சில்வா பற்றி அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது போன்ற விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

யுத்தம் நடத்தப்பட்ட அந்த ஒழுங்கில் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி ஒழுங்குபடுத்தியிருக்கிறோம். யுத்தத்துக்கு தயாரான விதம், திட்டமிடப்பட்ட விதம், வடக்கை நோக்கிய படை நடவடிக்கைகள் என்பவற்றை கவனமாக பதிவு செய்திருக்கிறோம்.

உங்களுக்கு தெரிந்திருக்கும், முதலாவது விஜயபாகு அரசரின் போர்த்தந்திரோபாய வழிமுறைகளைத் தான் இறுதி யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது மேற்குப் பக்கத்தில் இருந்தும் நுழைந்தார்கள். கிழக்குப் பக்கத்திலிருந்தும் நடுவி

லிருந்தும் ஊடறுத்து நுழைந்தார்கள். விஜயபாகுவின் போர்ப் பாதை பற்றிய விபரங்கள் கல்வெட்டுகளிலும் தெளிவாக உள்ளன. சோழர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக விஜயபாகு அரசன் முதலாவது தடவை போர் தொடுத்து வெற்றி ஈட்டினார். ஆனால் தக்கவைக்க முடியவில்லை. மீண்டும் பின் வாங்கி திரும்பவேண்டி வந்தது. இவ்வாறு மூன்று முறை கைப்பற்றியும் தக்கவைக்க முடியாமல் பின் வாங்க நேரிட்டது. இது தான் இங்கே நம்மவர்களுக்கும் ஏற்பட்டது. இதற்கு தீர்வு என்னவென நிதானமாக சிந்தித்தார் மன்னர் விஜயபாகு இறுதியில் அவர் தீட்டிய திட்டத்தின் படி படைகளை வழிநடத்தினார். அனுராதபுரத்துக்கு இடது பக்கத்தில் ஒரு படையை நிலை நிறுத்தி அங்கிருந்த நகர்த்தினார். வடக்கிலிருந்து படைகள் வந்தால் அதை தடுத்து நிறுத்தி சமர் புரிவதற்காக வவுனியா பக்கத்தில் ஒரு படையை நிறுத்தினார். அதன் பின்னர் சோழப் படைகள் தென்னிந்தியாவில் இருந்து வந்த இன்னொரு கடல் மார்க்கமான கிழக்கில் திருகோணமலை பகுதியில் அவர்களைத் தடுப்பதற்காக அங்கே ஒரு படையையும் நிலை நிறுத்தினார். இந்த தயாரிப்புகளுடன் நடுவில் ஊடறுத்து சென்றதுடன், சுற்றிவளைத்து சோழர்களை வெற்றிகொண்டு விரட்டியடித்தார் விஜயபாகு மன்னர்.

## அத தெரண நேர்காணலில் பேராசிரியர் மாலனி எந்தகம

அத தெரண தொலைக்காட்சியில் "Talk with Chathura" என்கிற வாராந்த உரையாடல் நிகழ்ச்சியில் மகாவம்ச உருவாக்கக் குழுவின் பிரதம செயலாளர் பேராசிரியர் மாலனி எந்தகமவுடன் ஒரு மணித்தியால மும் 12 நிமிடங்களைக் கொண்ட ஒரு உரையாடல் நிகழ்ந்தது. அதில் இப்படி ஒரு கருத்தை கூறுகிறார்.

கீழ் வகுப்புகளில் அதிக ஆழமான, விரிவான வரலாற்றுக் கதைகளைச் சொல்ல முடிவதில்லை. இப்படித்தான் எல்லாள மன்னனைப் பற்றிய விபரங்கள் குறைவு என்கிற குற்றச்சாட்டை தமிழர் தரப்பில் இருந்து அரசியல் தலைவர்களும், பல்கலைக்கழக மட்ட விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் தொடர்ச்சியாக முன்வைத்து வந்தார்கள்.

மகாவம்சத்திலும் துட்டகைமுனுவின் அத்தியாயத்தில் தான் எல்லாளனின் விபரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட குற்றச்சாட்டை அமைச்சருக்கு ஊடாக பரிந்துரைகளாக மகாவம்ச கமிட்டியிடம் சேர்க்கப்பட்டது. சுமார் பதினைந்து பேரைக் கொண்ட அக்குழுவில் நானும் இருந்தேன். பிரபல தமிழ் பேராசிரியர் பத்மநாதனும் எம்முடன் இருந்தார். அவர்கள் குறிப்பிட்ட அந்த 6 ஆம் ஆண்டுக்கான நூலில் சிறு பகுதி தான் எல்லாளன் பற்றி இருக்கிறது. 6 ஆம் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அதற்கு மேல் நாம் அதிகமாக உள்ளடக்கவும் முடியாது. இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தவர் பரிந்துரையாக இரண்டு பக்கங்களுக்கு எல்லாளனைப் பற்றிய விபரங்களை எழுதிக் கொண்டு வந்திருந்தார். அப்போது அங்கிருந்த



பேராசிரியர் பத்மநாதன் "இவற்றை நீங்கள் எங்கிருந்து பெற்றீர்கள்? இங்கே துட்டகைமுனுவைப் பற்றியும் இந்த அளவே இருக்கிறது. அப்படியிருக்கும் போது எல்லாளனைப் பற்றி அதைவிட அதிகமாக புகுத்துவது எப்படி. மேலும் 6 ஆம் வகுப்புக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு தான் அதில் உள்ளது.." என்று அப் பேராசிரியர் அவருக்கு விளங்கப்படுத்தி அந்தப் பிரச் சினையைத் தீர்த்தார். எனவே சில குற்றச்சாட்டுக்கள் அந்தளவு பொருத்தமானதல்ல. அத்தமிழ் பேராசிரியர் இதனை சரியாகக் கையாண்டதால் இந்தக் குற்றச் சாட்டில் இருந்து நாம் தப்பித்தோம்... தமிழினத்தைப் பற்றி அதிகமாக பதிவு செய்வது தமிழர்களுக்கு விருப்பம், அதுபோல சிங்களவர்களுக்கும் அதிகமாக தம்மை பற்றி பதிவு செய்வது விருப்பம். முஸ்லிம்களும் அதுபோலவே விரும்புவார்கள். ஆனால் மாணவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அவ்வளவு தான் கொடுக்கலாம்" என்கிறார்.

அடுத்த இரு கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் இவை.

**'கடந்த மகாவம்சத் தொகுதிகளில் ஒரு முக்கிய பாத்திரம் கதா நாயகராக முன்னிறுத்தும் போக்கைக் காண்கிறோம். மகா வம்சத்தின் 6 ஆம் தொகுதியில் யார் அப்பேர்பட்ட கதாநாயகன்? இறுதிப்போரை முடித்து வைத்தவர்கள் யார்? பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு உரிய இடம் என்ன?''**

இதை ஒரு இனப்பிரச்சினையாக நாங்கள் பதிவு செய்யவில்லை. இது ஒரு பிரிவினைவாதப் பிரச்சினை யாகத் தான் பதிவு செய்திருக்கிறோம். பயங்கரவாதப் பிரச்சினைகளைத் தான் வரைவிலக்கணப்படுத்திக் கொண்டு எழுதினோம்.

**மகாவம்சத்தின் முதல் பகுதியில் துட்டகைமுனு பற்றி கூறுகையில் அந்தப் போரில் பிரதான பாத்திரம் வகித்த தளபதி களான பத்து இராட்சகர்கள் குறித்து விரிவாக இருக்கிறது. அதுபோல இறுதி யுத்தத்தை வெல்ல வைத்தவர்கள் பற்றிய குறிப்புகள் உள்ளனவா?**

*ஆம், நிச்சயம் இருக்கிறது. மகாவம்சத்தின் 6வது தொகுப்பை ஆக்கும் போது அதற்கான அத்தனை கூட்டங்களிலும் நான் கலந்துகொண்டிருக்கிறேன். யுத்தம் பற்றிய விடயங்களை எழுதும்போது இராணுவத் தரப்பைச் சேர்ந்த பல முக்கிய அதிகாரிகளுடனும் நாங்கள் உரையாடியிருக்கிறோம். அவர்களின் பல ஆவணங்களைத் பரிசீலித்தோம். அதன்படி மகிந்த ராஜபக்ஷ : அவர் தான் இந்த யுத்தத்துக்கு தேவையான வளங்களையெல்லாம் பெற்றுக் கொடுத்தவர். அதை அவர் சரியாகச் செய்தார். பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய இராஜபக்ச மிகவும் திறம்பட யுத்தத்தை திட்டமிட்டு வழிநடத்தினார். இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒரு சிறந்த இராணுவ வீரர். அவர் தான் இராணுவத்தினரைக் கொண்டு யுத்தத்தை நடத்தினார். வளப் பகிர்வு, திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் இந்த மூன்று தளத்திலும் இம்மூவரின் கூட்டுப் பலத்துடன் தான் இந்த யுத்தம் வெற்றிகொள்ளப்பட்டது.*

*மாவிலாறில் இருந்து இந்த யுத்தம் தொடங்கப் பட்டது. இது தொடர்பாக முக்கிய மேஜர் ஜெனரல் ஒருவர் எம்மோடு எப்போதும் இந்தப் பணியில் ஒத்துழைத்திருந்தார். அவர் கூறும்போது இந்த யுத்தத்தை துட்டகைமுனு மன்னன் பொலன்னறுவை கைப்பற்றிய பாணியல் தான் யுத்த வியூகங்களை வகுத்ததாகக் குறிப்பட்டிருந்தார்.*

*விஜயபாகு மன்னர் சோழர்களிடம் இருந்து பொலன்னறுவயைக் கைப்பற்ற முயற்சித்து பல தடவைகள் பின்வாங்கி வர நேரிட்டது. இறுதியில் விஜயபாகு மன்னர் மூன்று படைகளை உருவாக்கி பொலன்னறுவைக்கு மேற்கினூடாக ஒன்று படையை யும் கிழக்குக்கு ஊடாக அடுத்த படையையும், நடுவில் ஊடறுத்து ஒரு படையையும் அனுப்பினார். அதற்கூடாக இந்தியாவில் மேற்குக்கு படையுதவிகள் வருவதும் தடுக்கப்பட்டன. கிழக்கில் இருந்தும் சமர்களால் நடுவுக்கு வர முடியவில்லை. நடுவில் ஊடறுத்துச் சென்ற விஜயபாகு மன்னர் இறுதியில் பொலன்னறுவை யில் கைப்பற்றினார். அதே வழியில் அந்த முன்னு தாரணத்தை வழிகாட்டலாகக் கொண்டு தான் இறுதி யுத்தம் வெல்லப்பட்டது.*

## மகாவம்சத்துடன் எனக்கு தொடர்பில்லை
## பேராசிரியர் சி.பத்மநாதன்

*பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களிடம் மேற்படி கருத்துக்கள் குறித்து உறுதி செய்வதற்காக ஒரு நேர் காணலைக் கண்டேன். அவர் தான் அக் குழுவில் இருக்கவில்லை என்றும் ஆனால் கட்டுரைகளை சமர்பித்தேன் என்று கூறினாலும், அவர் எழுதிய பகுதிகளை மகாவம்சம் எங்கும் தனியாக பதிவு செய்யவில்லை. மாறாக அவர் கொடுத்ததாகக் கூறுகின்ற கட்டுரைகளையும் மகாவம்சக் குழு தமக்குத் தேவையானவற்றைத் தரம்பிரித்து எடுத்தாண்டிருக்கிறது என்றே நாம் பொருள்கொள்ளலாம். அதன் அடிப்படையில் பேராசிரியர் பத்மநாதன் அவர்களும் இந்த மகாவம்சத் தொகுதியின் பங்காளராகவே பதிவு செய்துள்ளது மகாவம்சம். ஏற்கெனவே மனோ கணேசன் 2017ஆம் ஆண்டு அரச கரும மொழிகள் அமைச்சராக இருந்த காலத்தில் வெளியிட்ட* People of Sri lanka *என்கிற நூலில் முதல் கட்டுரை மாலனி பேராசிரியர் எந்தகம எழுதிய “சிங்கள சமூகம்”* (The Sinhala Community) *என்கிற கட்டுரை. இக்கட்டுரை குறித்து ஏற்கெனவே பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் தனது விசனத்தை தெரிவித்திருக்கிறார்.*

*பேராசிரியர் பத்மநாதன் அவர்களுடனான இந்த நேர்காணல் 2021 ஆம் ஆண்டு யூலை 26 ஆம் திகதி தொலைபேசியின் மூலம் எடுக்கப்பட்டது. நீண்ட நேர்காணலில் இந்த விடயத்துடன் சம்பந்தமில்லாத விடயங்கள் நீக்கப்பட்டு சுருக்கப்பட்ட நேர்காணல் இது.*

**மகாவம்சம் குழுவில் நீங்கள் அங்கம் வகித்ததாக அந்நூலில் காணக்கிடைகிறது அது சரிதானா?**

*இல்லை நான் அக்குழுவில் இருக்கவில்லை.*

**அந்நூலில் காணப்படுகிற பேராசிரியர் பத்மநாதன் நீங்கள் இல்லையா?**

*நான் அந்தக் குழுவில் இருக்கவில்லை. மகாவம்சத்தை அவர்கள் இப்போதும் எழுதி வரு கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட அந்தக் காலப் பகுதிக்குள் சைவ சமயம் பற்றி அவர்கள் என்னிடம் எழுதச் சொல்லி கேட்டதற்கிணங்க அதற்கு நானும் கட்டுரைகளை எழுதிக் கொடுத்தேன்.*

**இந்து சமயத்தைத் தவிர வேறெதைப் பற்றியும் நீங்கள் எழுதிக் கொடுக்கவில்லையா?**

*மகாவம்சக் குழுவில் அங்கம் வகிக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். நான் அதற்கு உடன்படவில்லை. மகாவம்சத்தோடு தொடர்புபட்ட ஆவணங்கள் பல்வேறு இலங்கை, பிரித்தானியா, நெதர்லாந்து, கோவா, ஜகார்த்தா போன்ற ஆவணக் காப்பங்களில் பரந்து உள்ளன. அங்கெல்லாம் பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் உள்ளன. அனால் இவர்கள் எழுதுவது ஒரு அரசாங்கத்தின் வரலாற்றை எழுதுவது போன்றது. இதைப் போய் பழைய மகாவம்சத்தொடு தொடர்புபடுத்தக் கூடாது.*

**எல்லாள மன்னனைப் பற்றிய விபரங்கள் குறைவு என்கிற குற்றச்சாட்டை தமிழர் தரப்பில் இருந்து அரசியல் தலைவர்களும், பல்கலைக்கழக மட்ட விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் தொடர்ச்சியாக முன்வைத்து வந்தார்கள் என்றும் அவர்களே இரண்டு பக்கங்களுக்கு எழுதிக் கொண்டு**

**வந்து தந்ததாகவும் பத்து பதினைந்து பேரைகொண்ட தமது குழுவில் வைத்து இதனை ஆராய்ந்ததாகவும் அந்தக் குழுவில் நீங்களும் இருந்ததாக பேராசிரியர் மாலனி எந்தகம தனது நேர்காணலில் குறிப்பிடுகிறார்?**

பாடப்புத்தகங்களில் உள் ளவை பற்றி டக்ளஸ் தேவானந்தா வுக்கு முறையிட்டதைத் தொடர்ந்து அவர் தான், தேசிய கல்வி நிருவகத் துடனும், கல்வி அமைச்சுடனும் உரையாடலை ஏற்படுத்தினார்.



**அப்படியென்றால் நீங்கள் மகாவம்ச குழு வின் சார்பாக கலந்து கொள்ள வில்லையா?**

இல்லை இல்லை. டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டின் பேரில் அதில் உள்ள குறைகளை சரி செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் கலந்துகொண்டோம். மகாவம்ச குழுவுக்கும் அதற்கும் சம்பந்த மில்லை. இது பாட நூல் பற்றியது.

இந்த உரையாடலில் என் னோடு பேராசிரியர் கிருஷ்ணராஜா வும் பேராசிரியர் புஷ்பரட்ணமும் வந் திருந்தார்கள். புஷ்பரட்ணம் அவ் வளவு பேசவில்லை ஆனால் கிருஷ்ணராஜா அதிகம் கதைத்தார். அதில் அவர் பிழையாக சில விடயங்களை கூறிவிட்டார்.

மாலனி எந்தகமாவை ஒரு சரியான வரலாற்றி ஆசிரியர் என்று கூற முடியாது. அவர் சிஹல உறுமய இயக்கத்தின் முக்கிய ஆதரவாளர். வரலாற்று ஆசிரியர் கள் பலர் இருக்கிற போதும் மாறி மாறி வரும் அரசாங்கங் கள் இவரைத் தான் இதில் வைத்திருக்கிறார்கள். வரலாற்றை புரட்டி பிழையாக எல்லாம் எழுதுகிறார்.

**இவற்றை எதிர்த்து நீங்கள் ஒருபோதும் குரல் கொடுத்த தில்லையா?**

கூட்டங்களுக்குப் போனால் தானே அதைப் பற்றி கதைக்க.

**பாடப்புத்தகங்களில் சரியான அளவு கணக்குகளில் தான் எல்லாளனுக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் விளக்கியதாக மாலனி எந்தகம கூறுகிறாரே.**

அங்கே கதைத்த விடயம் அதுவல்ல. எல்லாளனுக்கு ஒதுக்கிய இடம் போதும் என்றும் நான் கூறவில்லை. கிருஷ்ணராஜா சில பிழைகளை சொல்லி இருந்தார். எள்ளங்குளம் என்று ஒன்று வடமாராட்சியில் இருக்கிறதென்றும் அது எல்லாளனுடைய கட்டுமானம் என்றும் கூறினார். அதைத் தான் நான் அவ்வாறு எழுதப்படாது என்று மறுத்தேன். அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் எல்லாளன் ஆண்டதற்கான எந்த ஆதாரமும் இல்லையே. துட்டகைமுனு ஆண்டதற் கான ஆதாரமும் அங்கு இல்லை. ஆனால் துட்டகை முனு தான் இந்த தேசத்தை ஒரே நாடாக ஆக்கினார் என்கின்றனர்? இது வெறும் ஐதீகம் அல்லவா. எங்கே கல்வெட்டுண்டு? எங்கே வரலாற்று ஆதாரம் இருக் கிறது? அவர் ருகுணவையும், அனுராதபுரத்தையும் இணைத்து ஆண்டார் சரி, மலைநாட்டை ஆண்டதற்கு என்ன ஆதாரம் உண்டு? மேற்கு கரையோரத்தை ஆண்டதற்கான ஆதாரம் என்ன இருக்கு? வடக்கிலே என்னே ஆதாரம் இருக்கிறது? இவையெல்லாம் புத்தகத்தில சொல்றது அல்லோ... நீங்கள் அவர்களின் மாகாவம்சத்தை பொருட்படுத்தப்படாது!

தமிழருக்கு தாயகம் இல்லையென்று காசு கொடுத்து தான் எழுத வைக்கினம். தமிழர்கள் வரலாறு படிப்பதுமில்லை. ஈடுபாடு காட்டுவதுமில்லை. வரலாறு படிக்காவிட்டால் எமது தாயகத்தை நிரூபிக்கவும் முடியாது.


அதற்கு டச்சு, ஆங்கில ஆவணங்களை யெல்லாம் படிக்கவேண்டும். அன்றைய அறிக்கைகள், குடித்தொகை அறிக்கைகள் போன்ற அறிக்கைகளை யெல்லாம் படிக்க வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக் கழக வரலாற்றுத்துறை இதில் எதையும் செய்யவில்லை.

**ஒரு மூத்த வரலாற்று அறிஞராக மகாவம்சம் பற்றிய உங்கள் எதிர்வினைகளை நீங்கள் செய்ததில்லையா?**

எங்களிடம் கேட்டால் தானே அதைப் பற்றி சொல்லலாம். மகாவம்சத்தை இப்படி எழுதுவது பொருத்தமில்லை என்பதால் அதைச் சொல்லி அந்தக் குழுவில் இடம்பெறுவதை நான் மறுத்துவிட்டேன்.

இ. தியாகலிங்கம்-நோர்வே

# பால்புது



அச்சில் வார்த்து எடுத்தது போல் சக மனிதர்களும் இருக்க வேண்டும் என்று எண்ணுவது என்னைப் பொறுத்தவரை மனித அறிவீனம். மற்றவர்கள் சுதந்திரத்தில் தலையிடும் அத்துமீறல். என் அம்மாவிடம் தனக்கே சொந்தமான ஒரு உக்கிப்போன அற அச்சு இருக்கிறது. அதில் ஒழுக்கம் என்பதாகப் பல சகாப்தங்கள் பழமையான அவர் அறிந்த சரக்கைப் போட்டு, இன்றைய நவீன இளையோர்களின் நடத்தையை அளவிட முற்படுகிறார். அதற்காக முரண்டு பிடிக்கிறார். அந்த அன்னலட்சுமியை (உஸ்... அம்மாவிற்குக் கேட்டுவிடக் கூடாது) ஊரில் தனித்துப் போகாமல் ஒஸ்லோ மாநகரிற்கு எடுத்திருக்கிறேன்.

ஊரில் இருக்கும்போது அம்மா தொலைப் பேசியில் தொடர்பு கொண்டால் நான் எதிர்த்துக் கதைப்பதில்லை. ஓம் ஓம் என்று உற்சாகமாக கோரோஸ் பாடுவேன். எந்தப் பக்கம் அம்மா கதைக்கிறாரோ அந்தப் பக்கமே எனது பக்கம். அம்மா சொல்லைத் தட்டாத பிள்ளையாகக் கெட்டித்தனமாக சம்பாசனையை முடித்துக் கொள்வேன். அதுதான் அம்மா எதிர்பார்த்த மகன். அதையே, இன்றும், அம்மா நோர்வேக்கு வந்த பின்பும் நான் தொடர்கிறேன். ஆனால் அதில் ஒரு நெருடல் என்னிடம்.

ஊரில் அப்பாவின் அருகாமை அம்மாவைச் சாந்தமாக வைத்திருந்தது. அப்பாவின் ஆயுள், இயற்கை வசப்பட, அம்மா தனித்துப் போய்விட்டார். இருந்தும் நோர்வேக்கு வருவதற்கு உடனடியாகச் சம்மதிக்க வில்லை. தனியே இருக்கவிட எனக்கு மனதிருக்க வில்லை. அதைவிட ஊரின் வாயை எண்ணியும் எனக்குப் பயமாக இருந்தது.

அம்மா நோர்வேக்கு வந்தபோது மகனுக்கு பதின்மூன்று வயது. பேரனில் பாசம் இல்லாத பேத்தி இருக்க முடியுமா? எங்கள் வீட்டிலும் பேத்தியின் பாசமழை அடைமழையாகப் பொழிந்தது. அணைத்து அணைத்து பாட்டி முத்தம் கொடுக்க, அவன் பிடுங்கிக் கொண்டு ஓடுவது விளையாட்டாகவே இருந்தது. அதில் ஒன்றும் அதிசயம் இல்லை. அம்மா இறுக்கி அணைத்து முத்தம் வைத்ததால் அவன் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறான் என்கின்றமட்டில் இருந்தோம்.

அம்மாவிற்குக் குளிர் பிடிக்கவில்லை. வினோவுக்கு அம்மாவின் அடாவடிக் கட்டுப்பாடு பிடிப்பதில்லை. இருந்தும் பயத்தில் தவறியும் அவள் வாய் திறப்பதில்லை. அந்த வகையில் வீட்டில் தொடர் யுத்த நிறுத்தம்.

இரண்டு வருடங்கள் பூனைக்கு பயந்தோடும் எலியாக மறைந்து போய்விட்டது. விசாகனின் உலகம் எங்களை விட்டு விலகி விலகியே சென்றது. இது இப்படியும் நடக்கலாம் என்கிற எதிர்பார்ப்பு என்னிட மும் வினோவிடமும் இருந்தது. எங்களால் அவனை விளங்கிக்கொள்ள முடிந்தாலும், இங்கு வாழும் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் என்கின்ற கவலை அம்மாவிற்கு. அது வெறுப்பாகக் கெடுபிடியாக அடிக்கடி முறைப்பாக வந்தது.

இதுவே விசாகனால் வந்த முதலும் கடைசியு மான சோதனை என்று இருந்தபோது அவனால் இன்னு மொரு சிக்கல் மெல்ல மெல்ல அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அவனை அதற்குக் குற்றம் சொல்லும் பிற்போக்கான தந்தை அல்ல, நான். இயற்கை விதை

களைக் கால ஓட்டத்தில் அள்ளித் தூவுகிறது. அது எப்படிப்பட்ட பயிராகும் என்பது அதற்குத்தான் தெரியும். வினோவால் இந்த நவீன உலகை விளங்கிக் கொள்ள முடியும். புறநடையாக இருப்பது பல வேளை களில் சோதனை ஆகிவிடும். ஆனால் மாற்ற முடியாதபடி இயற்கை தந்துவிட்டதை எண்ணி மனம் வருந்துவது மனித மடமையே என்று எண்ணிக் கொள்வேன்.

விசாகனும், நிக்கலோயும் நெருங்கிய நண்பர்கள் என்றே நாங்கள் எண்ணியிருந்தோம். நிக்கலோய், வெட்டும் மென் பச்சைக் கண்களும், தென்னம் தும்பைச் சுருட்டியது போன்ற பொன் கேசமும், ஐந்தடி ஆறு அங்குல உயரமும் கொண்ட அழகான வாலிபன். அதில் கம்பீரம் ஜொலித்திருக்க வேண்டும். ஆனால் அவனில் ஒரு பெண்மை மெல்லத் தலை காட்டுவதை நான் பார்த்தேன். அது பெண்மையா அல்லது பலவீனமான ஆண்மையா என்கின்ற குழப்பம் தொடர்ந்தது. வினோ விடம் எனது ஐயத்தைப் பிரஸ்தாபித்தேன், அவள், பொறுமையாக இருங்க, தேவைப்படேக்க கதைக்கலாம் என்றாள். அது சரிதானா, இது உடல்கள் சம்பந்தப் பட்டவை என்பதைவிட ஆழ் மனங்கள் சம்பந்தப் பட்டவை. அதைப் பற்றிக் கதைப்பதற்கான தகுதியும், அறிவும் என்னிடம் இருக்கிறதா என்று சிந்தித்தேன். கதைத்தாலும் இதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. அதனால் பொறுமையாகக் கவனிப்பது என்று முடிவு செய்தேன். அதைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினேன்.

சில நாட்களின் பின்னர் நான் ஒரு மாலை வீட்டிற்கு வரும்போதுவீடு மயான அமைதியில் தவித்தது. அந்த அமைதியின் அந்நியம் என் வயிற்றை அளைந்தது. அம்மா என்னை நிமிர்ந்து பார்க்கவில்லை. அது அடுத்த பேரிடியாகியது. கெட்ட சகுனம் என்று கூட நினைத்துக் கொண்டேன். ஏன் என்று கேட்பதற்குத் தயக்கமாகவும், பயமாகவும் இருக்க அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். நான் மெல்ல நழுவி, வினோவிடம் சென்றேன்.

படுக்கை அறையில் வினோவின் மடியில் படுத்தபடி விசாகன் விசும்பினான். அவன் சிறிய பிள்ளையாக இருக்கும் போது ஏதாவது தான் நினைத்தது கிடைக்காவிட்டால் அழுவான். வளர்ந்த பின்னர் அவன் அழுது நான் பார்த்ததில்லை. மகன் அழுவது கண்டு இந்தத் தந்தையின் பாசம் மனதைக் கரைய வைத்தது. மெதுவாகச் சென்று அவர்கள் அருகில் இருந்தேன். அருகிலிருந்ததும் அவன் "பப்பா" என்ற வண்ணம் என்னைக் கட்டிப்பிடித்து அழுதான். என் தசையிலும் இரத்தத்திலும் பாதி அழுதால் என் கண்கள் என்னவாகும் "என்ன நடந்தது பிள்ளைக்கு நீ ஏன் அழுகிறாய்?" நான் அதீத இரக்கத்தோடு, கண்களை நீர் மேவ குரல் தழு தழுக்கக் கேட்டேன். வினோ கவலையோடு தலையைக் குனிந்து கொண்டாள். அதில் என் பாசத்தால் இந்தப் பிரச்சனை பூதமாக மாற வேண்டாம் என்கிற கவனமும் அக்கறையும் இருந்தது. விசாகன் நண்பன் போலத் தனது கருத்தை வெளிப்படையாகக் கதைப்பான். அது இங்கே உறவுகளுக்கு இடையே இருக்கும் சுதந்திரம். இன்றும் அம்மாவிடம் நான் எதைக் கதைக்கலாம் என்கின்ற தயக்கம் எனக்குண்டு. அந்த தயக்கத்தோடு இன்றும் படுக்கை அறைக்கு வந்துவிட்டேன்.

"பாட்டி அடிச்சா அப்பா" என்று கூறி விசாகன் தொடர்ந்து அழுதான். "பாட்டி அடிச்சாவா"நான் அதிர்ச்சியோடு கேட்டேன். வினோவின் கண்களைப் பார்த்தேன். நடந்த சம்பவம் உண்மை என்றன அவை.

எனக்கு விசாகனை எண்ணி இரக்கமாகவும் அம்மாவின் அறியாமையையும் அடத்தையும் எண்ணிக் கவலையாகவும் இருந்தது. "நான் பாட்டியோடை கதைக்கிறன் பாட்டி இனிமேல் அடிக்கமாட்டா இங்க அடிக்கிறது சட்டத்துக்கு புறம்பானது எண்டு பாட்டிக்கு விளங்கேல்ல. நான் தெளிவா விளங்கப்படுத்துறன். அது சரி, பாட்டி ஏன் உனக்கு அடிச்சவா" என்று கேட்டேன். அவன் என்னையும் வினோவையும் பரிதாபமாகப் பார்த்தான். வினோ என்னை அழுவாரைப் போலப் பார்த்தாள். பின்பு என் கண்களைப் பார்த்த விசாகன், அது நிக்கோலாய் வந்து இருந்தான். எனக்கு அவனைப் பிடிச்சு இருக்குது பப்பா, நானும் அவனும் இப்ப சாரஸ்த்தர் (காதலர்கள்). "அவன் கிஸ் பண்ணினான்" அதைப் பாட்டி பார்த்திட்டு கோபமாக வந்து கன்னத் தில அறைஞ்சு போட்டா. அதைப் பார்த்த நிக்கோலாய் பயத்தில அழுது கொண்டு ஓடீட்டான்" என்றான்.

எனக்கும் அவன் சொல்வது பாரமான சுற்றியல் ஒன்று தலையில் விழுந்ததான அதிர்ச்சியைத் தந்தது. அதை வெளியே காட்டிமேலும் அவனைக் கவலை கொள்ள வைக்கக்கூடாது என்பதற்காக நான் சமாதானம் சொல்லத் துவங்கினேன். எங்களால் ஏற்க முடிகிறதோ இல்லையோ இது அவன் தப்பு அல்ல. இயற்கையின் படைப்பு விசித்திரங்களில் ஒன்று, இதற்கான புரிந் துணர்வு வேண்டுமே தவிர எதிர்ப்போ அதிர்ச்சியோ அல்ல என்பது விளங்கியது. அது விளங்கினால்கூட அவனுக்கு எப்படிச் சமாதானம் சொல்வது என்று எனக்குக் குழப்பமாக இருந்தது. நான் சுலபமான சமாதானத்தின் மூலம் தற்போது அதைத் தணிக்க முயன்றேன். "சரி விசாகன்" நீ கவலைப்படாதை எதுக்கும் பயப்பிடாதை" நான் பாட்டியோட கதைக்கிறன். இனி பாட்டி அப்பிடிச் செய்யமாட்டா எண்டு நிக்கலோய் யிட்டச் சொல்லு" என்றேன். "சொன்னாலும் அவன் இனி பயத்தில வருவானா எண்டு தெரியாது" என்றான் விசாகன் கவலையாக.

விசாகன் அன்று ஞாயிறு காலை தாங்கள் படிக்கும் பாடசாலைக்குச் சென்றான். நிக்கலோயும் அங்கே வருவதாகக் கூறியிருந்தான். பாடசாலைக்குச் சென்றபோது சூரிய கதிர்கள் பொன் துகள்களாய் பூமியை நனைத்தன. அதன் கதகதப்பு விசாகனுக்கு காற்றில் பறக்கும் உணர்வைத் தந்தது. நிக்கலோய்யுடன் இந்த இதமான பொழுதில் சுற்றித் திரியலாம் என்கிற நினைவு அவன் மனதைப் பட்டாம்பூச்சி ஆக்கியது. விசாகன் பாடசாலைக்குள் வந்துவிட்டான். நிக்கலோய் தூரத்தில் வருவதையும் கண்டு கொண்டான். பாட

சாலையின் கொடிக்கம்பத்தில் பல வண்ண பால்புது "சுயமரியாதைக்"கொடி பறந்து கொண்டு இருந்தது. திடீரென குன்னார் ஓடி வந்து அந்தக் கொடியை இறக்க முயன்றான். அவன் சுதேசி என்றாலும் அதிக மத நம்பிக்கை கொண்டவர்களின் பிள்ளை. பைபிளை வசதிக்கு ஏற்ப விளங்கி வைத்துக் கொண்டு, வெறித்தன மான விசுவாசம் காட்டுவதாய் நடிக்கும் சிலரில், இவனது தாய் தந்தையரும் அடங்குவர். பெற்றோர் சொல் மிக்க மந்திரம் இல்லை என்பதாக இவன் செயற்பாடு.

கொடி இறங்காது சிக்கிக் கொண்டது. அவன் ஒரு கணம் பயித்தியம் பிடித்தவன் போல் நின்றான். மறுகணம் பிசாசு உடலில் குடியேறியவனாகக் கம்பத்தில் பாய்ந்து ஏறத் துவங்கினான். "இவனால் ஏற முடியுமா" ஏறி எங்களை, அவமானப்படுத்துவதால் மகிழ்ச்சி அடைவானா... நாம் என்ன செய்தோம் இவன் இந்த வெறியைப் பெற்றிட அந்த ஆண்டவன் இவனைக் காப்பாற்றட்டும் என்பதான விசாகனின் சிந்தனை முடிவதற்குள் நிக்கலோய் அருகில் வந்து அவன் கையைப் பிடித்தான். அதைப் பார்த்த குன்னார் மேலும் வெறி யோடு கோபமாகக் கம்பத்தில் ஏறினான். அவன் உச்சிக்கு ஏறி, ஆவேசமாகக் கொடியில் கை வைத்த போது "சாத்தானின் வேலை போல"தான் கம்பத்தில் இருக்கிறேன் என்பதை மறந்து போனான். அடுத்த கணம் கொடியோடு செத்த பறவை போல் நிலத்தில் வந்து விழுந்தான்.

முதலில் ஓடிவிடுவோமா என்று இருவரும் நினைத்தார்கள். அடுத்த கணம் நிலைமையையும், கடமையையும், உணர்ந்தவர்களாக... விசாகன் தனது திறன் பேசியை எடுத்து அம்புலன்சிற்கு அழைத்தான். நிக்கலோய் அவனுக்கு மூச்சு இருக்கிறதா என்று பார்த் தான். அவனுக்கு மூச்சு இருந்தது. கையில் பலவண்ணக் கொடி சிக்குப்பட்டுக் கிடந்தது. அதைப் பார்க்க அவனுக்குக் கோபமாகவும் கவலையாகவும் மனது இரைந்தது. கொடியைப் பறித்துக்கொள் என்று கோபம் உந்தினாலும், அவன் வலிந்து பொறுமை காத்தான்.

அம்புலன்ஸ் வந்தபோது காவலும் வந்தது. அம்புலன்ஸ் வந்த வேகத்தில் அவசரமாக அவனை அதில் ஏற்றியது. அப்போது அப்பாவியான கொடி, இரத்தக் கரைப் பட்டதாக அவனிடம் இருந்து மெல்லப் பிரித்து எடுக்கப்பட்டது. அதைப் பார்க்க இதயத்தில் குண்டூசி ஏறியதாய் இருவருக்கும் மனது வலித்தது. நாங்கள் வாழ இந்த நாடு இன்னும் மாற வேண்டும் என்று அவர் களுக்குத் தோன்றியது. வந்த காவல் மெல்ல இவர்களை விசாரிக்கத் துவங்கியது.

அம்மாவோடு கதைப்பதாகக் கூறிவிட்டேன். இருந்தும் எப்படிக் கதைப்பது என்கின்ற தடுமாற்றத்தில், தயக்கத்தில், இரண்டு நாட்கள் நீரில் போட்ட உப் பாயின. அம்மாவும் சூறாவளியின் மையம்போல வழமைக்கு எதிராக மௌனம் காத்தார். "கண்டிப்பதற் காக" தனது கருத்தை எடுத்துரைப்பதற்காக என்று ஓயாத வாய் இப்போது அமைதி விலங்கால் பிணைக்கப் பட்டதாய் திறவாது இருப்பது நிம்மதியைவிடப் பயங்கரம் தந்தது. ஆனால் இதற்கு ஒரு முடிவு காண வேண்டிய கட்டாயமும் பொறுப்பும் என்னிடம் இருந்தது.

அன்று மாலை தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு இருந்தபோது நான் அம்மா அருகே சென்று அமர்ந்தேன். அம்மா என்னை அருகில் முறைத்ததில் நான் நடுங்கிப் போய்விட்டேன். எனக்கும் அம்மாவுக்கும் இடையில் இருப்பது பயத்தோடு பாசம் கலந்த உறவு. இத்தனை வயதாகியும் எனது சொந்தக் காலில் நின்றும், அந்தப் பயம் கலந்த பாசம் ஆழ் கிணற்றின் நீர் போல, மனதின் அடியில் குணம் மாறாது கிடக்கிறது. இருந்தும் அம்மா முறைத்தால் எழுந்தோடும் நிலையில் நான் இன்றில்லை. மனதில் நினைத்ததைப் பட்டென்று சொல்லிவிட முடிவதும் இல்லை. இன்று எப்படியாவது கதைத்தாக வேண்டும். நான் "அம்மா" என்றேன். அம்மாவுக்கு மனவியல் தெரியும் என்று நினைக்கிறேன். "நீ எப்பிடியெடா பிள்ளையை வளர்த்து வைச்சிருக் கிறாய் "கிலிச கெட்டவன்" இன்னொரு பெடியின்ரை, கையைப் பிடிச்சுக்கொண்டு திரிகிறான், அதைவிட அவை, சீ... என்ரை வாயால உதையெல்லாம் சொல்ல முடியுமே" இப்பிடியே பாத்துக்கொண்டு இருக்க முடியாது. அவனைத் திருத்தி ஒழுங்கான வழிக்குக் கொண்டுவர வேணும். அம்மா நான் பேசத் துவங்க முதலே நீதிபதி தீர்ப்பு வாசிப்பது போலத் தனது முடிவை அறிவித்து விட்டார். இருந்தும் அந்த தீர்ப்பை இங்கு யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. "அம்மா"நீங்கள் உங்கட காலத்திலேயே உறைஞ்சுபோய் இருக்கிறியள். காலம் மாறீட்டுது. அதேமாதிரி மனித மனங்களை மூளையின்ர செயற்பாட்டை விளங்கிக் கொள்கிற விதமும் மாறீட்டுது. இது அவங்கடை பிழையோ விருப்பமோ இல்லை. இயற்கை அப்பிடிப் படைச்சு வைச்சிருக்குது. அதுக்கு ஏற்பதான் அவங்களால நடந்து கொள்ள முடியும். செய்யாத குற்றத்திற்குத் தண்டனை வழங்குகிறது போல நாங்கள் அவனை நடத்தக்கூடாது அம்மா, என்று சொல்ல வந்ததை முடிப்பதற்குள், "அப்ப நீங்களும் சேர்ந்தே இந்தக் கூத்தெல்லாம் நடக்குது. இதைப் பாத்துக்கொண்டு என்னால இருக்க முடியாது. இதுக்கு ஒரு முடிவு வேணும். பிள்ளையைப் பிள்ளை போல ஒழுக்கத்தோட வளர்க்க வேணும்" என்றார்.

எனக்கு, முதலில் கோபம் வந்தது. என்ன செய்வது என்று விளங்கவில்லை. நான் மூச்சிளந்த மனிதனாய் சிறிது நேரம் திகைத்துப்போய் அம்மாவைப் பார்த்துக்கொண்டு இருந்தேன். பின்பு மெதுவாக "நீங்க என்ன கதைக்கிறன் எண்டதை அறிஞ்சுதான் கதைக்கிறி யளா அம்மா "என்ன எண்டாலும் சமாளிச்சுத்தான் போக வேணும். குழந்தைப் பிள்ளையளோட போட்டிக்கு நிற்கிறதே" என்று கேட்டேன். "பெடியை ஒழுங்கா வளர்க்கச் சொன்னா, நீ எனக்குப் புத்திமதி சொல்லு றாயாக்கும், நான் இந்தச் சீர்கேடுகளை எல்லாம் பாத்துக் கொண்டு இருக்க முடியாது. நான் முடிவைச் சொல்லிப் போட்டன். இனி அது உங்கட பொறுப்பு"என்றார் அவர்.

"என்ன அம்மா கதைக்கிறியள்"என்றேன்.

"நான் கதைக்கிறது இன்னும் உனக்கு விளங்கேல்லையே" என்றார் அம்மா. மரமண்டை என்று கூறிக் குட்டு வைத்தது போல வலித்தது. மெல்ல ஊமைக் கோபம் சுள்ளென அரும்ப "நான் யாரையும் சட்டத் திற்கும்"மனசாட்சிக்கும் விரோதமாக கட்டாயப்படுத்த மாட்டேன். அது மகனுக்கும் பொருந்தும் "அம்மா விற்கும் பொருந்தும்" என்றுவிட்டு எழுந்து சென்றேன். ஊரில் ஓடித்திரிந்த அம்மாவிற்கு ஒஸ்லோ வாழ்க்கை நவீன சிறை என்பது எனக்குத் தெரியும். அம்மாவின் இந்தப் பிடிவாதம் எதிலிருந்து விடுபடுவதற்கு என்கின்ற குழப்பம் என்னிடம்.

அதற்கிடையில் விசாரணைக்கு என்று விசாகனிடம் காவல் மீண்டும் வந்தது. அம்மாவிற்கு அது தான் தீர்க்கதரிசி என்கின்ற எண்ணத்தைக் கொடுத்தது. அதை நான் அவர் கண்களில் பார்த்தேன்.

அம்மா அடுத்த கிழமை ஊருக்குப் புறப்பட்டு விட்டார். அதை அறிந்தது துவக்கம் வினோ பல சமாதானங்களைச் சொல்லிப் பார்த்தாள். எதுவும் அம்மாவிடம் எடுபடவில்லை. "அப்பாச்சி போவதற்கு நான் காரணமா" என்று விசாகன் அழுதான். உண்மை அது அல்ல, அம்மாவிற்கு ஊர் ஞாபகம் வந்துவிட்டது என்றும், நீ அதற்கான குற்ற உணர்வை உன் தலையில் போட்டுக் கொள்ளாதே என்றும், நான் அவனுக்குச் சமாதானம் கூறினேன். அவனால் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதைக் கவலை வடியும் அவன் வதனம் காட்டியது. பின்னர் ஏக்கத் தோடு, "பாட்டியாவது என்னைப் புரிஞ்சு கொண்டு இருக்கலாம்" என்றான். அவன் அதைச் சொல்லி இருக்கா விட்டாலும், பாடசாலைச் சம்பவமும்,அதைப் போன்ற சம்பவங்களும் அவன் மனதை வருத்துகிறது என்பதை நான் அறிவேன். மனிதர்களும் அடிப்படையில் மிருகங் களே. அவர்களுக்கு விசேஷமாக இயற்கையால் கொடுக் கப்பட்ட மூளை அவர்களை மற்றைய மிருகங்களி லிருந்து பலவேளை வித்தியாசமாகச் சிந்திக்க வைக் கிறது. சிலவேளை மனிதனும் தனது பாதுகாப்பு கருதியோ, மற்றவரைத் தாக்க எண்ணும்போதோ, அல்லது சுய ஆதாயத்தால் உந்தப்பட்டோ, உணர்ச்சி வசப்பட்டோ, அவன் அந்த மிருக நிலைக்கு மாறி விடுகிறான். அந்த நேரங்களில் காட்டு மிருகங்களிடம் இருந்து எங்களை எப்படிப் பாதுகாத்துக் கொள் கிறோமோ "அப்படி அல்லது அதைவிட மேலும் தந்திரமாக எங்களை அவர்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதற்காகக் குந்தியிருந்து கவலைப் படுவதால் எந்த பிரயோசனமும் இல்லை" என்றேன்.

"இவ்வளவுதானா மனிதர்களும் அவர்களின் மனிதாபிமானமும் என்று கேட்டான்.

"அவ்வளவே ஆனால் அது ஒரு சில மனிதர் களுக்கு மட்டுமே பொருந்தும். அதனால் நாங்கள் போராடி என்றாலும் வாழத்தான் வேண்டும்" என்றேன்.

அவன் தெளிவோடு எழுந்து தனது அறைக்குச் சென்றான்.

# குழுக்களின் இராஜாங்கமும் குடிபெயரா பெருஞ்சாளிகளும்..!

எல்லா....
நெல்லுப் பத்தாயங்களிலும்
எலிகளின் பெருக்கம்
ஏகபோகமாக.

கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட
பூனைகள் பட்டாளங்கள்
அவ்வப்போது பத்தாயங்களில்
அதிரடியாக குதித்து
சில எலிகளைப் பிடித்து
அறிக்கை தயாரித்து சமர்ப்பித்து
ஊதியத்திற்கு மேல்
ஊதியம் பெற்று உலாவந்தபோதும்
நெல்லு மூட்டைகளின் சேதம்
நின்றுவிடக் காணோம்.


பெருஞ்சாளிக் கூட்டங்கள்
பெருமெடுப்பில் ஒன்று கூடி
தலைமைப் பூனைகளுடன்
சமரசம் செய்து அவற்றின் கழுத்துக்களில்
எப்படியோ பெரிதாக
"மணி "கட்டிவிட்டதால்
பூனைகள் குழுக்களுக்கோ
இரட்டை வருமானம்.

நெல்லுப் பத்தாயங்களில்
எலிகளின் இராட்சியம்
இற்றைவரை
மென்மேலும் கலகலப்பாக..!

இப்பொழுதோ...
அந்தப் பூனைகள் குழுக்களை
கண்காணிக்க
வேறோர் குழுவை நியமிக்க
மந்திராலோசனை..!

- ஷெல்லிதாசன்

# கவனத்தை ஈர்க்கும் அறிவியல் புனைவு
# "வனமெல்லாம் புதிர்"




சிவகுருநாதன் கேசவன்

அண்மையில் வெளிவந்திருக்கும் 84 பக்கங்களினாலான "வனமெல்லாம் புதிர்", ஒரு அறிவியல் புனைகதை நூல். உருத்திரபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த ஜனகா நீக்கிலாஸ் என்ற இளம் எழுத்தாளரால் எழுதப்பட்டு, அதேயிடத்தைச் சேர்ந்த அம்பலம் பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது. இவற்றைத் தவிர நூலாசிரியரைப் பற்றியோ ஏனைய பின்னணிகள் பற்றியோ எந்தக் குறிப்பும் நூலில் இல்லை. நூலைப் படிக்கையில் நூலாசிரியர் இயற்கை மீது ஈடுபாடு கொண்டவர் என்பதனையும் படைப்பாற்றலுடையவர் என்பதனையும் ஊகிக்கமுடிகிறது. இந்த நூலின் அட்டையில் "அறிவியல் புனைகதை" எனக் குறிப்பிடப் பட்டிருந்தமையே நூலை விரைந்து வாசிக்கத் தூண்டியது எனலாம். இலங்கையில், அறிவியல் புனைவுகள் தமிழில் வருவது மிக மிக அரிது.

அறிவியல் புனைவு என்பது அறிவியல் முன்னேற்றம் மற்றும் அறிவியல் சித்தாந்தங்களைத் தன் கருவில் ஒரு பாகமாகவோ அல்லது பின்புலமாகவோ கொண்ட புனைவு. குறிப்பாக வருங்கால அறிவியல் சாத்தியக் கூறுகளை உள்ளடக்கியது எனக் கூறப்படுகிறது. அறிவியல் கூறுகளை ஏதோவொருவகையில் தன்னகத்தே கொண்டுள்ள புனைவு என அதனைக் கூறலாம். ஆனால் அதன் தர்க்க முறைமை அறிவியல் சார்ந்து இருக்கவேண்டியதில்லை; இருக்காது. அறிவியலின் தர்க்கத்தைப் போல புனைவுபடுத்தி கதைக்குள் / படைப்புக்குள் ஒன்றைக் கட்டமைக்கும் முயற்சியாக அது அமையும். பொதுவாக யதார்த்தத்தை மீறிய புதிய உலகங்கள் இங்கு உருவாக்கப்படும். அவை ஏதோவொரு வகையில் ஊகத்தை முன்வைக்கும். சுசித்திரா இராமச்சந்திரன் குறிப்பிடுவதனைப் போல அறிவியல் புனைவு என்பது, அறிவியல் மற்றும் கலை / இலக்கியம் என்ற முரணியக்கம் சார்ந்து இயங்கும் வடிவம். அறிவியல் ஞானமும் புத்தாக்க முனைப்பும் படைப்பாற்றலும் ஒருங்கே கைவரப்பெற்ற ஒருவரிடத் திலேயே சிறந்த அறிலியல் புனைவுகள் சாத்தியமாக முடியும்.

"வனமெல்லாம் புதிர்", எமது நாட்டின் ஒரு இளம் எழுத்தாளரின் அறிவியல் புனைகதை முயற்சி என்ற வகையில் கவனிப்பிற்கும் வரவேற்பிற்கும் உரியதாகிறது. 14 அத்தியாயங்களைக் கொண்ட அந்நூலின் முதல் ஐந்து அத்தியாயங்கள், சுற்றுலாச் சென்ற பாடசாலைச் சிறுவர்கள் சிங்கராஜா வனத்தில் கழித்த நாளை விபரிப்பதாக அமைகின்றன. சிங்கராஜா வனத்தின் அதிசயங்கள், காட்டுப் பயணத்தின் சிரமங்கள், திகில் நிறைந்த சந்தர்ப்பங்கள் என்பவற்றை சுவாரஷ்யமாகத் தருவதோடு இரத்தங்குடிக்கும் அட்டை, நெப்பந்தீஸ் தாவரம் என்பவற்றை அறிமுகப்படுத்தும் அவ்வத்தியாயங்கள் அறிவியல்சார் புனைவுக்கான பின்னணியை அமைத்துத்தருகின்றன. கதாசிரியையின் சித்திரிப்புத் திறனும் மொழியாற்றலும் இவ்வத்தியாயங்களுக்கு இலக்கியத்தகுதியைத் தந்துவிடுகின்றன. 5ஆம் அத்தியாயத்தின் முடிவில், "அந்த பஸ்ஸுக்குள் அவர்கள் மட்டும் பயணப்படவில்லை, அவர்களுக்கும் அவர்களின் ஊருக்கும் உலைவைக்கும் பெரும் அபாயமும் சேர்ந்தே பயணித்துக் கொண்டிருந்தது" எனக் கதாசிரியர் தரும் தகவல் அடுத்த அத்தியாயங்களில் வரப்போகும் அறிவியல்சார் புனைவிற்கு கட்டியங் கூறிநிற்பதோடு மறைபொருளை / எதிர்பார்ப்பை (suspense) முன்னிறுத்தி வாசகர்களை கதையின்பால் இழுத்தும் செல்கிறது.

"குளக்கரை ரகசியம்" என்ற தலைப்பிலமைந்த ஆறாவது அத்தியாயம், ஜெயந்திபுர ஊரின் குளக்கரையில் ஆகாஷும் மகிழ்நனும் சிங்கராஜ வனத்திலிருந்து கொண்டுவந்து வைத்த நெப்பந்தீஸ் தாவரம் ஒரு வாரத்தில் பெரும் உருவத்தோடு வளர்ந்திருப்பதை விவரிக்கிறது. சிங்கராஜ வனத்தில் நாலைந்து அங்குலமே வளர்ந்திருந்த நெப்பந்தீஸ் பூ இங்கு நாலடி உயரத்தில் இருப்பதனைக் கண்டு ஆச்சரியமடைந்த நண்பர்கள் ஆகாஷும் மகிழ்நனும் "பேராசிரியர் சொன்னவரெல்லோ, சிலவேளை சூழல் மாறினால் அதின்ர உருவமும் மாறும் எண்டு. அதனால தான் இப்படியோ?" எனக் காரணத்தைச் சிந்தித்த அதேவேளையில் பேராசிரியர் அதன் இயல்பும் மாறும் எனக் கூறியதும் ஞாபகத்திற்கு வர, "பூச்சிகளைப் பிடிக்கிறதுக்குப் பதிலா ஆக்களைப் பிடிச்சுத்தின்ன

வெளிக்கிட்டா..?” எனப் பயம் தொற்ற, ராட்சத நெப்பந்தீஸ் மலர்கள் இவர்களை நோக்கித் திரும்ப இருவரும் ஓடத் தொடங்கினர். இதனோடு ஆறாம் அத்தியாயம் முடிய “ஊரெல்லாம் பேரச்சம்” என்ற ஏழாம் அத்தியாயம் தொடங்குகிறது.

முதல்நாள் பத்துப் பதினைந்து ஆடுகளும் இரண்டாம் நாள் இருபது ஆடுகளும் காணாமல் போயிருந்தமை அதிர்ச்சிதரும் செய்தியாக ஏழாம் அத்தியாயத்தில் ஊரைக் கலக்கியது. தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் இந்தப் பரபரப்பும் மர்மமும் குறைந்துவிடாது விறுவிறுப்புடன் கதையை அலாதியாக ஆசிரியர் வளர்த்துச் செல்கிறார். ஆகாஷ், மகிழ்நன் மற்றும் நண்பர்களும் நெப்பந்தீஸ்தான் ஆடுகளைக் விழுங்கியிருக்க வேண்டும் என நினைக்கிறார்கள்ளூ வாசகர்களும் அவ்வாறே கருதுகிறார்கள். ஒன்பதாவது அத்தியாயத்தில் ஆடுகளினதும் நாய்களினதும் சதை உறிஞ்சப்பட்ட வெறும் எலும்புகளாக எஞ்சிய உடலங் கள் கண்டெடுக்கப்பட்ட போது நெப்பந்தீஸ் விழுங்கி யிருந்தால் இவ்வாறு உடலெச்சங்கள் வெளியே துப்பப் பட வாய்ப்பில்லையே என சில வாசகர்களுக்காவது எண்ணத் தோன்றியிருக்கும். என்னயிது கதாசிரியர் பொருத்தமற்றவாறு கதையை நகர்த்துகிறாரேயெனவும் தோன்றியிருக்கலாம். ஆனால் இறுதியில் அற்புதமாக இச்சந்தேகங்களை நீக்கியுள்ளார் ஜனகா.

பத்தாவது அத்தியாயத்தில் குளத்துக்கருகில் இருந்த சதுப்புநிலம் புதைசேறாக மாறியிருப்பது தெரிய வருகிறது. பதினொராவது அத்தியாயத்தில் பேராசிரியர் ஊருக்கு வருகிறார். ஏற்பட்ட அழிவுகளுக்கு நெப்பந்தீஸ் காரணமில்லை எனப் பேராசிரியர் கூறுகிறார். அவற்றிற் குக் காரணம் இரத்தங்குடிக்கும் அட்டையே என்பதும் அதனை ஊருக்குக் கொண்டுவந்தவன் தமிழவன் என்பதும் நெப்பந்தீஸூம் அட்டையும் இங்கு இயல்பை மீறிப் பெரிதாக வளர்ந்தமைக்கான காரணமும் அடுத்த இரு அத்தியாயங்களில் தெரியவருகின்றன. ஊரில் புதிய பரிணாமத்தோடு வளர்ந்திருக்கும் நெப்பந்தீஸ் நுளம்பு களை விழுங்கியிருப்பதை அவதானித்த பேராசிரியர் மலேரியா, டெங்கு நோய்கள் அதிகமாகப் பரவும் இடங்களில் இத்தகைய நெப்பந்தீஸ்களை வளர்த்தால் இயற்கைமுறையில் அவற்றைக் கட்டுக்குள் கொண்டுவரமுடியுமாதலால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் இயற்கையான பொறிமுறை சிறுவர் களால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவதோடு கடைசி அத்தியாயம் நிறைவுபெறுகிறது.

அறிவியல் முடிச்சுக்களோடும் எளிமையான தாயிருந்தாலும் அறிவியல் சார்ந்த ஊகத்தோடும் பின்னப்பட்டுள்ள இக்கதை மர்மமும் விறுவிறுப்பும் நிறைந்த கதை நகர்த்தல், சிறந்த விவரிப்பு, பொருத்த மான மொழியாட்சி முதலியவற்றால் அறிவியல் புனை கதையாகும் தகுதியைப் பெற்றுவிடுகிறது. பாத்திர வார்ப்பும் பாத்திர உரையாடல்களை வளர்த்த பாங்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கும் முறைமையும் ஜனகாவை தேர்ந்த படைப்பாளியாக முன்னிறுத்து கின்றன. ஆனாலும் சில இடங்களில் ஏற்படும் நெருடல் களையும் தவிர்க்க முடியவில்லை. ஆறாம் அத்தியா யத்தில் ஏற்பட்டுள்ள காலக்குழப்பம் வாசகர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்திவிடுகிறது. ஆரம்பத்தில் சுற்றுலாவின் அடுத்தநாள் வகுப்பறையில் நடைபெறும் உரையாடலில் “பின்னேரம் ரியூசன் இருக்கு அது முடியப்போவம்” என மகிழ்நன் கூறுவதைத் தந்துவிட்டு, (நட்சத்திரக் குறி போடப்பட்டிருப்பினும்) மாலை நான்கு மணியைத் தாண்டிவிட்டது. ஆகாஷ்/க்காக குளக் கட்டோரமாகக் காத்திருந்தான் மகிழ்நன்” என ஒருவாரம் கழித்து நடந்த சம்பவத்தைத் தந்திருப்பது சிறு குழப்பத்தை ஏற்படுத்திவிடுகிறது.

இந்தக் கதை சிறுவர்களை /மாணவர்களை பிரதான கதாபாத்திரங்களாகக் கொண்டகதை. சிறுவர்கள் வாசிப்பதற்கு ஏற்ற கதை. அந்நிலையில் கதையில் ஏற்பட்டிருக்கும் விழுமிய முரண் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. சிங்கராஜ வனத்திலிருந்து எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தும், அதுபற்றி ஆரம்பத்திலேயே தெளிவான அறிவுறுத்தல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் ஆகாஷ், மகிழ்நன், தமிழவன் ஆகியோர் அதனை மீறியுள்ளார்கள். இது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனாலும் அவர்கள் தண்டிக்கப்படவோ குறைந்தபட்சம் கண்டிக்கப்படவோ இல்லை. மாறாக எதிர்பாராமல் நடந்த நன்மைக்காக விருதுக்குப் பரிந்துரை செய்வதா கக் கூறப்படுகிறது. இது அறிவியல் புனைவு என்ற அடிப் படையில் பிரச்சினையில்லாமல் இருந்தாலும் சிறுவர் கள் வாசிப்பதற்கான நூல் என்ற அடிப்படையில் அவர் களிடையே எதிர்மறையான மனநிலையை ஏற்படுத்தி விடவுங்கூடும். இவற்றை நீக்கிவிட முடியு மாயின் “வன மெல்லாம் புதிர்” ஒரு சிறந்த படைப்பு என்பதில் சந்தேக மில்லை. ஜனகா நீக்கிலாஸிடமிருந்து தரமான அறிவி யல் புனைவுகளைத் தொடர்ந்து எதிர் பார்க்கிறோம்.



பொலிகைஜெயாவின் இருநூல்கள் வெளியீடும் ஈன்றோர் நினைவகம் திறப்பும் 24.8.2024 அன்று கொற்றாவத்தையில் நடைபெற்றது. க.தர்மதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளியீட்டுரையை கொற்றை பி.கிருஷ்ணானந்தன் அவர்களும் நயப்புரைகளை கலாநிதி சு.குணேஸ்வரன், பொலிகையூர் சு.க.சிந்துதாசன் ஆகியோரும் நல்கினார்கள். நன்றியுரையை பொலிகை ஜெயா தெரிவித்தார்.

# புரியாணிச் சாப்பாடு

**கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்**

சில நாட்களாக மனைவி நச்சரித்துக் கொண்டிருந்த விடயத்தைப் பற்றிச் சிந்தித்தவாறு கட்டிலில் சாய்ந்திருந்தான் ரமீஸ்.

விட்டுவிட்டு மழை பெய்து கொண்டிருந்தது. ஹஜ்ஜூ மழையென ஊரில் சொல்வார்கள். வெசக் மழையென அவர்கள் சொல்வார்கள்.

மற்றைய நாட்களில் இப்படிக் கட்டிலில் சாய்ந்தால் போதும், அவனை அறியாமலேயே கைபேசி கைக்கு வந்துவிடும். மனைவி வலியுறுத்திக் கொண்டிருக்கும் விடயம் மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தது.

எவ்வளவுதான் மழை பெய்தும் வெக்கை குறைவதாக இல்லை. உடம்பெல்லாம் அரிப்பு வேறு. மின்விசிறியின் விசையைக் கூட்டிவிட்டு மீண்டும் கட்டிலில் சாய்ந்தான்.

கடந்த ஒரு வாரமாக வியாபாரத்துக்கும் செல்லவில்லை. செல்லவில்லை என்பதை விடவும் மழையினால் வெளியிறங்க முடியவில்லையென்பதே பொருத்தம். வழமையாக வியாபாரத்துக்குச் செல்லும் ஹங்வெல்ல, கொஸ்கம பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. இருந்துவிட்டு ஒருநாள் செல்லும் மற்றைய ஷரூட்களும் இதே மாதிரிதான். வங்காள விரிகுடாவில் ஏற்பட்டதாகக் கூறப்படும் தாழமுக்கத்தின் தாக்கம் அப்படி!

நாட்டுப் புறங்களுக்குப் போய்ச் சேர்த்த ரியால் மூலம் கிடைத்த இலாபத்தைக் கொண்டு வாங்கி வைத்திருந்த பால்மா, அரிசி, மற்றும் சில்லறைச் சாமான்கள் எப்போதோ முடிவடைந்து விட்டன. இடையில் வெசக் லீவும் வந்ததனால் இன்றோடு பத்தாவது நாளாக வியாபாரத்துக்குப் போக முடியாமல் வீட்டில்.

கைபேசிக்கு வந்திருந்த மின்கட்டண சிவப்பு நோட்டீஸ் மனதைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. ஆறு மாத நிலுவை முப்பத்தையாயிரம். தண்ணீர்பில் வேறு.

“புள்ளகளுக்கு எவளவோ நாளா எறச்சி ஒரு துண்டு வேங்கி குடுக்க கெடச்சில்ல. தானமழ உடுகியோமில்ல. நாளக்குசரி வெளியெறங்கிப் பெய்த்து எவளவு சரி தேடிக்கொண்டு வரோணும்....” என மனதில் நினைத்துக் கொண்டபோது மனைவியின் குரல் கேட்டது.

“அன்ன பெரியதாத்தா கோல் பண்ணின எப்பகன் அத செய்தெண்டு? மத்தெல்லாருமே ரெடி, நாங்க மட்டும்தான் இழுத்திருத்திருச்சிய. நாப்பதாம் கத்தமும் கிட்ட”

ரமீஸ் வாய் திறந்து ஒருவார்த்தை சொல்லவில்லை. மீண்டும் அவளே தொடங்கினாள். ”இப்பிடியிருந்தா சரிவாரோ? மானம்தான் போற.....”

மனைவி நச்சரிக்கும் விடயத்தைக் குடும்பம் சார்பாகத் தனியாகவே செய்யக்கூடிய வசதி அவளது பெரிய தாத்தாவுக்கு. சின்ன தாத்தாவும் கார், வீடென மகாலட்சுமிதான்.

திடீரென மீண்டும் பெருமழை கொட்டத் தொடங்கியது. கூடவே, கூரையின் ஒருபக்கம் ஒழுகத் தொடங்கியது.

பழைய சிங்கள ஓட்டுக் கூரை காலாகாலத்தில் பழுதுபார்க்கப் படாததனால் பறால, பால்க என்பன பல இடங்களிலும் இத்துப்போய்க் காணப்படுகின்றது. கையை வைத்தால் எங்கு போய் முடியுமோ தெரிய வில்லை. படையெடுத்துக் கொண்டிருக்கும் பிச்சைக் காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் நேற்று முன் கதவை லொக் போட்டு மூடி வைத்தது அவனுக்கல்லவா தெரியும்!

அப்படியொன்றும் பெரிய வியாபாரியல்ல ரமீஸ். நாட்டுப் புறங்களுக்குப் போய் அந்தந்தக் காலங்களில் கிடைக்கக் கூடியவற்றைச் சேகரித்து வந்து மொத்த வியாபாரிகளுக்கு விற்பதனால் கிடைக்கும் வருமானமே குடும்பத்து வாழ்வாதாரம். மழை, அதுஇதுவென இப்படித் தடங்கல்கள் ஏற்பட்டுவிட்டால் பெரும் பாடுதான். ஊரிலும் அதிகமானவர்கள் இந்த வியாபாரத்துக்குப் பழக்கப்பட்டு விட்டதனால் அதிலும் போட்டி. பெரிய அளவில் செய்வதற்கு மூலதனமும் போதாது. பழைய நைண்டி பைக்கும் அதற்குத் தோதாக அமையாது.

“என்தேன் நீங்க பேசாமிருச்சிய? - கோப்பி கோப்பையுடன் வந்த மனைவி மீண்டும். இரவுச் சாப்பாட்டுக்குப் பாண் வாங்க வியாபார முதலில் கைவைப்பதா எனச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் இப்படியொரு கேள்வி. ஏற்கனவே வியாபார முதல் கரைந்து கரைந்து அரைவாசிகூட இல்லை.

“பெரிய தாத்தா அரிசியேம் கோழியேம் பாரமெடுத்த. நானா கிரீன்பீஸ், அச்சாறு, மாசி பொரியல

பொறுப்பெடுத்த. சின்தாத்தா வட்லாப்பம் சில்லறகள எடுத்துகொண்ட. உம்மா சேத்து வெச்ச சல்லிய தாராம் கோகீக்கு குடுக்கியதுக்கு. எங்களுக்கு எறச்ச பார மெடுக்க செல்லிய .... ”

“ஒனக்கு மூளில்லயோ?” - வந்த கோபத்தில் உரத்துக் கேட்டுவிட்டான். மனைவி அழுவது கேட்டது.

மனைவியின் தாய்மாமா மௌத்தாகி மாமி இத்தாவில். ”இத்தால இருச்சிய பொம்புளகளுக்கு குடும்பத்தாள்க ஒத்தொத்தர் சாப்பாடாக்கிக்கொண்டு போறது வழம。 தூரத்து தாய்புள்ளகளேம கொண்ட ரோட்டு எங்கட குடும்பம் அப்படியொண்ட செய் யாட்டி மாற வெக்கம்.” - சில நாட்களாகவே மனைவி உச்சரித்துக் கொண்டிருக்கும் வாய்ப்பாடு இது. பிள்ளை கள், மருமக்கள், பேரன் பேர்த்திகள். சகோதரர்கள், சம்பந்தி வீடுகளென மாமியின் குடும்பம் மிகப் பெரியது. குறைந்தது பத்து ஸஹனுக்காவது சாப்பாடு அனுப்ப வேண்டும். புரியாணி, பிறைட் ரைஸ் என ஸ்பெஷலாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, தாங்கள் புரி யாணி அனுப்பப் போவதாக மனைவியின் சகோதரர் கள் தங்களுக்குள் கூடி முடிவு செய்துகொண்டனர். “மாம தானே எங்களுகள்ட கலியண டைன்லேம் முன்னிண்டு வேலகள பாத்துகேட்டு செஞ்சது. உம்மவ கலியணம் புடிச்சி குடுத்ததும் அவர்ட செலவில தானாமே ...” என ஆளுக்கொரு காரணமும் சொல்லிக் கொண்டனர்.

ஊர் வழமை சமூக வழமை எப்படிப் போனா லும், மையத்து வீட்டாருக்கு மூன்று நாட்களுக்கு உணவு ஏற்பாடு செய்வது சமூகத்துக்கு மார்க்கம் விதித்திருக்கும் கடமை. இதை நன்கறிந்தவன்தான் ரமீஸ். மாமாவுக்கும் குடும்பத்துக்குமுள்ள பிணைப்பும் அவன் அறிந்ததே. விருந்துபசாரத்துக்கு விருப்பம் இல்லாதவனுமல்ல. முன்புபோல் கையில் மடியில் இருந்திருந்தால் தனியாகவே இதனைப் பொறுப்பேற்றும் இருப்பான்.

மனைவிக்கும் அவனது நிலைமை தெரியாம லல்ல. குடும்பத்தில் எல்லோருமே பங்களிப்புச் செய்யும் போது தனது கணவனின் கௌரவம் பாதிக்கப் படக் கூடாதேயெனக் கருதியிருக்கலாம்.

“மூணு நாளேத்து கடமய பெருப் பிச்சிக் கொண்டு இல்லாத மனிஷர தின்னபோற” சமூக நடைமுறைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தவன் களைப்பு மேலீட்டினால் அப்படியே தூங்கிவிட்டான்.

நித்திரை விட்டெழும்பியபோது சிரித்த முகத்துடன் மனைவி. அவளது குணமே அப்படித்தான், மனதில் எதையும் வைத்திருக்க மாட்டாள். முத்தமிட்டு விட்டு, மஹ்ரிபுக்கு நேரம் நெருங்கி வருவதனால் அஸர் தொழுவதற்காக வுளூ செய்வதற்கென பாத்ரூமுக்குள் நுழைந்தான்.

●●●

இரண்டு வாரங்களுக்கு முன்னர் உம்மாவை ஸ்பெஷல் டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டி யிருந்தது. ஒருமுறை எடுத்த மருந்துத் துண்டுக்கு ஒசுசலயில் ரிபீட் மருந்து தருவதில்லை. ஊர்ப் பாமஸி யில் கூடிய விலை கொடுத்து வாங்கியே இவ்வளவு நாளும் சமாளிக்க வேண்டி வந்தது. எப்படியும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை டாக்டரிடம் அழைத்துச் செல்லத் தான் வேண்டும். அதுவும் டெல்மனைத் தவிர வேறெங்கும் அவரது செனலிங் இல்லை. முச்சக்கர வண்டிக்கூலி, டாக்டர் பீஸ், மருத்துவப் பரிசோதனை, மருந்துச் செலவு என எப்படியும் பதினையாயிரத்தை விழுங்கிவிடும். தாத்தாவுக்கும் வசதியில்லை, தம்பி திரும்பியும் பார்ப்பதில்லை. ரமீஸ்தான் அனைத்தையும் பொறுப்பேற்க வேண்டியுள்ளது.

வீட்டிலே ஒரு குடும்பம், மனைவி புறத்து குடும்பங்கள் ... பதினைந்து ஸஹனுக்காவது புரியாணி போட்டால்தான் ஒருவாறு சமாளிக்கலாம். அதற்கு, குறைந்தது பன்னிரண்டு கிலோவாவது மாட்டிறைச்சி வேண்டுமே! இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ரூபாப்படி பார்த்தாலும் சுமார் இருபத்தேழாயிரம் ரூபா தேவைப்படுகிறது. கையிலிருக்கும் பணத்தில் கைவைத்து விட்டால் வியாபாரத்துக்கு முதல் தேடி அலைய வேண்டியதுதான்.

மச்சான், மதினிமார் தன் தலையில் பெரிய செலவைக் கட்டி விட்டதை நினைக்க எரிச்சல் எரிச்சலாக வந்தது. மாமி மற்றும் வீட்டிலுள்ளவர்களுக்கு மாத்திரம் இரண்டு ஸஹன் அனுப்பினால் போதுமென்ற யோசனையை மனைவி மூலம் முன்வைத்த போதும் அது எடுபடவில்லை.” குடும்பமெனா நாங்க, அப்படி ஏலுமோ? வாப்பட மையத்து நேரமும் மாமூட்டாள்க தானே முன்னுக்கு நிண்ட...” மூத்த தாத்தா விடாப்பிடி யாக நின்றாளாம்.

ஒருகாலத்தில் வேலை செய்த கம்பனியின் ஈடீஎப்புக்கு எழுதிப்போட்டு அது வந்திருந்தது. அதை மீளப்பெறும் எண்ணம் வந்ததே கூரையைத் திருத்த வேண்டுமென்பதனால்தான். கிடைத்திருக்கும் ஐம்பதி னாயிரத்தில் வேலையைத் தொடங்கி கூலிவேலையைத் தானே செய்தால் ஓரளவுக்கு முடித்துவிடலாம்.

ஈடீஎப் பணம் வங்கியில் வைப்பிலிப்பட்டுள்ள தாக மனைவியின் கைபேசிக்குத்தான் குறுந்தகவல் வந்ததும். இனி இறைச்சி வாங்கும்வரை நச்சரிப்பு தொடருமே!

கூரை சண்டைக்கு வராது , மனைவி வருவாளே! ரமீஸ் ஒருமுடிவுக்கு வந்துவிட்டான். ஊரில் கள்ளமாடு அறுப்பதாக ஆளுக்காள் காட்டிக்கொடுத்து இறைச்சிக் கடைகளும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. சரிக்கமுல்லை இறைச்சிக் கடையில் வேலை பார்க்கும் நஸீர் மாமா மூலம் முள்ளுடன் சேர்த்து தேவையான அளவு இறைச்சி வாங்கிக் கொண்டான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு புரியாணி என்பதனால் அன்று பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம். புரியாணிக்குப் பேர்போன ஹஸன் பாயின் கைபட்டால் சும்மாவா? வாசம் ரமீஸைச் சுண்டி இழுத்தது.

“இண்டக்கு இந்த சாப்பாட்ட தின்னீல்ல” என்ற முடிவுடன் வீட்டைவிட்டு வெளியேறினான். அவனது வருகைக்காக உம்மா ஏக்கத்துடன் காத்திருக்கும் காட்சி மனக் கண்களில் விரிந்தது. அதற்குள் மழையும் சோ வெனக் கொட்டத் தொடங்கியது. தூரத்தில் தென்படும் வீட்டுக் கூரையை நினைக்க நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

கோகிலா மகேந்திரன்

# 9 முடிவைத் தொடுவாய் முயன்று

எண்ணங்களுக்கும் எண்ணுதலுக்கும் உள்ள வேறுபாட்டுடன் இக்கட்டுரையைத் தொடங்குவோம் என எண்ணியபோது, "எண்ணங்களாலே பாலம் அமைத்து இரவும் பகலும் நடக்கவா?" என்ற பழைய சினமாப் பாடல் வரி எண்ணுதல் பிரதேச எல்லைக்குள் தானாக வந்து நின்றது. "இதென்ன, கவிஞருடைய கேள்வி! ஒன்றா, இரண்டா? ஏறத்தாழ 60000 எண்ணங்களால் பாலம் அமைத்து இரவும் பகலும் நடக்காத மனிதர்களை எண்ணிவிடலாம் அல்லவா? ஏனெனில் அவர்கள் எண்ணுதலின் எண்ணிக்கையைக் குறைக்க வல்ல ஞானிகள், யோகிகள் ஆக மட்டுமே இருப்பர்." என்று இன்னொரு எண்ணுதலும் கூடவே வந்தது.

எண்ணங்கள் இச்சை வழி இயங்காதவை. முயற்சி இன்றி வருபவை. பெரும்பாலும் சமகாலத்தில் நிகழும் விடயங்கள், புலன்வழி உட்செல்லும்போது வருபவை. "இதோ! இப்போது நான் "இப்போது" என்ற சொல்லை எழுதி முடித்துவிட்டேன்" என்பது எண்ணம். எண்ணுதல் குறிப்பிட்ட எண்ணங்களை எமது இச்சை வழி இயங்க வைக்கும் கலை. பெரும்பாலும் கடந்த காலம் பற்றியதும், எதிர்காலம் பற்றியதுமான விடயங்கள். அவற்றை நாம் மாற்றி அமைக்க முடியும்.

உதாரணமாக, "மற்றவை எல்லாம் பிழை விடினம். அது என்னைக் கஷ்டப்படுத்துது. அவையாலை நான் அழிஞ்சிட்டன்" என்ற மறையான எண்ணுதலுக்குள் திரும்பத் திரும்ப வரும்போது, அந்த எண்ணுதலுடன் மறை உணர்வுகள் செறிவு மிகுந்தவையாக உடன் வருகின்றன. கூடவே உடற்தொழிலியல் மாற்றங்களும் ஏற்படுகின்றன. இது உடலுக்கும் உள்ளத்துக்கும் நட்டம் தருவதோடு ஏராள மான சக்தியையும் செலவழித்து விடுகிறது. இத்தகு சூழல் மிக மோசமானதுதான். என்ன செய்யலாம்?

அந்தச் சூழலை விட்டு விலகலாம். (flight) உறுதியாகவும், மென்மையாகவும், சாத்வீகமாகவும் எதிர்க்கலாம். (fight )அல்லது அது என்னைப் பாதிக்காது என்ற நினைவுடன் உறைந்திருந்து விடலாம். (freeze)இவற்றில் எதையும் செய்யாது, குறிப்பிட்ட எண்ணுதல் திரும்பத் திரும்ப வர அனுமதிப்பது எண்ணச்சுழல் நிர்ப்பந்த நிலையை ஏற்படுத்தும்.(OCD )

எமது சொந்த எண்ணங்கள் பற்றி எமக்கிருக்கும் விளக்கத்துடனான பிடிப்பே வேதனைகளின் அடிவேர். எண்ணங்கள் தம்மளவில் நல்லவையோ கெட்ட வையோ இல்லைத் தான்.ஆயினும் அவற்றுக்கான எமது எதிர்த்தாக்கம் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தி எமக்குப் பெரிய சேதத்தை விளைவித்து விடலாம்.

"சொற்கள் என்பவை எமது எண்ணங்களின் படங்கள் மட்டுமே" என்பார் John Dryden.

"எண்ணங்களால் உருவாக்கப்படுபவர்கள்தான் நாங்கள். ஆகவே ஒவ்வொரு கணமும் என்ன எண்ணுகிறீர்கள் என்பதில் கவனமாயிருங்கள். சொற்கள் இரண்டாம் பட்ஷம்.! எண்ணுதல்கள் வாழும். அவை நீண்டதூரம் பயணிக்கும்." என்று சொன்ன சுவாமி விவேகானந்தர் "ஆறாதே, நாவினாற் சுட்ட வடு" என்று சொன்ன வள்ளுவரை விட ஆழச் சிந்தித்து எம்மையும் நெடுந்தூரம் அழைத்துச் சென்றார் எனலாம்.

தியானம் செய்யும்போது, "நினைக்காமல் இருத்தல்" என்பது கட்டாயம் எண்ணங்களற்று இருக்கும் நிலைதான் என்பதில்லை. எந்தத் தீர்ப்பிடலும் இன்றி எமது எண்ணங்களை நாமே அவதானிக்க முடியுமாயிருத்தல் மிகச் சிறந்த அமைதிக்குரிய நிலை!

மறை எண்ணங்களுடனான எமது பற்றுதலை முடிந்தவரை குறைத்துக்கொள்வது நல்லது. பொது வான நேர்மனப்பாங்கு ஒன்றை மனதில் வளர்த்துக் கொள்வோமாயின், நேர் எண்ணங்கள் சங்கிலி சங்கிலி யாய் வரும். அப்போது நிகழ்வுகளும், விளைவு களும் நேராய் அமைவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். அந்த நேர் மனப்பாங்கு ஒரு ஊக்கி போல அமைந்து அசாதாரண நல்விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

ஒருவகையில் பார்த்தால், எமது அனுபவங் களும் உள்வாங்கல்களும்கூட எமது எண்ணுதல்களால் உருப்பெறுபவை. எண்ணங்களை முகாமை செய்து, அவை எல்லாவற்றையும் நம்பாத நிலையில் இருக்கும்போது, அதிகளவு நேரான உண்மையான சூழலை எம்மைச் சுற்றி உருவாக்கலாம்.

"மூளையும் நாக்கும் கொஞ்சம் வெறுமையாக இருந்தால் நடக்கும் பாதை இன்னும் இலகுவாக இருக்கும்" என்று A .E .Housman தனது கவிதை ஒன்றில் சொல்வார்.

வெளிச் சூழலை எம்மால் அதிகளவு கட்டுப்படுத்த முடியாதிருக்கலாம். ஆனால் எண்ணங் களை அவதானித்து மறையான எதிர்த்தாக்கம் காட்டாதிருத்தலைத் தெரிவு செய்யும்போது எம்மளவில் எமக்குள் அதிக கட்டுப்பாட்டை உருவாக்குகிறோம் .இது எமது நலத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தும்.

ஒரு எண்ணுதலை இனம் காணும்போது, "நாம் ஏன் இவ்வாறு நினைக்கிறோம்?" என்று கேள்வி எழுப்புங்கள். அடியில் உள்ள ஊகங்களைக் காண இது உதவும். நம்பிக்கைகள் எமது இயலுமையை மட்டுப்

படுத்தலாம். அல்லது பொதுவான மறைநிலை ஒன்றை ஏற்படுத்தலாம். "ஆரோ நாவூறு படுத்தீட்டினம்" என்பது அப்படி ஒரு எண்ணுதல்.

அது பாரந் தூக்கிகள் அதிகளவு பயன்பாட்டில் இல்லாத காலம். பாலைவனம் போலிருந்த வெட்ட வெளியில் ஆலயம் ஒன்று அமைக்கப்படுகிறது. அதற்குத் தேவையான சீமெந்துக் கற்களை மனிதர்கள் சிலர் ஒரு மையப் புள்ளியிலிருந்து சுவர் எழுப்பும் இடத்திற்குக் காவிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். நேரம் மதியம் ஒருமணி – கடும் வெயில். 35பாகை C இருக்கலாம். வியர்வை ஆறுபோல் ஓடக் கடும் களைப்புடன் வேலை செய்கிறார்கள் பணியாட்கள். நிருபர் ஒருவர் வேலை செய்துகொண்டிருந்த ஒருவரிடம், "இந்த வேலை அனுபவம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். "பார்க்கத் தெரியவில்லையா, நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் என்று? கல்லையே எரிக்கும் வெயில்.! என் தலைவிதி. கல்லுச் சுமக்கிறேன் .அதில் கேள்வி வேறு" என்று எரிந்து விழுந்தார் அவர் .

சற்று விலகி அதே வேலையைச் செய்து கொண்டிருந்த இன்னொருவரிடம் கேட்டார் நிருபர். "என்ன செய்வது? கடினந்தான். என்றாலும் எனக்கு மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டியது எனது கடமை. சம்பளத்திற்காக இதைச் செய்கிறேன்" என்றார் அவர்.

சற்று முன்னே வந்து வேறு ஒருவரிடம் அதே கேள்வியைக் கேட்டார் நிருபர். "எனக்கு எவ்வளவு நிறைவாக இருக்கிறது தெரியுமா? வெயில் இருக்கட்டும். இறைவனுக்குக் கோயில் கட்டும் புனிதமான பணியில் நானும் அணிலைப் போலப் பங்கு கொள்கிறேனே! அதற்குக் காசுவேறு தருகிறார்கள் என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி!" என்று சிரித்தார் அவர்.

ஒரே வேலை செய்யும் மூன்று மனிதர்களின் எண்ணுதல்கள் வெவ்வேறாக இருக்கும்போது அவர்களின் மனநிலை எப்படி மாறுகிறது பார்த்தீர்களா ?

தொடர்ந்து வரப் பார்க்கும் மறையெண்ணச் சுழற்சியை மேம்படுத்தி, நிபந்தனையற்ற அன்பு, மகிழ்வு, அமைதிகொண்ட நிலை ஒன்றை அடைய முதலுதல் புத்திசாலித்தனம். உண்மையில் அமைதியுடன் தளர்வாக இருப்பதே எமது இயல்பு !

முடிவுகளை எடுப்பதில் பெரிய செல்வாக்குச் செலுத்தும் இன்னொரு காரணி ஆக்கத்திறன். குறித்த ஒரு பிரச்சினையை மற்றவர்கள் நோக்காத வகையில் விளங்கிக்கொள்ளவும் முழுமையாக மதிப்பிடவும் ஆக்கத்திறன் உதவும். எண்ணத் தொடர்களை ஒரு சிறுகதைபோல் அல்லது நாவலைப்போல் இணைக்கும் திறன் ஆக்கத்திறன் உள்ளவர்களுக்கு வரும். அவர்களின் அந்தத் தனித்துவமான வேறுபாடு தீர்மானம் எடுப்பதில் சிறப்பான பங்களிப்பைச் செய்யும்.

ஆக்கத்திறன் மிக்கவர்கள் தமது எண்ணங்களையும் தீர்ப்பிடாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சுய அன்பு அவர்கள் தமது எண்ணங்களில் இருந்து தாம் கற்றுக்கொள்ளவும் உதவும். சுய வளர்ச்சியிலும் நலத்திலும் முன்னேறிக்கொண்டு எண்ணுதலிலும் கட்டுப்பாடு கொண்ட படைப்பாளிகள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் சிறந்தவையாக இருக்கும்.

ஆக்கத்திறன் விரிசிந்தனை என்பது கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் சொந்தமானது. 4 தர 3 எவ்வளவு என்று பார்க்க அது 12 என வாய்ப்பாடு பாடமாக்கி வைப்பதுதான் ஒரேவழி என்பதில்லை. 3+3+3+3என நாலு முறை கூட்டிப்பார்க்கலாம். 3+3எனக் கூட்டி 6 வந்தவுடன், 6+6எவ்வளவு என்றும் பார்க்கலாம். கணிதப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கணித ஆசிரியர் ஒரு வழியைச் சொல்லிக் கொடுக்கும் போது, விரிசிந்தனை உள்ள மாணவர்கள் வேறு வழிகளில் சென்று சரியான விடையைப் பெறுவதைச் சிறு வகுப்புகளிலே கூட அவதானிக்கலாம்.

விரிசிந்தனை ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பலவழிகளைக் கண்டுபிடிக்கவும் உதவும். வெவ்வேறு வகைக்குள் அடங்கும் வழிமுறைகள் அவர்களுக்குத் தெரியலாம். மற்றவர்களுக்கு இலகுவில் தோன்றாத அல்லது மிக வித்தியாசமான ஒரு பாதை தெரியலாம். மானசீகமாக இருக்கும் ஒரு விடயத்தைச் செயற்படுத்தும் வழி ஒன்று துலங்கலாம்.

நிறுவனங்களில் பொதுவாகப் பகுத்தறி சிந்தனை முறையில் விஞ்ஞான ரீதியான நேர்கோட்டு வழியில் சிந்தித்து முடிவெடுத்தலையே கற்பிப்பார்கள். விரும்புவார்கள். செய்வார்கள். ஆயினும் நிறுவனம் சார்ந்த பிரச்சினைகளையும் புதிய முறையில் தீர்க்க முனையும்போது, நிறுவனத்தின் விளைதிறன் கூடும். ஆகவே எப்போதும் வீட்டிலும் சரி, வேலைசெய்யும் இடங்கள், நிறுவனங்களிலும் சரி ஆக்கத்திறன் மிக்க சூழலை உருவாக்குவதே நல்லது .

கொட்டிக்கிடக்கும் தகவல்களூடு உள் நுழைந்து எது தேவையானது, எது தேவையற்றது என்பதை இலகுவில் பிரித்தறிந்து கொள்ள ஆக்கத்திறன் உள்ளவர்களால் முடியும். அவர்கள் எல்லோரும் சொல்வதை உற்றுக் கேட்டாலும், தாம் தயார் நிலைக்கு வரும்போது துணிச்சல் மிக்க தீர்வு ஒன்றை முன் வைப்பர். தீர்வு அமையும் முறையைப் பார்த்தால் தகவல்களை நன்கு அறிந்தமை போலவே இருக்கும்.

நிறுவனங்களில் பொதுவாக ஆக்கத்திறன் மிக்க தலைவர்கள் இருப்பது சிறப்பம்சம். நிலைமை பாதகமாக வரும்போதும் தடை வரும்போதும் பொறுமை காப்பர். அபாயம் ஏற்படக்கூடிய நிலைமைகளைத் துணிந்து எதிர்கொள்வர். பராக் ஒபாமாவின் துணைவியார் மிக்கேல் ஒபாமா அப்படியான ஆளுமை உள்ளவர்களில் ஒருவராகக் காணப்படுகிறார். இவர்கள் புதிய அனுபவங்களுக்கு முகம் கொடுக்கவும் தொடர்ந்து வளரவும் விரும்புவார்கள். தெரிந்த சூழல் அனுபவங்களைத் தெரியாத சூழலில் பாவிக்கும்போது ஒப்புமை முறையைப் பாவிப்பார்கள். சகிப்புத் தன்மையும் ஒருவிடயத்திற்குப் பலபொருள் தேடும் பண்பும் இருக்கும்.


தலைவர் ஆக்கத்திறனுடன் இருக்கும்போது உருவாகும் கலைத்துவச் சூழலில் கேள்விகள் கேட்க நிறைய இடமிருக்கும். கலாசாரப் பண்பாட்டுப் பின்னணியைப் பேணுவது இலகுவாக இருக்கும். ஆபத்து வந்துவிடுமோ என்று மனிதர்கள் பயப்படும் தன்மையும் குறைவாக இருக்கும்.

"விண்ணும் மண்ணும் நடனச் சாலையாயிருக்கின்றன.
சுற்றியும் இடைவிடாமல் நடனக் காட்சிகள் நடக்கின்றன"

என்பார் யோகி.ஸ்ரீ.சுத்தானந்தபாரதியார்.

(தொடருவோம்)

வ.ந.கிரிதரன்




# குடிவரவாளன்

**அத்தியாயம் பன்னிரண்டு:**
**மீண்டும் தொடங்கும் மிடுக்கு!**

அதிகாலை நேரத்திற்குரிய மெல்லிய குளிர் எங்கும் பரவிக் கிடந்தது. கீழ் வான் சிவந்து கிடந்தது அதிகாலைக் கருக்கிருளுக்கோர் அழகினை அளித்தது. விடிவெள்ளியும், முழு நிலவும் நட்சத்திரக் கன்னியர் சிலருடன் பிரிவதற்கஞ்சி இன்னும் உறவாடிக் கொண்டிருந்தார்கள். நியூயார்க் நகரை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த இளங்கோவின் சிந்தனை கடந்த வார நிகழ்வுகளையே அசை போட்டுக் கொண்டிருந்தது. அவனால் அந்தக் கிரேக்கனின் கடலுணவு உணவகத்தில் ஒரு வாரம் வரையிலேயே தாக்குப் பிடிக்க முடிந்தது. வெள்ளிக் கிழமை மட்டும் தாக்குப் பிடிப்பதே அவனுக்குப் பெரும் சிரமமாகப் பட்டது. வெள்ளிக் கிழமை காலை வேலையினை ஆரம்பிப்பதற்கு முன் அவன் தன் முடிவினை நெப்போலியனுக்குக் கூறியபோது அவன் சிறிதும் இதனை, இவ்வளவு சீக்கிரத்தில், எதிர்பார்க்கவில்லையென்பதை அறிய முடிந்தது. அதனை அவனது வினாவும் நிரூபித்தது.

"உனக்கு வேலை பிடிக்கவில்லையா?"

அதற்கு இளங்கோ இயலுமானவரையில் தன் மனச்சாட்சியின்படியே பதிலிறுக்க முடிவு செய்தவனாக "வேலை பிடிக்கவில்லையென்று சொல்வதற்கில்லை…" என்று கூறிக் கொண்டிருக்கையில் நெப்போலியன் இடைமறித்துக் கேட்டான்:

"பின். வேலை சிரமமாயிருக்கிறதா?"

"அதுதான் முதற் காரணம். தொடர்ந்து நீண்ட மணி நேரம் வேலை செய்து விட்டு இருப்பிடம் திரும்பிப் படுக்கையில் சாய்ந்தால் மறுநாள் எழும்பியதுமே மீண்டும் வேலைக்கு வந்து விட வேண்டும். அது மிகவும் சிரமமாயிருக்கிறது. உடம்பும் முறிந்து போய் விடுகிறது. அடுத்தது…"

"அடுத்தது…"

"சிரமமப்படுகின்ற அளவுகேற்ற ஊதியமுமில்லை. இரண்டு பேருடைய வேலையை ஒரு ஆளே செய்வது அவ்வளவொன்றும் எளிதாகவில்லை.."

இவ்விதம் இளங்கோ கூறியது நெப்போலியனுக்குச் சிறிது திகைப்பினை அளித்திருக்க வேண்டும். அதனை அவனது அடுத்த கேள்வி நிரூபித்தது: "இரண்டு பேருடைய வேலையா..? யார் உனக்குக் கூறினார்கள்?"

"யார் சொல்ல வேண்டும்.. வேலையின் அளவினைப் பார்த்தாலே தெரியவில்லையா?"

இவ்விதம் இளங்கோ கூறியது நெப்போலியனுக்குச் சிறிது விசனத்தை அளித்திருக்க வேண்டும்.

"இருப்பதோ சட்டவிரோதம். இதை விட வேறென்ன வேலையினை நீ எதிர்பார்க்கிறாய்.?"

இவ்விதம் நெப்போலியன் அவனது நிலையினைச் சுட்டிக் காட்டிக் கூறியது இளங்கோவுக்கு ஆத்திரத்தை அளித்தது. அது குரலில் தொனிக்க அவன் இவ்விதம் கூறினான்: "நான் சட்டவிரோதமாகத் தற்போதிருந்தாலும் அதற்குரிய பத்திரங்களுடன்தான் இருக்கிறேன். சட்டரீதியாகத்தான் நாட்டினுள் நுழைந்தவன். தவிர்க்க முடியாத நிலையில் இங்கு தங்க வேண்டியதாயிற்று." அதே சமயம் இவ்விதம் இவனுடன் தன் சொந்த வாழ்வு பற்றிய விபரங்களையெல்லாம் தெரிவிக்கத்தான் வேண்டுமா என்றும் பட்டது. இவ்விதம் நினைத்தவன் "என்னால் இந்த வேலையைச் செய்யவில்லை என்று வைத்துக் கொள். என்னால் செய்யக் கூடிய வேலைகளைத் தேடிப்பார்க்கிறேன். இங்கிருந்து கொண்டு இந்த வேலையை இன்னும் ஒரு வாரம் செய்தேனென்றால் எனக்கு விசரே பிடித்து விடும். இப்பொழுது கூட என்னால் இந்த வேலையினைத் தொடர்ந்து செய்ய முடியும் நிபந்தனையொன்றின் அடிப்படையில்.." என்று இழுத்தான்.

அதற்கு நெப்போலியன் "என்ன நிபந்தனை விதிக்கிறாயா? இவ்விதம் நிபந்தனை விதிக்கும் முதல் ஆள் நீ தான். சரி உன் நிபந்தனையைத்தான் சொல்லேன்.." என்றான்.

"பத்து மணித்தியாலம் மட்டுமே வேலை செய்வேன். அதற்குரிய ஊதியம் தரவேண்டும். மேலதிகமாக வேலை செய்ய வேண்டுமென்றால் அதற்குரிய ஊதியம் தர வேண்டும். இலவசமாகச் செய்ய என்னால் முடியாது. சிரமப்படுகிற அளவுக்கு ஊதியம் கிடைத்தால் மனதைச் சமாதானப் படுத்தவாவது முடியும். சிரமத்திற்குரிய பலன் சிறிதாவதிருக்க வேண்டும்."

இளங்கோவின் பதில் உண்மையிலேயே நெப்போலியனுக்கு வியப்பினை அளித்தது.

"இங்கு பார் என் நண்பனே. நீ நன்கு வேலை செய்யும் ஆள். மிகவும் கடுமையான உழைப்பாளி. உன்னை இழப்பது எனக்கு மிகுந்த கவலையினை அளிக்கிறது. உன்னை மாதிரி இன்னுமொருவனைத் தேடிப் பிடிப்பது மிகவும் சிரமம். ஆனால் நீ கேட்பதைத் தர எனக்கு உரிமையில்லை. உணவகச் சொந்தக்காரன் நிச்சயம் இதற்குச் சம்மதிக்க மாட்டான். நியூயார்க்கில் மில்லியன் கணக்கில் இத்தகைய வேலைக்கு நாயாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். பீற்றரிடம் கூறினால் இன்னொருவனை அவன் அனுப்பி விடுவான். இருந்தாலும் இவ்வாரம் நீ கடுமையாக உழைத்ததற்காக நன்றி. இன்று மாலை உனக்குரிய ஊதியத்தைக் கணகெடுத்துத் தந்து விடுகிறேன். உன் எதிர்கால நல்வாழ்வுக்கு எனது வாழ்த்துக்கள்."

இவ்விதம் நெப்போலியன் வெளிப்படையாகக் கூறியது அவன்பால் சிறிது மரியாதையினை இளங்கோவின் மனதிலேற்படுத்தியது. அவனைப் பொறுத்தவரையில் எந்த ஊதியத்திற்கும் வேலைக்கு ஆள் பிடிப்பது அவ்வளவு கஷ்ட்டமான காரியமில்லை. முகவன் பீற்றரின் அலுவலகத்தில் தவமிருக்கும் "கொக்குக"ளின் ஞாபகம் நினைவிற்கு வந்தது.

அச்சமயம் அவனுக்கு எமிலியின் ஞாபகம் வந்தது. அங்கு பணி புரியும் பணிப்பெண்களில் அவள் சிறிது வித்தியாச மானவள். நியூஜேர்சியிலுள்ள கல்லூரியொன்றில் "ஒட்டல் நிர்வாகம்" பற்றிய துறையில் படித்துக் கொண்டிருந்தாள். உண்மையில் அவள்தான் அவனுக்கு அந்த வேலையை அவனுக்கு முன்னர் இருவர் செய்து கொண்டிருந்த விபரத்தைக் கூறியவள். நாள் முழுவதும் அவன் படும் சிரமத்தைக் கண்டு அவ்வப்போது ஓய்வெடுக்கும் சமயங்களில் அவனுடன் உரை யாடுமொரு சமயம் கூறியிருந்தாள். அத்துடன் நியூயார்க்கிலே ஏதாவது வேலையினை பாரென்று அறிவுரையும் கூறியிருந்தாள்.

உண்மையில் எமிலி சிறிது கண்டிப்பானவளும் கூட. உதவிச் சமையற்காரன் மார்க் ஒரு வேடிக்கையான பேர்வழி. பெண்களென்றால் வழியும் பிரிவினன். அவர்களுடன் சல்லாபிப்பதில், அங்க சேஷ்டைகள் புரிவதில் ஆன்ந்தம் கொள்பவன். அவர்கள் அப்பால் நகர்ந்ததும்

"எளிய விபச்சாரிகளென்று" நையாண்டி செய்பவன். அங்கு பணிபுரியும் பணிப்பெண்கள் ஒவ்வொரு முறை சமையலறைக்குள் வரும்போதும் அவர்களுடன் ஒரு சில நிமிடங்களாவது சல்லாபிக்கவும், அவர்களது பிருஷ்டங்களை வருடவும் அவன் தவறுவதேயில்லை. ஆனால் எமிலியுடன் மட்டும் அவன் பருப்பு வேகாது. அவளுடன் மிகவும் பௌவ்வியமாக நடந்து கொள்வான்.

இளங்கோவின் சிந்தனை எமிலியிலிருந்து மீண்டும் நிகழ்கால வாழ்க்கைப் பிரச்சினைக்குத் திரும்பியது. அருள் ராசா அவன் உடனேயே திரும்பியதும் நிச்சயம் "நக்கல"டிப் பான். "இதுதான் நான் இந்த வேலைக்கே போகவில்லை. எனக்கு முதலிலையே தெரியும் நீ நின்று பிடிக்க மாட்டா யென்று. ஏன் சொல்லுவானென்று இருந்தனான்" என்பான். யார் என்ன சொன்னாலும் கவலைப்படுவதற்கில்லை. மீண்டும் முகவன் பீற்றரிடம் செல்வதில் பயனில்லை. அவன் இப்படித் தான் ஏதாவதொரு இடத்திற்கனுப்பப் போகின்றான். நியூயார்க்கிலேயே வேறெங்காவது தேடிப்பார்க்க வேண்டும். அதற்கிடையில் சமூகக் காப்புறுதி இலக்க அட்டையினை எடுக்க முடியுமாவென்று பார்க்க வேண்டும். குறைந்தது ஒரு வாரமாவது தாக்குப் பிடித்ததால் கையில் கொஞ்சமாவது பணமாவதிருக்கு. இல்லாவிட்டால் கஷ்டமாயிருந் திருக்கும். அடுத்த முயற்சியினை இன்னும் முனைப்புடன் செய்வதற்கு இந்தப் பணம் உதவும். இவ்வாறு பல்வேறு சிந்தனைகளில் மூழ்கியவனாகப் பயணித்துக் கொண்டி ருந்தானவன்.

வெளியினூடு மிகவும் வேகத்துடன் விரைந்து கொண்டிருக்கும் இந்தக் கோளத்தினுள் அவனது இந்தச் சிறிய பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எத்தனை விசித்திர மான உலகம்! எத்தனை விசித்திரமான இருப்பு! விரையும் வேகத்தைக் கூட உணர முடிவதில்லை. உணராமல் எத்தனை கும்மாளங்களைப் போட்டுக் கொண்டிருக்கின்றோம். ஒவ் வொரு நிமிடமும் இந்தப் பூமிப பந்தின் எந்த மூலையிலாவது குண்டுகள் வெடிக்காமல் பொழுது கழிந்திருக்கிறதா? எத்தனை எத்தனை மோதல்களாலும், இரத்தக் களரிகளாலும் நிறைந்து போய்க் கிடக்கிறதிந்த உலகம். இவ்வளவும் இந்தப் பிரமாண்டமான வெளியினூடு விரையுமிந்தக் கோளத்தின் வாயுக் குமிழிக்குள் இருந்து கொண்டு ஆடும் கூத்தினால் தானே? இந்தக் குமிழியும் எந்தக் கணத்திலென்றாலும் உடைந்து விடலாம். ஏற்கனவே ஓட்டை போட்டாகி விட்டது. இன்னுமெத்தனை நாளைக்கோ இந்த இருப்புமிந்த உலகில்? அதனைக் கூட உணராமாலேனிந்த ஆட்டம்?

இத்தகைய தனித்த பயணங்களில், அதிகாலைகளில், அந்திப் பொழுதுகளில், இருண்ட நகரத்து வானை இரசித்து வருகையிலெல்லாம் அவனது மனம் இவ்விதமான இருப்பு பற்றிய தத்துவச் சிந்தனைகளிலாழ்ந்து விடுகிறது. அது அவனது வழக்கமாகியும் விட்டது. இவ்விதமே இந்தக் கணமே எல்லாவற்றையும் துறந்து ஓடி விடலாமாவென்றிருக்கும். மறுகணமே நடைமுறையின் வலைக்குள் சிக்கி அதிலாழ்ந்து விடுவான். இருத்தலிற்கான போராட்டத்தில் மூழ்கி விடுவான். வாழ்க்கை மீண்டுமொரு சுழலத் தொடங்கிவிடும். மகாகவி யின் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" கவிதை வரிகள் சில ஞாபகத்திற்கு வந்தன. "மப்பன்றிக் காலமழை காணா மண்ணில் சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது. ஏர் ஏறாது. காளை இழுக்காது. இருந்தும் பாறை பிளந்து பயன் விளைப் பான் அந்த விவசாயி. ஆழத்து நீரகழ்ந்து நெல் வளர்ப்பான். அந்த நெல்லோ... "சோ"வென்று நள்ளிரவில் கொட்டுமொரு மழையில்..., ஆட்டத்து மங்கையராயாடிய அப்பயிரினமோ வீழ்ந்தழிந்து பாழாகிப்போம். வெள்ளம் வயலை விழுங்கும். இருந்துமென்ன அந்த விவசாயி தளர்ந்து விடுவானா? வெள்ளம் வற்றியதும் வலக்கரத்தில் மண்வெட்டியேற்றி மீண்டும் கிண்டத் தொடங்கி விடுவான். சேர்த்தவற்றை முற்றும் சிதற வைக்கும் வான் பார்த்து அவன் அயர்ந்து விடுவ தில்லை. முதலில் இருந்து முன்னேறுதற்காய் மீண்டும் தொடங்கும் அவன் மிடுக்கு" இருப்பின் சவால்களை எதிர்த்துத் துணிச்சலுடன் வாழ்வை எதிர்நோக்கும் விவசாயி பற்றிய கவிதை மனித வர்க்கத்தின் சவால்களைக் குறிப்பாக நம்பிக்கையுடன் விபரிக்கும். இந்த வேலை போனாலென்ன? அவன் தளர்ந்தா போய் விடுவான். நிச்சயம் அவன் வாழ்வில் மீண்டும் தொடங்கும் மிடுக்கு! மீண்டும் தொடங்கும் மிடுக்கு! மீண்டும் தொடங்கும் மிடுக்கு

***

## அத்தியாயம் பதின்மூன்று: வேலை வேண்டும்!

இன்னுமொரு பொழுது பூத்தது வழக்கம் போல் இருப்பியற் பிரச்சினைகளுடன். அருள்ராசாவும், இளங்கோ வும் அன்றையப் பொழுதினை எப்படி ஆரம்பிப்பது, கழிப்பது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். இளங்கோ இவ்விதம் உரையாடலினை ஆரம்பித்தான்:

"அருள், எப்படியாவது இன்னுமொரு வேலையைக் கெதியிலை எடுக்க வேணும். உன்னுடைய "பிளான்" என்ன?"

"நானும் எனக்கேற்ற வேலையொன்றைத் தேடிக் கோண்டுதானிருக்கின்றன. கிடைக்க மாட்டேனென்கிறதே. எங்கை போனாலும் "சோசல் இன்சுரன்ஸ் கார்ட்"டை அல்லவா கேட்கிறான்கள். எனக்கென்னென்றால் "இமி கிரேஷன் ஓபிசு"க்குப் போய் அதை எடுக்கிற வழியை முதலிலை பார்த்தால் நல்லதென்று படுகுது. நீ என்ன சொல்லுறாய்?"

"அருள். நீ சொல்லுறதும் நல்ல "ஐடியா"தான். இன்றைக்கு முதலிலை அங்கு போய் விசாரித்து விட்டுப் பிறகு

அங்கிருந்தே வேலை தேடும் படலத்தைத் தொடங்குவோம்.."

"அதுவும் நல்ல "ஐடியா"தான். அப்பிடியே செய்வம். அதுக்கொரு முடிவைக் கண்டு விட்டு, அது சரிப்படாதென்றால் நானும் உன்னைப் போல எந்த வேலையை என்றாலும் செய்ய என்னைத் தயார் படுத்த வேண்டும்."

"அது சரி. உனக்கு இமிகிரேசன் ஒபிஸ் எங்கையிருக்கிறதென்று தெரியுமே?"

"26 "பெடரல் பிளாசா"வில்தானொருக்கு. பிரச்சினையென்னவென்றால்..."

"என்ன பிரச்சினை..?

"சோசல் இன்சுரன்ஸ் காட்"டை எடுக்க வேண்டுமென்றால் அதற்கு வேறு சில அடையாள அட்டைகள் தேவை. முதலிலை எங்களுக்கு இன்னும் சட்டரீதியாக வேலை செய்கிறதுக்குரிய பத்திரங்களெதுவுமில்லை. "பாஸ்போர்ட்" கூட கையிலை இல்லை.."

"பாஸ்போர்ட் ஏனில்லை. "இமிகிரேசனி"டம்தானே குடுத்திருக்கிறம்தானே. அதை அவங்கள் சரிபிழை பார்க்கலாம் தானே"

"அடுத்தது... கோஷ் சொன்னவன்..."

"என்ன சொன்னவன்?"

"பாஸ்போர்ட் அதோடை வேலை தருபவடரிடமிருந்து வேலையை உறுதி செய்தொரு கடிதமும், மற்றது வேலை செய்வதற்குரிய அனுமதிப் பத்திரமும் தேவையாம். அவை இருந்தால்தான் "சோசல் இன்சுரன்ஸ் கார்ட்" எடுக்கலாமாம்."

"அடக் கோதாரி. இதுக்கு எங்கை போறது. சாணேற முழம் சறுக்கும் போலைக் கிடக்கே.."

"வேறை என்ன செய்யிறது. சும்மா இருக்கிறதை விட முயற்சி செய்யுறது நல்லதுதானே.."

"இது சரி வராட்டி என்ன செய்யிறதாம்..."

"இது சரிவராட்டி ஏதாவது சமூகசேவை செய்யும் அமைப்பொன்றிடமிருந்து சட்டரீதியான சேவையைப் பெற "டிரை" பண்ணலாம். அப்படிப் பட்ட பல அமைப்புகள் இங்கை இருக்காம்"

"எதுக்கும் முதலிலை இமிகிரேசன் ஒபிஸுக்குப் போய் அங்கையிருக்கிற ஒரு ஓபிசரைக் கண்டு கதைப்போம். எங்களிடமிருக்கிற நாட்டிலை சட்டவிரோதமாகத் தங்கியிருக்கிற "இமிகிரேசன் டொக்குமன்றைக்" காட்டி கதைப்போம். தற்போதைக்கு அது ஒன்றுதான் எங்களிடமிருக்கிற ஒரேயொரு "டொக்குமென்ற்". முதலிலை அதை வைத்து ஆரம்பிப்பிப்போம்"

"நீ சொல்லுறதும் சரிதான். "ட்ரை" பண்ணாமல் என்ன நடக்குமென்று முதலிலையே முடிவெடுக்க முடியாது. கேட்காமல் எதுவுமே கிடைக்காதுதானே"

"அதுதான் ஒரு கிறித்தவ பாட்டுக் கூட இருக்குதே.."

"எந்த பாட்டை நீ சொல்லுறாய்?"

"கேளுங்கள் கிடைக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கிடைக்குமென்றார் இயேசு கேளுங்கள் கிடைக்குமென்றார்"

"சரி கேட்டுப் பார்ப்பம் இமிகிரேசன் ஓபிசரிடம். கிடைத்தால் நல்லது. கிடைக்காவிட்டாலும் எதையாவது செய்து பிழைத்துக் கொள்ள வேண்டியதுதான்."

அத்துடன் அவன் மேலும் கூறினான்: "சோசல் இன்சுரன்ஸ் கார்ட்" கிடைக்குதோ இல்லையோ நாங்கள் தொடர்ந்தும் வாழத்தான் போறம். இங்கை இருக்கிற வரைக்கும் முடிந்த வரைக்கும் முயற்சி செய்யத்தான் போறம். அந்தக் கார்ட் கிடைத்தால் வாழ்க்கை இலகுவாகக் கழியும். நல்லதொரு வேலை எடுத்து முன்னேறலாம். இல்லையென்றால் எந்த தொட்டாட்டு வேலையையென்றாலும் செய்து இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியதுதான்"

இவ்விதமாக அவர்களுக்கிடையில் உரையாடல் தொடர்ந்தது. எவ்விதமாவது குடிவரவுத் திணைக்கள அதிகாரியொருவரிடம் தங்களது நிலையினை விளக்கிச் சமூகக் காப்புறுதி அட்டையினைப் பெறுவதற்கு இயலுமான வரையில் முயற்சி செய்ய வேண்டும். அவருக்கு இலங்கைத் தீவின் இன்றைய அரசியல் நிகழ்வுகளை, நிலைமைகளை, அண்மைக்காலத்து நிகழ்வுகளை குறிப்பாகக் கறுப்பு யூலை 83 நிகழ்வுகளை, தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் மேல கட்டவித்து விடப்படும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளை, இவறையெல்லாம் விரிவாக ஆதாரங்களுடன் அவருக்கு விபரிக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் சம்பந்தமாக மேற்கு நாட்டு வெகுசன ஊடகங்களில் வெளிவந்த செய்திக் குறிப்புகளின் போட்டோப் பிரதிகளை அறுக் சேர்த்து வைத்திருந்தது நல்லதாகப் போய் விட்டது. அவற்றை ஆதாரங்களாகக் காட்ட முடியும். இவ்விதமாக நண்பர்களிருவரும் உரையாடி முன்னெடுக்க வேண்டிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளைப் பற்றி அலசி ஆராய்ந்து அவை பற்றித் தீர்க்கமான முடிவினையெடுத்தார்கள். அதன் பின் அவர்கள் ஏற்கனவே தீர்மானித்தபடி "பெடரல் பிளாசா"விலுள்ள குடிவரவுத் திணைக்களத்துக்குச் செல்ல முடிவு செய்து அன்றைய பயணத்தை அவ்விதமே ஆரம்பித்தார்கள்.!

### அத்தியாயம் பதினான்கு:
### 'வேடிக்கையான குடிவரவுத் திணைக்கள அதிகாரி!'

வரவேற்புக் கூடத்தில் அமர்ந்திருந்த பெண் அதிகாரியிடம் முதலில் இளங்கோதான் தங்களை அறிமுகம் செய்தான்:

"இனிய காலை உங்களுக்கு உரித்தாகட்டும்"

அதற்கு அந்தப் பெண் அதிகாரி "உங்களுக்கும் எனது காலை வந்தனங்கள். இன்று நீங்கள் என்ன விடயமாக இங்கு வந்திருக்கின்றீர்கள்?" என்று வரவேற்றபடியே எதிர்வினாவொன்றினையும் தொடுத்தாள்.

"எனது பெயர் இளங்கோ. இவனது பெயர் அருள்ராசா. நாங்கள் இருவரும் இங்கு அரசியல் அடைக்கலம் கோரி விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள்" என்று கூறிய இளங்கோ அவளுக்கு அமெரிக்கக் குடிவரவு திணைக்களத்தினால் கொடுக்கப்பட்டிருந்த விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதியினை எடுத்துக் கொடுத்தான்.

அதனை வாங்கிச் சிறிது நேரம் பார்த்த அந்தப் பெண் அதிகாரி பின்னர் இவ்விதம் கூறினாள்:

"இது நீங்கள் விண்ணப்பித்த விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி. இதனை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. அவர்களிடமிருந்து இது சம்பந்தமாக உங்களுக்குப் பதிலொன்று வரும். அதன் பின்னர் வாருங்கள்.."

"மேடம், அது சம்பந்தமாகத்தான் இங்குள்ள அதிகாரியொருவருடன் பேச விரும்புகின்றோம். இதற்கான பதில் எப்பொழுது வருமோ தெரியாது. இந்த நிலையில் "சமூகக் காப்புறுதி இலக்க" அட்டைக்குக் கூட விண்ணப்பிக்க முடியாதுள்ளது. எங்களுடன் வந்துள்ள வேறு மாகாணங்களில் வசிக்கும் எல்லோருக்கும் "சமூகக் காப்புறுதி இலக்க அட்டைகள்" வழங்கப்பட்டுவிட்டன. அதில்லாமல் எங்களால் எந்தவித வேலையும் செய்யமுடியாமலுள்ளது. அதுதான் அது

பற்றி இங்குள்ள அதிகாரியொருவருடன் கதைக்க விரும்புகின்றோம். இதற்கு உதவினால் நன்றியுள்ளவர் களாக விருப்போம்."

இவ்விதம் இளங்கோ மிகவும் பணிவாகக் கூறியது அந்தப் பெண் அதிகாரியின் இதயத்தைத் தொட்டுவிட்டது. அதன் பிரதிபலிப்பு குரலில் சிறிது தெரிய அவள் "உங்கள் நிலை எனக்குப் புரிகிறது. என்னைப் பொறுத்தவரையில் உங்கள் கோரிக்கைக்கான பதில் வராமல் இங்குள்ளவர்களால் என்னதான் செய்ய முடியுமோ? எதற்கும் உங்கள் ஆசையை நான் தடுக்க விரும்பவில்லை. முயற்சி செய்து பாருங்கள். உங்களை அழைக்கும்வரையில் அங்குள்ள ஆசனங்களில் சென்றமர்ந்து அழைப்பு வரும்வரையில் காத்திருங்கள்" என்றாள்.

இளங்கோவுக்கு அவளது பரிவான குரல் சிறிது ஆறுதலைத் தந்தது. அந்த மகிழ்ச்சி அடுத்து அவன் தொடுத்த வினாவிலும் பிரதிபலித்தது.

"மேடம், இன்னுமொரு சிறு கேள்வி. நாங்களிருவருமே ஒரே சமயத்தில் ஒன்றாக அகதிக் கோரிக்கைக்கு விண்ணப்பித்தவர்கள். நாங்களிருவருமே ஒரே சமயத்தில் அதிகாரியொருவரைச் சந்திக்க முடியுமா? அல்லது தனித் தனியாகத்தான் சந்திக்க வேண்டுமா?"

"ஒரே நேரத்தில் சந்திப்பது முடியாத காரியம். தனித் தனியாகத்தான் சந்திக்க வேண்டும். குறைந்தது ஒன்றிரண்டு மணித்தியாலங்களாவது காத்திருக்க வேண்டி வரலாம்."

இவ்விதம் அந்தப் பெண் அதிகாரி கூறவும் அவளுக்கு மீண்டுமொருமுறை நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு கூடத்திலிருந்த நாற்காலிகளில் காத்திருக்கும் ஏனையவர்களுடன் வந்தமர்ந்து கொண்டார்கள் இளங்கோவும் அருள் ராசாவும்.

"அருள், எனக்கென்றால் சரிவருமென்று தெரியவில்லை. எதுக்கும் முயற்சி செய்து பார்ப்பதில் தவறில்லை தானே. முயற்சி செய்து பார்ப்போம். குடியா முழுகி விடப் போகுது."

"என்னடா இளங்கோ. "பொசிட்டிவ்வா திங்க்" பண்ணுற நீயே இப்பிடி தளர்ந்து விடலாமா? சரிவருமென்று எண்ணிக்கொண்டே இறங்கினால் எல்லாம் வெற்றிதான். இறங்குவம். காலை விடுவம். நல்லதே நடக்குமென்று நம்புவோம்"

"ஓம் அருள். நீ சொல்லுறதும் சரிதான். எவ்வளவுதான் "பொசிட்டிவ்"வாக இருந்தாலும் சில சமயங்களில் மனசு சலிச்சு விடத்தான் செய்கிறது."

"அதுக்குமொரு காரணமில்லாமலில்லை."

"என்ன காரணம்.."

"எப்பொழுதுமே எங்கட, மனுசரின்ற , குணவியல்புகள் ஒரே மாதிரி இருக்காதாம். ஏறி இறங்கிக் கொண்டு தானிருக்குமாம். நிலவு பிறை நிலவாகி, முழுநிலவாகி, அமாவாசையில் மறைந்து மீண்டும் வளரத் தொடங்கிறதே. அது மாதிரித்தான் எங்கள் குணவியல்புகளும். சில நேரம் எந்தவிதக் காரணமுமில்லாமல் ஒரு பிரச்சினையுமில்லாத நேரத்தில் மனசு சலிச்சுச் சோர்ந்து கிடக்கும். இன்னொரு சமயம் தலைக்கு மேலை பிரச்சினைகள் கூடுகட்டியிருக்கைக்கே மனசு கிடந்து உற்சாகமும், ஆனந்தமும் பொங்கக் கூத்தடிக்கும்."

இளங்கோவுக்கு அருளின் விளக்கம் ஆச்சரியத்தை அளித்தது.

"அருள், நீ கூறுவது சரிதான். இவ்வளவு விசயம் தெரிந்து வைத்திருக்கிறாயே.. ஆச்சரியம்தான். உளவியல் மருத்துவராகப் போயிருக்க வேண்டும். "மிஸ்" பண்ணி யிட்டாய்."

இவ்விதமாக அவர்களிருவரும் அளவளவியபடி யிருந்த வேளையில் அவனது பெயரை உள்ளிருந்து வந்த வெள்ளையின அதிகாரியொருவன் அழைத்தான்.

"யாரது.. இளங்கோ"

"நான்தான்" என்றவாறெழுந்த இளங்கோ அருள்ராசா பக்கம் திரும்பியபடி "எங்கேயும் போயிடாதே. நான் வரும் வரைக்கும் இங்கைதான் நில்" என்றவன் அந்த அதிகாரியைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றான். தன் காரியாலய அறைக்கு அவனை அழைத்துச் சென்ற அந்த அதிகாரி அருகிலிருந்த ஆசனத்திலமரும்படி சைகை காட்டினான்.

"என் பெயர் "டிம் லாங்கின்". சரி, இன்றைக்கு எதற்காக இங்கு விஜயம் செய்திருக்கிறாய்?"

அவனுக்குப் பதில் சொல்வதற்கு முன்னர் இளங்கோ தன்னிடமிருந்த ஆவணங்களை, இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பத்திரிகைச் செய்திகளின் போட்டோப் பிரதி களை, அண்மைய யூலைக் கலவரத்தைப் பற்றி வெளிவந்த தகவல்கள், புகைப்படங்களை எடுத்துக் காட்டினான். அதிலொன்று நிர்வாணமாக்கப்பட்ட தமிழனொருவனைச் சுற்றி, அந்த அப்பாவியைக் கொல்வதற்கு முன்னதாக குடித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருந்த காடையர் கும்பலின் படம். அதனைப் பார்த்ததும் அந்த அதிகாரி முகம் சுளித்தான். "காட்டுமிராண்டிகள். காட்டுமிராண்டிகள்" என்று தனக் குள்ளேயும் சிறிது கூறிக் கொண்டான்.

அந்த அதிகாரியும் சிறிது மடங்கக் கூடிய ஆசாமியாக அவனுக்குப் பட்டது.

"சேர், இலங்கைத் தமிழர்கள் இனரீதியில் பாதிக்கப் பட்டவர்கள். அந்தப் புகைப்படப்பிரதியில் கொல்லப்படு வதற்காகக் காத்திருக்குமந்த அப்பாவியுமொரு தமிழன்தான். நானுமொரு ஈழத்தமிழன்தான்..."

இவ்விதம் அந்த அதிகாரிக்குத் தன் நிலையினை விபரிக்க முற்படுகையில் இளங்கோவுக்கு அந்தக் கணத்தில் அந்தப் புகைப்படப்பிரதியிலுள்ள அந்த அப்பாவித் தமிழனின் நிலை மிகவும் தெளிவாக, அனுபவரீதியாகப் புரிந்தது. நெஞ்சுணர்ந்தது. இரத்தம் சொட்டுமுடலுடன், நிர்வாணக் கோலத்தில், கூனிக்குறுகியபடி, வெறிபிடித்தாடும் மிருகங் களுக்கு மத்தியிலிருந்தபோது அவன் என்ன நினைத்திருப் பானோ? ஊரிலெங்கோ காத்து நிற்கும் அவனது மனைவியை அல்லது "எப்போ அப்பா வருவாரோ"வென்று இன்பக் கனவு களுடன் காத்து நிற்குமொரு இளங்குருத்தை அல்லது நோகும் நெஞ்சுடன் துஞ்சாதெங்கோ விழித்திருக்கும் காதலியை, முதுமையில் அவனுதவியை நாடி நிற்குமந்ததாயை, சகோதரனை, சகோதரியையெல்லாம் நினைத்திருப்பானோ? அவனது அந்தக் கூனிக் குறுகிய தோற்றம் ஈழத்தமிழர்களின் துயரத்தினொரு குறியீடாக விளங்கியதுபோல் பட்டது.

"சேர், வேலை செய்யாமல் இங்கு வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது மிகவும் சிரமமாகவுள்ளது. வேலை எடுக்க வேண்டுமென்றால் "சமூகக் காப்புறுதி இலக்கத்தைக்" கேட்கிறார்கள்.."

அதனைக் கேட்டதும் அந்த அதிகாரி சிறிது சிரித்தான். அத்துடன் "நியுயார்க்கிலிருக்கிறாய். நியுயார்க் உயர்ந்த கட்டடங்களுக்கு மட்டும் புகழ்பெற்றதொன்றில்லை. இன்னுமொன்றிற்கும் அது புகழ் மிக்கது. தெரியுமா?" என்றதும்

இளங்கோ "தெரியும். கேளிக்கையான இரவு

வாழ்க்கைக்கும் புகழ் பெற்றதுதான்" என்று பதிலிறுத்துச் சிரித்தான். அதற்கு "டிம் லாங்கின்" தன் பருத்த தொந்தியசையச் சிரித்தான்: "மிக விரைவிலேயே நீ நல்லாத்தான் நியூயார்க் கைப் புரிந்து வைத்திருக்கிறாய். ஏதாவது அனுபவங் களுண்டா?" என்றும் கண்களைச் சிமிட்டினான் அத்துடன் "அதுவல்ல சரியான பதில்" என்றும் "பொடி" வைத்துப் பேசினான்.

"எனக்குத் தெரியவில்லையே" என்று பதிலுக்கு இளங்கோ தலையைச் சொரிந்தான்.

டிம் லாங்கினே தொடர்ந்தான்: "சரி சிறியதொரு துப்பு தருகிறேன். கண்டு பிடிக்கிறாயா பார்க்கிறேன். உன் இன்றைய இருப்பிலேயே பதிலும் அடங்கியுள்ளது. அதாவது என் கேள்விக்குரிய சரியான பதில் உன் இன்றைய இருப்பி லுள்ளது. எங்கே பதிலை இப்பொழுது கூறு பார்க்கலாம்?"

இளங்கோவுக்கு அந்த வெள்ளையினத்து அதிகாரி யின் போக்கு சிறிது வியப்பினைத் தந்தது. மிகவும் வேடிக்கை யாகப் பேசுகிறான். வழக்கமான அதிகாரிகளுக்குரிய கண்டிப்பு, கர்வமெதுவுமில்லாமல் மிகவும் இயல்பாக, நட்புணர்வுடன், குதூகலமிக்க சிறுவனொருவனின் ஆனந்த உணர்வுடன் அவன் பேசுகிறான். அவனது கேள்விக்கு பதி லிறுக்க முடியாமல் இளங்கோ வெற்றிகரமாகப் பின் வாங்கினான்.

டிம் லாங்கினே தொடர்ந்தான்: "நியூயார்க் மில்லியன் கணக்கில் வசிக்கும் சட்டவிரோதக் குடிகளுக்கும் பெயர் போனதென்பதை எவ்விதம் நீ மறக்கலாம்? நீயே அவர் களிலொருவன்தானே. இவர்களெல்லாருமே இங்கு எந்தவிதச் சட்டரீதியான ஆவணங்கலுமில்லாமல்தான் வேலை செய் கிறார்கள். அவர்களைப் போல் உன்னாலும் வேலை செய்ய முடியும். போய்ச் செய். உன்னுடைய கோப்புக்குக்குரிய சரி யான மறுமொழி வாஷிங்டனிலுள்ள இராஜாங்க திணைக் களத்திலிருந்துதான் வரவேண்டும். அதன்பிறகுதான் எங்களால் எதுவும் செய்ய முடியும். இருந்தாலும் உன் நிலை பற்றிய என் பரிந்துரையினை அனுப்பி வைக்கிறேன். விரை விலேயே உனக்கு அவர்களிடமிருந்து பதில் வருமென்று எதிர் பார்க்கிறேன். அதுவரையில் நியூயார்க் உன்னையும் வாழ வைக்குமென்று நிச்சயமாக நம்புகிறேன்."

"அது சரி.. களவாக வேலை செய்து கொண்டி ருக்கும்போது உங்களது அதிகாரிகள் யாராவது என்னைப் பிடித்து விட்டால்.." என்று இளங்கோ இழுத்தான். அதற்கு டிம் லாங்கின் "நீ தற்போது வைத்திருக்கிற ஆவணங்களைக் காட்டு. அவர்கள் புரிந்து கொள்வார்கள். நீ சட்டவிரோதமாக விருந்தாலும் சட்டரீதியாகத்தான் பதிவு செய்து இருக்கிறாய். எனவே அவர்கள் புரிந்து கொள்வார்கள். வெருட்டினால் பசி பொறுக்கவில்லை. அதுதான் வேலை செய்கிறேன். வேண்டுமானால் தடுப்பு முகாமிலேயே கொண்டு சேர்த்து விடுங்கள் என்று சொல். ஆளை விடு என்று ஓட்டம் பிடித்து விடுவார்கள். ஒன்றுக்கும் பயப்படாதே. அமெரிக்கா நிச்சயம் உன்னை வாழ வைக்கும்" என்று பதிலுரைத்து, வாழ்த்தி வழி யனுப்பி வைத்தான். அவனுக்கு நன்றி கூறி விட்டு வெளியில் வந்த இளங்கோவின் சிந்தையில் அந்த அமெரிக்கக் குடிவரவுத் திணைக்கள அதிகாரியின் பருத்த தொந்தியும், வேடிக்கையான பேச்சும், நியூயார்க்கில் சட்டவிரோதமாக வேலை செய்து வாழ்வதெப்படி, அகப்பட்டால் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளிடமிருந்து தப்புவதெப்படியென்று டிம் லாங்கின் தந்த ஆலோசனைகளும் அவனைப் புதிர் நிறைந்ததொரு மனிதனாகப் புலப்படுத்தின் சிரிப்பும் கூடவே வந்தது.

## அத்தியாயம் பதினைந்து:
## நியூ யார்க்கில் குடை வியாபாரம்!

நண்பர்களிருவரும் குடிவரவுத் திணைக்கள அதிகாரி களைச் சந்தித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். நாற்பத்திரண்டாவது வீதியில் அமைந்திருந்த நூலகத்தை மையமாக வைத்து "பிராட்வே" சாலை வழியாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் நூலகத்திற்குச் சென்று பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் புரட்டினால் நல்லதுபோல் இளங்கோவுக்குப் பட்டது. அருள்ராசா இளங்கோவைப் போல் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இலக்கியமென்று எதிலும் பெரிதாக ஆர்வமற்றவன். ஆனால் கல்வி சம்பந்தமான, தொழில் வாய்ப்புகள் சம்பந்தமான, வியாபாரம் சம்பந்தமான விடயங்களில் ஆர்வமுள்ளவன். அவை பற்றிய விடயங்களை படிப்பதில் அதிகக் கவனம் செலுத்துபவன். அவனுக்கும் சிறிது நேரத்துக்கு நூலகம் சென்று ஏதாவது பிடித்த விடயங்களைப் பற்றிய பத்திரிகை, சஞ்சிகைகளைப் புரட்டினால் நல்லது போல் பட்டது. சிறிது நேரம் ஓய்வெடுத்ததும் போலாகு மெனப் பட்டது. இதன் காரணமாக இருவருக்கும் நூலகம் செல்வதில் எந்தவிதக் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட வில்லை. எனவே நூலகத்தை நோக்கி நடையைக் கட்டினார் கள். அப்பொழுதும் அவர்களது சிந்தனை முழுவதும் குடிவரவு அதிகாரிகளுடனான சந்திப்பு பற்றியேயிருந்தது. இளங்கோ டிம் லாங்கைச் சந்தித்திருந்தான். அருள்ராசாவுக்கு வந்து வாய்த்தவனோ டிம் லாங்கினைப் போல் அவ்வளவு வேடிக்கை யானவனாக இருக்கவில்லை. வழக்கம்போல் அதிகாரிகளுக் குரிய கடின முகபாவமும், வார்த்தைகளை அளந்து, அதிகாரத் துடன் கொட்டும் தன்மையும் கொண்டவனாக விளங்கினான். எனவே அவனுக்கும் அருள்ராசாவுக்குமிடையிலான உரையா லும் மிகவும் குறுகியதாகவே அமைந்து விட்டதில் ஆச்சரிய மேதுமிருக்கவில்லை. அவனொரு இத்தாலிய அமெரிக்கன். கிளாட் மன்சினி என்பது அவனது பெயர். அவனுக்கும், அருள்ராசாவுகுமிடையில் நடைபெற்ற உரை யாடலும் பினவருமாறு சுருக்கமாக மட்டுமே அமைந் திருந்தது:

அருள்ராசாவின் ஆவணப் பிரதிகளைப் பார்த்தபடியே குடிவரவுத் திணைக்கள அதிகாரி கிளாட் மன்சினி " உனக்கு என்னவிதத்தில் உதவ முடியும்?" என்று ஆரம்ப வினாவினைத் தொடுத்தான்.

அதற்கு அருள்ராசா "சமூகக் காப்புறுதி இலக்க அட்டை எடுப்பது பற்றியே விசாரிப்பதற்காக இங்கு வந்துள்ளேன்.." என்றான்.

அதற்கு கிளாட் மன்சினி "உனது விடயம் சம்பந்தமாக எங்களிடமிருந்து உனக்குரிய பதில் வரும் வரையில் எதுவும் செய்வதற்கில்லை. அதுவரை நீ பொறுத்திருக்கத்தான் வேண்டும்." என்று பதிலிறுத்தான். அதற்கு மேல் அவனுடன் கதைப்பதில் எந்தவிதப் பயனுமில்லை என்பதை உணர்ந்து கொண்ட அருள்ராசா பதிலுக்கு நன்றி தெரிவித்து விட்டு வெளியேறினான்.

"அவனொரு குரங்கன். கொஞ்சங்கூட மனிதாபிமான மற்றவன். அவனுக்கு என் பிரச்சினையைக் காது கொடுத்துக் கேட்கவே பொறுமையில்லை. இந்த விசயத்திலை நீ குடுத்து வைச்சவன் இளங்கோ"

"என்ன உனக்கு அவன் சொன்னதைத்தான் டிம் லாங்கினும் சொன்னான். என்ன அவன் கடுமையாச் சொன்னதை இவன் கொஞ்சம் வேடிக்கையாகச் சொன்னான். அவ்வளவுதான். மற்றப்படி முடிவு ஒன்றுதான்."

இவ்விதமாக உரையாடலைத் தொடர்ந்துகொண்டு நடந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் இளங்கோ வானத்தைக் கவனித்தான். விரைவாகவே நகரத்துவானம் இருண்டு வந்துகொண்டிருந்தது. காற்றும் பலமாக வீசத் தொடங்கி விட்டிருந்தது. வாயு பகவானைத் தொடர்ந்து வருணபகவானின் ஆட்டம் இன்னும் கொஞ்ச நேரத்திலேயே தொடங்கிவிடும்போல் காலநிலை தென்பட்டது.

"போகிற போக்கைப் பார்த்தால் மழை கெதியிலை அடிச்சுக் கொட்டும் போலை" என்றான் அருள்.

"பாத்தால் அப்படித்தான் தெரியுது. இந்த நேரத்துக்கு ஊரிலை இருக்க வேணும். மழை பெய்யுறதிலை கூட எவ்வளவு அழகு. இங்கை சலனப்படத்தைப் பார்த்த மாதிரித்தான். பார்க்கலாம் ஆனால் இரசிக்க முடியாது..."

நண்பர்களின் உரையாடல் அப்படி இப்படித் திரும்பி அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையில் வந்து நின்றது.

"எப்படியென்றாவது கெதியிலை ஒரு வேலை எடுக்க வேண்டும். "பேர்மனென்ற்" வேலையாக இருந்தால்தான் கொஞ்சமாவது காசைச் சேர்க்கலாம். இல்லாவிட்டால் உழைப்பதும் செலவழிப்பதுமாகவே பொழுது போய் விடும். காசைச் சேர்க்க முடியாது."

"நீ சொல்வது சரிதான் இளங்கோ. ஆனால் ஒழுங்கான வேலைதான் கிடைக்க மாட்டவே மாட்டேன்கிது. என்ன செய்யலாம். எல்லாமிந்த சோசல் இன்சுரன்ஸ் கார்ட் இல்லாததால் வந்த கரைச்சல்தான்.."

"அருள். எனக்கொரு யோசனை தோன்றுது..."

"என்ன..."

"ஏன் நாங்கள் இன்னொருவனிடத்திலை வேலை தேட வேண்டும். நாங்களே ஏதாவது சொந்தமாகச்செய்ய முடியுமா வென்று பார்க்கலாமே... நியூயாய்க்கிலை எத்தனைபேர் சொந்தமாகத் தொழில் செய்து முன்னுக்கு வந்திருக் கிறான்கள்.. நீ என்ன சொல்லுறாய்?"

"அது சரி.. நீ சொல்லுறதும் ஒரு விதத்திலை சரியாய்த்தானிருக்கு. ஆனா கையிலையோ எந்தவிதச் சேமிப்பு மில்லை. இந்த நிலைமையிலை எப்படிச் சொந்தத் தொழில் செய்யுறது. அப்படிச் செய்தாலும் எந்தத் தொழிலைச் செய்யுறது?"

வானத்தின் கருமை கூடிக் கொண்டே வந்தது. அருகிலிருந்த கட்டங்களிலிருந்து ஒரு சில மாடப்புறாக்கள் சிறகடித்துப் பறந்தன. இளங்கோவின் சிந்தனையிலொரு பொறி தட்டியது.

"எனக்கொரு யோசனை வருது அருள்."

"என்ன..?"

"ஒரு சின்ன "பிசினஸ்" செய்து பார்க்க நல்லதொரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு.."

"எந்தச் சந்தர்ப்பத்தைச் சொல்லுறாய்? எனக்கென்றால் ஒன்றுமாய் விளங்கேலையே.. வடிவாய் விளக்கமாய்த்தான் சொல்லேன்.."

"இன்னும் கொஞ்ச நேரத்திலை மழை கொட்டோ கொட்டென்று கொட்டப் போகுது.."

"அதுக்கும் பிசினசுக்கும் என்ன சம்பந்தம்..?"

"சம்பந்தமிருக்கே.. இந்த பிசினசைச் செய்து பார்க்கிறதாலை பெரிசாய்ப் பணம் கிடைக்காட்டியும் நாங்கள் சொந்த பிசினஸ் செய்யக் கூடியவர்களாவென்று "டெஸ்ட்" பண்ணிப் பார்க்க இதுவொரு நல்லதொரு சந்தர்ப்பம்..."

"பெரிசாகப் புதிர் போடாமல் கெதியாச் சொல்லித் தொலை. தலை வெடித்து விடும் போலைக் கிடக்கு"

"மழைக்கும் இப்ப நாங்க செய்யப் போகிற பிசினசுக்கும் தொடர்பிருக்கென்று சொல்லியும் இன்னும் உனக்கு விளங்கவில்லையே. இப்பவாது விளங்குதா என்ன பிசினசென்று?"

"இஞ்சைபார் இளங்கோ. நானொன்றும் உன்னை மாதிரி பெரிய மூளைசாலியில்லை. பேசாமல் சொல்லித் தொலை. புதிர் போடுறானாம் புதிர். இருக்கிற நிலைமையிலை இதுக்கொன்றும் குறைச்சலில்லை" என்று அருள் சிறிது சலித்துக் கொண்டான்.

"உன்னிடம் எவ்வளவு டொலர்களிருக்கு அருள்?"

"என்னத்துக்குக் கேட்கிறாய்? ஏன், கையிலை இப்ப ஐம்பது டொலர்களைவரை இருக்கு?"

"அது காணும். என்னட்டையும் கையிலை ஒரு நாற்பது இருக்கு. ஆனால் அவ்வளவு செலவு வராது. ஆளாளுக்கு இருபது டொலர்களை வரைதான் செலவு வரும். நான் நினைச்ச பிசினசுக்கு இரண்டு பேருக்கும் சேர்த்து நாற்பது டொலர்கள் காணும்."

இளங்கோவே தொடர்ந்தான்: "இன்னும் கொஞ்ச நேரத்திலை மழை வந்துவிடும். அதற்குள்ளை கெதியாக பிசினசைத் தொடங்க வேண்டும். நான் சொல்ல வந்த பிசினஸ் குடை வியாபாரம்தான்."

அருளுக்குச் சிறிது திகைப்பாகவிருந்தது. அவன் சிறிதும் இதனை எதிர்பார்க்கவில்லை.

"என்ன குடை வியாபாரமோ.. உனக்கென்ன விசரே பிடிச்சிருக்கு? உண்மையாத்தான் சொல்லுறியோ?"

"ஓம் அருள். உண்மையாத்தான் சொல்லுறன். குடை வியாபாரம்தான். அதிலையென்ன வெக்கம். கஷ்டம். செய்து பார்க்க வேண்டியதுதான்.."

"எனக்கென்றால் ரோட்டிலை நின்று விக்கிறதுக்கு அவ்வளவு விருப்பமாயில்லை. வேறை ஏதாவது பிசினசிருந் தால் சொல்லு.."

"இஞ்சைபார் அருள். இப்பிடி எல்லாத்துக்கும் வெக்கப்பட்டால் எங்களாலை ஒன்றுமே செய்ய முடியாது. யாரைப் பார்த்து வெக்கப்படுகிறாய்? இந்த ஊர்ச் சனங்களைப் பார்த்தா? நாளைக்கு நீ பசியிலை கிடந்து வாடினா அவங்களா வந்து உனக்குச் சோறு போடப் போகிறான்கள்? தேவை யில்லாமல் வெக்கப்படுறதை விட்டிடு. சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டுமென்றால் இப்பிடியெல்லாம் வெக்கப்படக் கூடாது. எங்களாலை முடியுமாவென்று பார்க்க வேண்டும். என்ன சொல்லுறாய்?"

"நீ சொல்லுறதிலையுமொரு நியாயமிருக்கு. வெக்கப் பட்டால் வியாபாரமொன்றும் செய்ய முடியாதுதான். இறங்கிப் பார்க்க வேண்டியதுதான். இப்ப என்ன செய்ய வேண்டுமென்று நீ நினைக்கிறாய்?"

"உனக்கொரு டசின், எனக்கொரு டசின் குடைகள் வாங்குவம். எம்பயர் ஸ்டேட் பில்டிங்கினொருபக்கம் நீ நின்று வில். மற்றப்பக்கம் நான் விக்கிறேன். ஆளுக்கு பத்துக் குடை களை ஐந்து டொலர்களுக்கு வித்தாலும் ஒவ்வொருவருக்கும் முப்பது டொலர்களாவது மிஞ்சும். இரண்டு குடைகளும் மிச்சம். முழுவதையும் விக்க முடிஞ்சால் அது உண்மையிலேயே பெரிய சாதனை."

"இளங்கோ! நோ செல்லுறதைக் கேட்க நல்லாய்த் தானிருக்கு. நீ நினைக்கிறாயா விக்க முடியுமென்று. அப்பிடி வித்தால் உண்மையிலேயே நல்லதுதான். இருபது டொலர்களி லையிருந்து முப்பது டொலர்கள் லாபம். முயற்சி செய்யுற தாலை நாங்களொன்றும் இழக்கப் போகிறதில்லை. "நதிங் டு

லூஸ்"

அதுவரை பொறுமையாக இருந்த வானம் இலேசாகத் தூமிக்கத் தொடங்கியது. அதனை அவதானித்த இளங்கோ கூறினான்: "இனியும் மினக்கெடக் கூடாது. எங்கேயாவது "ஹோல் சேல்" கடைகளேதாவது தெரிகிறதா பார்"

அவர்களுடைய நல்ல காலமோ என்னவோ அருகிலேயே சிறிய மொத்தவிலைக் கடையொன்று பிராட்வே வீதியில் தென்பட்டது. அங்கு சென்று இரு "டசின்" குடை களை டசின் இருபது டொலர்களுக்கு வாங்கினார்கள். குடை களுடன் வெளியில் வந்தபோது நண்பர்களிருவருக்கும் ஓர் இனம் புரியாத மகிழ்ச்சியேற்பட்டது. உலகப் புகழ்பெற்ற மாநகரில் குடை விற்பதை எண்ணுகையில் ஒருவித வியப்பும், ஆர்வமுமேற்பட்டன. நண்பர்களிருவரும் குடைகளுடன் உலகப் புகழ்பெற்ற "எம்பயர் ஸ்டேட் பில்டிங்கை" வந்தடைந்த பொழுது அதுவரை பொறுமையாகத் துமித்துக் கொண்டிருந்த நகரத்து மழை நகரத்து வானிலிருந்து கொட்டோ கொட்டென்று கொட்டத் தொடங்கி விட்டது. இடியும், மின்னலும் , காற்றும் கூடிய மழை. திடீர் மழையினை எதிர்பார்க்காத நகரத்துவாசிகள் சிலர் டாக்சிகளிலேறிப் பறந்தார்கள். பணத்தில் சிக்கனம் பிடிக்கும் சிலர் கட்டடங் களின் முகப்புகளின் கீழ் காத்து நின்றார்கள். மேலும் சிலரின் கவனம் குடை வியாபாரிகளின் பக்கம் திரும்பியது. இளங்கோ வும் அருள்ராசாவும் "குடை ஒன்று ஐந்து டொலர்கள் மட்டுமே. குடை! குடை!" என்று கூவிக்கொண்டே தங்களது குடை வியாபாரத்தை ஆரம்பித்தார்கள். நியூயார்க் மாநகரில் நடைபாதையில் நின்று குடை விற்பதிலுமொரு "திரில்" இருக்கத்தான் இருக்கிறதென்று எண்ணிய இளங்கோ "குடை. வலிமையான குடை. நல்ல குடை. ஓடி வாருங்கள். ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். குடை ஒன்று ஐந்து டொலர்கள் மட்டுமே!" என்று பலமாகக் கத்தி பாவனையாளர்களைத் தன் பக்கம் இழுப்பதற்கு முயன்றுகொண்டிருந்தான். அதில் ஓரளவு வெற்றியும் அடைந்திருந்தான். இவ்விதமாக நண்பர்களிரு வரதும் குடை வியாபாரம் ஆரம்பத்தில் மந்தமாக ஆரம்பித்து விரைவிலேயே மழையின் அதிகரிப்புடன் அதிகரிக்கத் தொடங்கியது.

## அத்தியாயம் பதினாறு:
## 'ஹரிபாபுவின் விளம்பரம்!'

காலை மணி பத்திருக்கும். இளங்கோ படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். அறை நண்பர்களனைவரும் வேலைக்குப் போய் விட்டிருந்தார்கள். அருள்ராசாவும் ஏதோ அலுவலாக வெளியில் சென்று விட்டிருந்தான். அன்று இளங்கோவின் மனநிலை எங்கும் செல்வதற்கு இடம் கொடுக்க வில்லை. அன்றையைப் பொழுதினைத் தன்னிருப்பிடத் திலேயே ஓய்வெடுத்துக் கழிப்பதற்கு அவன் மனம் விரும்பியது. கடந்த சில வாரங்களாக அலைந்த அலைச்சலில் உடம்பு முறிந்து போய் விட்டிருந்தது. ஓய்வை உடலும் உள்ளமும் நாடின. படுத்திருந்தபடியே சிந்திப்பதிலுமொரு சுகமிருக்கத்தான் செய்தது. அவனது சிந்தனை ஒரு கணம் குடை வியாபாரத்தில் பதிந்து மீண்டது. இலேசாக இளநகை யொன்று கோடிழுத்தது. நியூயார்க்கில் குடை வியாபாரம்... நல்லதொரு அனுபவம். முதலுக்கு நிச்சயம் நட்டமில்லாமல் அவர்களது குடை வியாபாரம் அமைந்திருந்தது நல்லதொரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக அமைந்திருந்தது. அவன் அன்று எட்டுக் குடைகளை நாற்பது டாலர்களுக்கு விற்றிருந் தான். அருள்ராசா ஏழு குடைகளை முப்பத்தைந்து டாலர் களுக்கு விற்றிருந்தான். அவனுக்கு இருபது டாலர்கள் இலாப மும், நான்கு குடைகள் மீதியுமாகக் கிடைத்திருந்தன. சொந்தத் தொழில் செய்வதில் உண்மையில் இன்பமிருக்கத்தான் செய்கிறது. யாரிடமும் கையேந்தாமல், தன் தலைவிதியினைத் தானே நிர்ணயிப்பதிலுள்ள சுகமே தனிதானென்று பட்டது

யாரோ நடந்து வருமோசை கேட்டது. வந்தது திருமதி பத்மா அஜித். அவளது கைகளிலொரு வான் கடிதம் கிடைத் தது. இளங்கோ படுக்கையிலிருந்து எழுந்தமர்த்தான். பத்மா அஜித் அவனிடம் கடிதத்தைத் தந்தவாறு கூறினாள்: "இக்கடிதம் உனக்குத்தான் இளங்கோ?"

"நன்றி" என்றவாறு கடித்ததை வாங்கிக் கொண்டான். ஊரிலிருந்து அம்மா எழுதியிருந்தாள்.

அவனருகில் சற்றுத் தள்ளி அமர்ந்தவளாகத் திருமதி பத்மா அஜித் கேட்டாள்: "இளங்கோ எவ்விதம் உனது வேலை தேடும் படலம் போகிறது?"

"எல்லா வழிகளிலும் நானும் முயற்சி செய்து கொண்டு தானிருக்கிறேன். இதுவரையில் ஒன்றும் பெரிதாக வந்தமைய வில்லை."

"இந்தியா எப்ரோட் பத்திரிகையில் விற்பனை முகவனுக்குரிய விளம்பரமொன்று வந்திருந்தது. உடனடி யாகத் தேவையாம். அன்றாடம் கைகளில் ஊதியம் வழங்கப் படுமாம். அதைப் பார்த்ததும் உன் ஞாபகம்தான் வந்தது. அந்த விளம்பரத்தை மட்டும் கத்தரித்து வைத்துள்ளேன் உனக்குத் தேவைப்பட்டாலுமென்று... விருப்பமென்றால் சொல்லு. எடுத்துத் தருகிறேன்"

இளங்கோவுக்கு மீண்டும் குடை வியாபார நினைப்பு வந்தது. சிரித்துக் கொண்டான்.

"என்ன சிரிக்கிறாய் உனக்குள்ளேயே இளங்கோ" என்றாள் திருமதி பத்மா அஜித்.

"ஒன்றுமில்லை. குடை விற்ற கதை ஞாபகத்திற்கு வந்தது?"

"அதென்ன புதுக்கதை. குடை வியாபாரம் செய்தாயா? எங்கே?"

இவ்விதம் திருமதி பத்மா அஜித் கேட்கவும் இளங்கோ அவளுக்குத் தாங்கள் செய்த குடை வியாபாரம் பற்றி விரிவாக எடுத்துரைத்தான். அதனைக் கேட்டதும் திருமதி பத்மா அஜித் விழுந்து விழுந்து சிரித்தாள். அத்துடன் கூறினாள்: "நீ பிழைத்துக் கொள்வாய். உனக்கு எந்தச் சூழலையும் எதிர்த்து நின்று போராடும் ஆற்றல் நிறையவே உள்ளது. உன்னை மாதிரியெல்லாம் என்னால் செய்து பார்க்கவே முடியாது."

"பார்த்தீர்களா குடை வியாபாரம் கூட இப்பொழுது ஒருவகையில் எனக்கு உதவப் போகிறதை.."

"குடை வியாபாரம் உதவப் போகிறதா?"

"நீங்கள் கூறிய விற்பனை முகவன் வேலைக்கு இப்பொழுதே எனக்கு அமெரிக்க விற்பனை முகவன் அனுபவம் குடை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்து விட்டதல்லவா? இந்த அமெரிக்க அனுபவத்தை மூலதனமாக வைத்து அடுத்த வேலை எடுக்க முடிகிறதல்லவா."

"பார்த்தாயா இளங்கோ. எந்தச் செயலுமே வீணாகப் போவதில்லை. ஏதோ ஒருவகையில் உதவத்தான் செய்கிறது

இல்லையா? குடை வியாபாரம் உனக்கு நட்டத்தைத் தர வில்லை. அதே சமயம் அமெரிக்க அனுபவத்தையுமல்லவா தந்துள்ளது. எதற்கும் அந்த விளம்பரத்தைக் கொண்டு வந்து காட்டுகிறேன். வாசித்துப் பார். பிடித்திருந்தால் சென்று முயன்று பார். சில நேரம் அதிருஷ்டம்கூட அடிக்கலாம் யார் கண்டது?"

இவ்விதம் கூறிய திருமதி பத்மா அஜித் கீழே சென்று சில நிமிடங்களிலேயே அந்த விளம்பரத்துடன் திரும்பி வந்தாள். அந்த விளம்பரத்தை வாங்கி வாசித்தான் இளங்கோ. அதில் பின்வருமாறு சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது:

"உடனடியாக இரு விற்பனை முகவர்கள் தேவை. மணித்தியாலத்திற்கு நான்கு டாலர்கள் ஊதியமாக வழங்கப் படும். ஆர்வமுள்ளவர்கள் ஹரிபாபுவை "மேற்கு நான்காம் தெருவும், அமெரிக்கா அவென்யுவும் சந்திக்குமிடத்தில் (வடமேற்கில்) வந்து சந்திக்கவும்"

அந்த விளம்பரம் அவனுக்குச் சிறிது விசித்திரமாகப் பட்டது.

"இந்த விளம்பரம் எனக்கு நூதனமாகப் படுகிறது. வித்தியாசமான விளம்பரம்!"

"ஏன் அப்படிச் சொல்கிறாய் இளங்கோ?"

"விற்பனை முகவர்களுக்கான விளம்பரம். ஆனால் வீதியின் மூலையொன்றில் சந்திக்கும்படி கூறப்பட்டுள்ளதே. விநோதமாக உங்களுக்குப் படவில்லையா?"

அப்பொழுதுதான் அந்த விடயமே திருமதி பத்மா அஜித்துக்கும் உறைத்தது.

"நீ சொல்லுவதும் சரிதான் இளங்கோ. நான் அந்த விடயத்தைப் பெரிதாகக் கவனிக்கவில்லை. நீ சொல்லிய பின்புதான் கவனித்துப் பார்க்கின்றேன். உண்மைதான். விநோதமான விளம்பரம்தான். ஒருவேளை..."

"ஒருவேளை.. என்ன திருமதி பத்மா அஜித் அவர்களே!"

"ஒருவேளை ஹரிபாபு நடைபாதை வியாபாரியோ. எதற்கும் ஒருமுறை அவனைப் போய்ப் பார்ப்பதுதான் சரி யாகப் படுகிறது. சிலவேளை.."

"என்ன சிலவேளை... பத்மா அஜித் அவர்களே!"

"சிலவேளை அந்நியர்களுக்குத் தன்னிருப்பிடத்தைக் காட்ட அவன் விரும்பவில்லையோ என்னவோ"

"நீங்கள் கூறுவதும் சரிதான். முதல்வேளையாக ஹரிபாபுவைச் சென்று சந்திக்க வேண்டியதுதான். அவனிடமே வேலை என்னவென்று கேட்டுத் தெரிந்து கொள்வது தான் சரியான நடைமுறை. அதற்குமுதல் வீணாக ஏனிந்தக் கற்பனை. தேவையற்ற மன உளைச்சல்."

இதற்குள் திருமதி பத்மா அஜித் எழுந்து கொண்டாள்: "இளங்கோ. மீண்டும் கூறுகிறேன். என்னுடைய ஆலோசனை யென்னவென்றால்... நீங்கள் கூறியபடியே அவனை, ஹரி பாபுவை, சந்திக்க வேண்டியதுதான்"

இளங்கோவுக்கும் அவள், திருமதி பத்மா அஜித், கூறுவதே சரியாகப் பட்டது.

அந்திச் சூரியனின் தண்ணொளியில் பூமிப்பெண் குளித்துக் கொண்டிருந்தாள். பகல் முழுவதும் நகரில் அலைந்து திரிந்துவிட்டு அருள்ராசா மெதுவாக வந்து சேர்ந்தான்.

"அருள். உனக்கொரு விசயம் தெரியுமே?"

"என்ன... "

"திருமதி பத்மா அஜித் ஒரு விளம்பரப் பிரதியினைத் தந்தவர். அதில் விற்பனை முகவர்கள் தேவையெனப் போட்டுள்ளதாம். ஆனால்..."

"ஆனால்... என்ன இளங்கோ?"

"எனக்கென்றால் அந்த விளம்பரத்திலெங்கோவொரு குறை இருப்பதுபோல் படுகிறது"

"உனக்கெப்பவுமே இப்படித்தான். ஏதாவ தொன்றிலை குறை கண்டுபிடிக்காவிட்டால் உனக்குப் பொழுதே விடியாதே!"

"பின்னே... விற்பனை முகவர்கள் தேவையென்று விளம்பரம். ஆனால் நடைபாதையில் சந்திப்பும் , நேர்முக வர்ணனையுமாம். இது எப்படியிருக்கு?"

"இளங்கோ! எதற்குமொருமுறை அந்த விளம்பரத்தை மீண்டும் படித்துப் பார். சில சமயங்களில் உண்மைகூட நித்திரை கொள்வதுண்டு."

"சரி சரி அருள். சுற்றி வளைத்துப் பேசாமல் விசயத் திற்கு வா. இப்பொழுது நான் என்ன செய்யவேண்டுமென நீ நினைக்கிறாய்? "

"நாமிருவரும் அந்த விளம்பரத்திலுள்ளவாறே நாளைக் காலை ஹரிபாபுவை அவன் குறிப்பிட்ட இடத்திலேயே சென்று சந்திப்போம். அவன் குறிப்பிடும் வேலை பற்றி மேலுமதிகத் தகவல்களை அச்சந்திப்பின் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். பிடித்திருந்தால் செய்கிறோம். பிடிக்கா விட்டால் திரும்பி விடுவோம். குடியா முழுகி விடப் போகிறது. நீ என்ன சொல்லுகிறாய்?"

இளங்கோவுக்கும் அருள் கூறுவதே சரியாகப் பட்டது.

"அருள் நீ கூறுவதே சரி. அவ்விதமே நாளைக் காலைப் பொழுதினைக் ஹரிபாபுவிடம் கழித்து விடுவோம்."

இவ்வாறு நண்பர்களிருவரும் அன்றிரவு நீண்ட நேரம் இவ்விடயம் பற்றியே கதைத்துக் கொண்டிருந்துவிட்டுத் தூங்கிப் போனார்கள். தூங்கப் போவதற்கு முன் இளங்கோ தாயாரின் கடிதத்தை எழுத்து வாசித்தான். அதில் பின்வருமாறு சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது:


"இளங்கோ! நீ அங்கு நல்ல சுகமாக இருப்பாயென நினைக்கிறேன் வேண்டுகிறோம். புது இடம். கொஞ்சம் கவனமாக இருக்கப் பழகு. இங்கு நாங்கள் அனைவரும் சுகமே. இங்கு சூழ்நிலையொன்றும் அவ்வளவு சரியாக இல்லை. எல்லாம் கடவுளுக்கே வெளிச்சம். பார்வதி நேற்றும் வந்து போனவ. அவ மட்டும் அவசரத்துக்கு உதவியிருக்காவிட்டால் நீ வெளியிலை போயிருக்க முடியாது. பாவம் அவள். உன் நிலையும் எனக்கு விளங்குது. இவ்வளவு நாளும் உள்ளுக் குள்ளை உன்னை வைச்சிருந்தாங்கள். இப்பத்தான் வெளியிலை விட்டிருக்கிறான்கள். கெதியிலை உழைக்கப்பார். அப்ப அப்ப கொஞ்சம் கொஞ்சமாவது அனுப்பி வைச்சாயென்றால் உதவியாகவிருக்கும்."

(தொடரும்)

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



*11*

எப்போதோ பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்னர் அந்த வீதிக்கு முதல்தடவையாக தார் போட்டிருப் பார்கள் போலும் எப்போதோ அது கழன்று விளாங்காய் மாங்காய் பருமனுள்ள சரளைக்கற்களும் சிறு சல்லிக்கற் களுமாக வீதியில் பரவிக் கிடந்தது. அதன் ஒரு ஓரமாக மிதிவண்டியள் போய்வந்து கொண்டிருந்த மண் வீதித் தடம் கிடந்தது. மிக நிதானமாக அந்த மண் தடத்திலேயே மிதி வண்டி ஓடினாலும் இடையிடையே உருண்டு வந்த கற்கள் மிதிவண்டியை இடறாமல் இல்லை. ஆனாலும் வண்டிகள் அனைத்தும் பாரமாகவே இருந்ததால் அவை கீழே விழு சாத்தியமில்லை. கைப்பிடிகள் இறுக்கமாகவே இருந்தன. இந்த இடப்பெயர்வுதான் அவர்களுடைய முதலாவது இடப்பெயர்வு.

இரவு எட்டுமணிகடந்து வீட்டு முற்றத்தில் வந்து குதித்தவர்களை வெளியிலேயே படுத்திருந்த மகேந்திரன் கண்டு ஆச்சரியப்பட்டான். "அம்மா...டே...பிள்ள எழும்புங்கடி ஆர் வந்திருக்கிறாங்கண்டு பாருங்க" பத்துக்கு பதினைந்தடி நீளமான கொட்டில்தான் அது அங்கே பாப்பாக்காவின் மகள்களான ஈஸ்வரியும் பவானியும் குடும்பத்துடன் வந்து தங்கியிருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் தலா மும்மூன்று பிள்ளைகள். அவர் களுடன் பாப்பாக்கா தனது இரு மகள்களுடன் இருந்தார். இப்போது ஆறு பேர் புதிதாக வந்திருந்தனர். முற்றம் அழகாக தரை மெழுகப்பட்டு ஒரு பெரும் வீரைக்குற்றியில் தீ மூட்டம் போட்டிருந்தனர். அதையும் மேலே நெருப்பு தெரியாத வண்ணம் ஒரு பந்தலைக் காட்டுத்தடிகளால் போட்டு மறைத்திருந்தார்கள். தீ தெரிந்தால் உலங்கு வானூர்திகளின் தாக்குதல் வரும்.

வீட்டுக்குள்ளிருந்து பாப்பாக்கா பவானி பிருந்தா என அழைக்கப்படும் பாப்பாக்காவின் மகள் என மளமள வென வெளியே எட்டிப்பார்த்தார்கள்.

"என்னப்பா மழைக்குணங்கூட இல்லையே எப்பிடி வெளிக்கிட்டீங்க" என்று கேலியாக கேட்டாள் பவானி.

"இப்ப இது ரொம்ப முக்கியம் அதுகள் களைச்சு வந்திருக்குதுகள் முதல் போய் தண்ணி கொண்டா" என்று அவளை விரட்டினார் பாப்பாக்கா. பிருந்தா யாரும் சொல்லாமலே. அடுப்பை மூட்டி தேநீர் தயாரித்தார். முற்றத்தில் ஒரு வாளியில் நீர் இருந்தது. காந்தன் அதில் தனது கைகால் முகம் என்பவற்றை அலசிவிட்டு, " அம்மா வா வந்து முகத்தை கழுவு களைப்பு போகும் ..எல்லாரும் வாங்க கழுவீற்று விடுங்க நான் போய் தண்ணி எடுத்துக் கொண்டு வாறன்" என்றான். எல்லோரும் கழுவிய பின் வாளியை எடுத்துக்கொண்டு காந்தனும் சுதனும் அந்தக் கிராமத்திலிருந்த ஒரேயொரு நீர் வழங்கியான குழாய்க் கிணற்றடிக்குப் போய் தண்ணீர் கொண்டு வந்தனர். அதற்குள் தேநீரும் சீனியும் வரவே அவரவர் உள்ளங்கையில் ஒவ்வொரு சொட்டு சீனியை எடுத்துக் கொண்டு அதை நக்கியவாறே தேநீரை அருந்தி முடித்தனர் லெச்சிமிக்கு மற்றவர்களுக்கு கீழே விழுந்து படுக்க வேண்டும்போல அவ்வளவு களைப்பு.

ஆனால் அதற்குள் உலை வைத்து அரிசி போட்டு அவர்களுக்கு உணவு தயாரித்தனர் பவானியும் பாப்பாக்கா வும். கொண்டு வந்த கத்தரிக்காயை பருப்பில் கலந்து ஒரு சாம்பார் வைத்தார்கள். வீட்டிலுள்ளவர்கள் முன்னமே சாப்பிட்டுவிட்டு படுத்திருந்தனர். எனவே வந்தவர்கள் சாப்பிட்டனர் அமிர்தமாக இருந்தது அந்த உணவு. அது மட்டுமல்ல அச்சமற்ற உறக்கம் அன்று கிடைத்தது எந்த கவலையும் அற்று தம்மை மறந்து தூங்கினர்.

சுமார் ஆறுமாதங்களின் முன் பாப்பாக்கா அங்கே குடிவந்திருந்தார் அது ஒரு பெரிய கதை. அவர் தனது பிள்ளைகளின் முகத்தில் கூட விழிக்கக் கூடாது என கருதி இங்கு வந்தார் அவர் வந்த ஒரு வாரத்தின் பின் ஒருநாள் லெச்சிமி அவரைப்பார்க்க வந்து போனாள் பெருவனத்தின் ஓரம். அதுதான் காட்டோரமான வீடுகூட. "பயமாக இல்லையா" என்று அவள் கேட்டதற்கு பாப்பாக்கா சிரித்தார். "என்னை ஏமாற்றிய எனது பிள்ளைகளை விட இந்த மிருகங்கள் என்ன செய்துவிடப் போகிறது." என்றார். காலையில் பவானியும் ஈஸ்வரியும் மடுவிற்குப் போகப் போவதாக சொன்னார். அவர்கள் இந்தியாவுக்குப் போகவே விரும்புகிறார்கள். இங்கே இருந்து சரிவராது. மடுவிலிருந்து தான் மக்கள் போகிறார்கள் அவர்களுடன் போகலாம் இனி அங்கே போய் அகதியாக பதிவு செய்ததும் உலர் உணவு கொடுப்பார்கள் அதையும் எடுத்துக் கொண்டு போகலாம், என கூறினாள். தினமும் மடுவிலிருந்து சாரிசாரியாக மக்கள் கால்நடையாகவே மன்னார் பகுதிக்கு சென்று கொண்டிருந் தனர் பெண்கள் குழந்தைகள், வயோதிபர்கள் என பலதரப் பட்ட மக்கள்கூட்டம் கும்பல்களாக சென்று கொண்டி ருந்தனர். காந்தனின் மனைவியின் தாயார்தான் ஈஸ்வரி, அவளுடைய குடும்பமும் இந்தியாவுக்கு போவதை கவலை

யோடு கவனித்துக் கொண்டிருந்தாள். "இந்தியாவிற்குப் போனால் இனி எப்பதான் வருவார்களோ" என்று கவலைப் பட்டாள். இதை கவனித்த லெச்சிமி "மெய்யேடா காந்தா நீயும் சுந்தரியையும் பிள்ளையையும் கொண்டு போகில் அவையோட போவன். நானும் சிவாவும் சுதனும்தானே சமாளிக்கிறன்." என்றாள்.

சுந்தரியின் கண்கள் பனீரிட "ங...ஓமாவா" என்றாள். அவனும் ஒத்துக் கொண்டான். மறுநாள் அதன் படியே சட்டிபானை மூட்டை முடிச்சுகளுடன் அந்த மூன்று குடும்பங்களுடன் காந்தனின் குடும்பமும் ஒன்றாக, மடுவை நோக்கிப்பயணித்தன. பாப்பாக்கா தன் இரு மகள்களுடன். லெச்சிமியும் சுதனும் சிவாவுமாக அங்கே தங்கினர். அருகிலேயே இருந்த வேலன்குளத்தில் கிராம சேவையாளர் வீட்டிற்கே வந்து இவர்களை அகதிகளாகப் பதிவு செய்தார். மறுநாள் அரிசி பருப்பு சீனி பொன்ற பொருட்களையும் பூவரசன்குளம் சங்கக்கடையில் சென்று பெற்றுக் கொண்டனர்.

அவர்களது வீட்டிலிருந்து கொஞ்சம் முன்பாக பல வீடுகள் கைவிடப்பட்டிருந்தன. அந்த வீடுகளின் உரிமை யாளர்கள் இந்தியாவுக்குப் போய்விட்டனர். லெச்சிமியும் அந்த வீடுகளில் தமக்கு வசதியான ஒரு வீட்டை சுத்தம் செய்து அங்கே வசிக்க நினைத்தாள். பகலில் அக்கம்பக்கம் காடுகளில் வேட்டைக்கு செல்பவர்களுடன் சுதன் பேசித் திரிந்தான். அவன் இப்போதுதான் ஓயெல் முடித்து ஏயெல் படிக்க ஆரம்பித்திருந்தான். ஐந்து மாதங்கள் படித்தான் அதற்குள் பிரச்சனை வந்துவிட்டது. இங்கே பூவரசன் குளத்தின் பாடசாலையில் அந்த வகுப்பு இருந்தது. அவனைக் கொண்டு போய் அங்கே சேர்த்துவிட முடி வெடுத்திருந்தாள் எனினும் பாடசாலை இப்போது இயங்க வில்லை. மற்றவன் சிவா பத்தாம் வகுப்பில் படித்தான். அண்ணனும் தம்பியுமாக ஒரு மிதிவண்டியில் போகலாம். என முடிவாயிற்று. நாளை காலையில் தாம் பார்த்து வைத் திருந்த வீட்டிற்கு செல்ல அவர்கள் முடிவெடுத்திருந்தனர்.

அன்றிரவு ரொட்டி சுட்டு அதற்கான சம்பலை தயார் செய்ய பெண்கள் முனைந்த போது கோஞ்சம் தள்ளி யிருந்த வேலியில் யாரோ தடிகளை முறிப்பது தெளிவாக கேட்டது. "பேயன்கள் பகலில உந்த விறகை முறிச்சு வச்சா என்ன ராராவா தடி முறிக்கிறாங்கள்." என்றான் சிவா. பாப்பாக்கா "அந்த மூட்டத்தை திறந்து விடுங்க" என்றபடி ஓடிவந்து தீமூட்டத்தில் பழைய குப்பைகளை வாரிப் போட்டு அதை கொழுந்து விட்டு எரிய வைத்தாள். வேலிப்பக்கம் இருந்து வந்த தடிமுறித்த சத்தம் விலகிப் போனது. அதொண்டுமில்ல ஒரு ஆனையொண்டு தனியத் திரியிது. ஏங்கயோ கண்ணிவெடியில காலை விட்டிட்டுது கால் காயத்தோட அலையிது மற்ற யானையள் சேர்க்க யில்ல... பாவம் அதுகும் என்னைப்போல தான் என சலித்தாள் பாப்பாக்கா.

"அட யானையே முதலே சொன்னா பாத்திருப் பனே" என அங்கலாய்த்தான் சிவா.

"பொறடா பொறு பாக்கலாம். ஆனையென்ன புலியையே பாக்கலாம். பங்க பேக்மன்ர காணிக்க மேஞ்ச ஆடுகளை பிடிச்சுக்கொண்டு போகுதாம்." என்றாள் பிருந்தா.

இரவு படுத்திருந்த லெச்சிமி திடீரென எழுந்து உட்கார்ந்தாள். உடல் முழுதும் வியர்வை தெப்பலாக நனைந்திருந்தாள். மெய்யேக்கா புழுக்கம் தாங்கேலாதாம். நான் வெளியில படுக்கட்டே" ஏற்கெனவே சுதனும் மகேந்திரனும் வெளியேதான் படுத்திருந்தார்கள். இப்போது லெச்சிமியும் போய் அவர்களுக்கு அருகில் தனது சாக்கை விரித்தாள். அப்படியும் தூக்கம் வரவில்லை. ஒருவழியாக அதிகாலையில் உறங்கிப்போனாள்.

"என்னமோ தெரியேல்ல மனம் அலையிது. ஊருக்கைதான் பிரச்சனையோ... இல்ல மடுவுக்கு போனதுகள் ஏதும் பிரச்சனையோ தெரியேல்ல."என்றாள் லெச்சிமி. அவள் ஏதோ கனவு கண்டிருப்பாள். என்பதை பாப்பாக்கா உணர்ந்தாள். லெச்சிமி காணுகிற கனவுகள் பெரும்பாலும் பலிப்பதுண்டு. அதேபோல மற்றவர் களுடைய கனவுக்கும் அவள் கருத்து சொல்வாள் அது பெரும்பாலும் சரியாகவே இருக்கும். பாப்பாக்கா நீண்ட நாளைய ஏன் சிறுவயது முதலே அவளுடைய தோழிதான். ஆனால் என்ன அவளைவிட பாப்பாக்கா பதினைந்து வயதாவது அதிகம்தான். " ஏன் என்ன கண்டாய்"என்றாள்.

"இல்ல கண்ட நேரத்துக்கு அது இண்டைக்கே பலிக்கும் பாப்பம் பொறுங்க இன்னும் ஆரோ வரப் போகினம்" என்றாள். அவள் சொல்லி வாய் மூட முன்னம் அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

*12*

பெரு வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. எங்கோ கோவில் திருவிழாவிற்காக போவதுபோல மக்கள் கூட்டம் கூட்டமாக போய்க் கொண்டிருக்கிறார்கள். லெச்சிமியும் அவர்களுடன் பயணித்துக் கொண்டிருக் கிறாள். அவளுடைய கையிலும் இடுப்பிலும் பிள்ளைகளை வைத்திருக்கிறாள். திடீரெனப்பார்த்தால் வெள்ளம் வடிந்து போன, ஒரு ஆற்றங்கரையில் நிற்கிறாள். அவளிடம் இப்பவும் குழந்தைகள் இருக்கின்றனர். ஆனால் வேறெ வரும் இல்லாமல் அவள் தனியாக நிற்கிறாள். அவள் போக வேண்டியது வீட்டிற்கு. அவளது வழி தவறிவிட்டது. கூடவே பிள்ளைகளும் இவ்வளவு சின்ன குழந்தைகளை கொண்டு நடக்க ஆரம்பிக்கிறாள். எங்கே போகிறது இந்தப் பாதை. என்று யாரையும் கேட்க முடியவில்லை. அவளுக்கு பதில் சொல்ல யாருமில்லை. இடையில் ஒரு பாறை அதில் நின்றபடி ஒருவர் யாருக்கோ வழி சொல்கிறார். இவளும் அவரை நோக்கி கூச்சலிடுகிறாள்.

ஆனால் அந்தக்கூச்சல் வெளியே வந்துவிடவே மகேந்திரன் தட்டி எழுப்பினான் "அக்கா அக்கா எழும்பக்கா என்ன வாய் புசத்திறாய் விடிஞ்சிட்டுதுபார்" என்றான். அந்த அதிகாலையிலும் அவளுடைய உடல் வியர்த்திருந்தது. தேநீரைக் கொண்டுவந்து அருகில் வைத்த பாப்பக்கா கேட்டாள்.

"என்ன கனவு"...

"ஆரோ சாகப்போகினம், என்னைச் சேந்தவை அல்ல ஆனா எனக்குத்தான் பாரம்" குழந்தையள் அல்லது நோயாளியள் எப்பிடியோ விவரந் தெரியேல்ல பராமரிக்க

வேண்டிய சுமை. நானும் பாதைதெரியாம நிக்கப்போறன். என்றவள் எழுந்து சென்று முகத்தை அலம்பிய பின் தேநீரை அருந்திவிட்டு காட்டோரமாக இருந்த ஒரு மரத்தடியில் போய் சம்மணமிட்டு அமர்ந்தாள்.

அவள் தியானத்தில் அமர்ந்தபின் பாப்பாக்கா அவளை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாமென அறிவுறுத்தினாள். சுமார் இருபது நிமிடங்கள் கழித்து அவள் தெளிவாக எழுந்து வந்தாள். பழையபடி கலகலப் பாக எல்லோரிடமும் பேசினாள். பத்து அல்லது பத்தரை இருக்கும். ஒரு பருத்த பெண் ஒரு பெரிய பானையில் பாலுடன் வந்தாள். அதை பாப்பாக்காவிடம் கொடுத்து விட்டு இருந்து பேசிக்கொண்டிருந்தாள். அப்போது மிதி வண்டியில் ஒரு மூடையும் அதன்மீது ஒரு பிள்ளையையும் முன்பாரில் இரண்டு பிள்ளைகளையும் ஏற்றியவாறு கரன் லெச்சிமியின் மூத்த மருமகன் வந்தான். லெச்சிமியை கண்டதும் பிள்ளைகள் ஓடிவந்து கட்டிக் கொண்டார்கள். பார்த்துவிட்டுப் போக வந்திருப்பார்கள் என்றுதான் லெச்சிமி நினைத்தாள்.

"நேத்து ராவு மருதங்குளத்துக்க பூந்த காடையர் ஆறுபேரைக் கொண்டிட்டாங்கள். பரஞ்சோதிக்கு வெடி தியாகற்ற பெடியள் மூண்டையும் கொண்டிட்டாங்கள், ரெண்டு மூண்டுபேர் ஆபத்தான நிலைதான் ரெண்டு தப்பா தெண்ணுறாங்கள். நாங்கள் பெரியாக்கள் ஓடித்தப்புவம். பிள்ளையள என்ன செய்யிற அதுதான் உங்களோட விட்டிட்டுப் போக வந்தநான். தங்கா தனிய வெங்காயம் புடுங்குமட்டும் பாக்கத்தானே வேணும் அதுகள ஓர்சீர் பண்ணீட்டு தாயையும் கொண்டுவந்து விடவேணும்"

"அத்தான் நாங்கள் இண்டைக்கு வேற வீட்டுக்கு போறம் குழாய்க்கிணத்துக்கு நேரே கிடக்கு அந்த முட்டச் சிவர் வச்ச வீடு அங்கதான்."என்றான் சிவா முந்திக் கொண்டு.

"அந்த வீட்டு ஆக்கள் இந்தியாவுக்கு போயிட்டி னம்" சும்மாதான் கிடக்கு பின்ன அங்க போறம்" என்றாள் லெச்சிமி. கரன் சாப்பாட்டுக்கு அரிசி பருப்பு மரக்கறி சீனி என கட்டக்கூடிய பொருட்களை கட்டி வந்திருந்தான். பிள்ளை கரனுக்கு தேநீர் கொண்டுவந்தாள். "தம்பி ரொட்டி கிடக்கு திண்டிட்டு குடியுங்க" என்ற பாப்பக்காவுக்கு, "இல்லையக்கா நாங்கள் காலம சாப்பிட்டபிறகுதான் வெளிக் கிட்டநாங்கள்" என்றான் "அப்ப நான் பொயிற்று வாறன் அம்மம்மாவுக்கு கரைச்சல் குடுக்கக்கூடாது" என்று தன் பிள்ளைகள் ஒவ்வொன்றையும் முத்தமிட்டுவிட்டு புறப் பட்டான்.

பிள்ளைகளை குழாய்க்கிணற்றில் குளிப்பாட்டி சோறு காய்ச்சி, முயல் இறைச்சிக்கறிகாச்சி உணவு கொடுத்தாள் லெச்சிமி. வயிறார உண்டபின் அவர்கள் மாமன்மாரோடு அந்த குடியிருப்பை சுற்றி வந்தார்கள். சிவா வழமைபோல அங்கிருந்த வீடுகளில் ஒவ்வொரு வீடாகப் போய் தன் நட்பு வட்டத்தை விரிவு படுத்தினான். அவன் கோவில்குளத்திலும் தனது அயலிலுள்ள அனைத்து வீடுகளிலும் அந்த வீட்டுப்பிள்ளை போலதான் பழகுவான் ஒவ்வொரு வீட்டுப் பெண்களையும் முறை வைத்துத்தான் கூப்பிடுவான். ஒருவீட்டில் மாமி மச்சாள் பெரியம்மா சின்னக்காச்சி என அவ்வவ் வீட்டுப்பிள்ளைகளின் உறவே அவனுக்கும், ஒவ்வொரு வீட்டிலும் அடுக்களை வரை போய் உதவுவான். ஊருக்கே அவன் செல்லப்பிள்ளை. இங்கும் அவனால் ஒரு வீட்டோடு இருக்க முடியவில்லை. ஒருநாள் ஓடிவந்து கேட்டான் "அம்மா வீரகத்தி எண்டு உனக்கு தாத்தா இருக்கா?

"அட அவரை மறந்து போயே கனகாலம் இப்ப ஆற்றா உந்த கதை சொன்னது" என்றாள் லெச்சிமி வியப் பாக. "அம்மா அவற்ற மகள் நாகம்மா, நாகம்மாக்காவின்ர பிள்ளையள் இஞ்சதான் இருக்கினம். உன்னை அவா கண்ட வாவாம். என்னைக்கேட்டவா நீங்க கந்தப்பண்ணையின்ர மகளோ எண்டு"

"ந...நீயென்ன சொன்னாய்"

"கந்தப்பண்ணை வீட்டிலதான் இருக்கிறார் எங்களோட வரயில்ல எண்டன்" பேசாமல் இருந்துவிட்டு கேட்டான். "அப்ப அவை சொல்லுகினம் நாங்கள் அவைக்கு சொந்தக்காறராம்."

"ஓமடா அதுக்கு இப்ப என்ன"

"அப்ப ஒருக்கா வாவன் அவையட வீட்ட நான் உன்னை கூட்டிக் கொண்டு வாறனெண்டு சொன்ன நான்"

லெச்சிமிக்கு சிரிப்பு வந்தது. இனி என்றைக்கும் சேராது என்றிருந்த உறவு. இருபது வருடங்களுக்கு மேலாக தெருவில் கண்டாலும் ஒரு தலையசைப்போடு போன உறவு. இப்ப இவன் கெஞ்சிக் கொண்டு நிற்பதென்ன, சரி பொறு வாறன் என்றவள், சுதனைக்கூப்பிட்டு கவனம் பிள்ளையள் போய்ப் பாப்பக்கா வீட்டடியில நில்லு என்று விட்டு அவனுடன் புறப்பட்டாள்.

தெருக்கரையிலேயே அமைந்திருந்த அந்த வீட்டுக்கு அவள் முன்பே ஒருதடவை வந்திருந்தாள். அது ஒரு கிறிஸ்தவருக்கு சொந்தமானது. கிறிஸ்டி என்பது அவரது பெயர். இரண்டு அறைகள் ஒரு அடுக்களை விறாந்தை என ஓரளவு விஸ்தாரமான வீடு வெட்டிக்கட்டிய கிணறும் இருந்தது. அவளை அன்போடு வரவேற்றார்கள். அவள் கேட்டாள் "இதில கிறிஸ்டி என்றொருவர் இருந்தாரே"

"ஓ...அவர் எங்களுக்கு வித்திட்டு பழையபடி தோட்டத்துக்கு போயிட்டார்."

"நா...நீங்க வந்து கனகாலமே"

"ரெண்டு வரிசம் தோட்டம் செய்யிறதுக்காக கிணத்தையும் ஆழமாக்கி தோட்டம் செய்த நாங்கள். இப்ப"

"இப்ப என்ன நாங்கள் இந்தியாவுக்கு போகப் போறம். இந்த காணியும் வீடும் ஆரும் தெரியாத சனத் திட்ட விட்டா நாசமாக்கிப் போடுங்கள். நீங்க வந்து இதில இருங்கோவன். நிலைமை சீரானா நீங்களும் உங்கட வீட்ட போக நாங்களும் வரலாம் என்ன சொல்லிறியள்.... அங்க காட்டோரம் இது கொஞ்சம் முன்னுக்கு"

லெச்சிமிக்கு மிக சந்தோசம். "அதுக்கென்ன எப்ப போறீங்க அப்ப சொல்லுங்க" என்றாள்.

"இல்ல நாங்கள் நாளண்டைக்கு வெளிக்கிடுவம். இரவு தான் போவம். நீங்களும் ராராவா வந்து சேருங்க மற்றவைக்கு தெரிய வேண்டாம்" என்றாள்.

அப்படியே லெச்சிமி பாதுகாப்பானதாக இருந்த அந்த பெரிய வீட்டிற்கு மாறினாள். பிள்ளைகள் விளையாட

முற்றம். பழுத்த கொய்யாமரங்கள் எலுமிச்சைமரங்கள். பின்புறம் ஒரு மாமரம். என இரண்டேக்கர் நிலம்.. அழகிய இடம்தான் ஆனால் யானைகள் இரவில் சரளமாக உலவின. அவர்களது இந்த வீட்டை அண்மித்த குடிகள் ஐந்தாறு இருந்தன. என்பது குடும்பங்கள் குடியேற்றப்பட்டு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரம் சிவபுரம் என பெயரிடப்பட்ட கிராமம். காலப் போக்கில் அந்தமக்கள் தமக்கான எந்தவசதியும் இல்லாமல் யானைக் காட்டில் வாழ முடியாமல் மீண்டும் தமது எஸ்டேட்டுக் கூலி வேலைக்காக தோட்டப்பகுதிக்கு சென்றுவிட்டனர். மேலும் பலர் இந்த நிலை வந்த போது இந்தியாவுக்கு அகதி யாக போய் விட்டனர். ஆக ஒரு ஐந்தாறு குடும்பங்களே மீதமிருந்தன. நல்ல வளமான இடம் முன்னர் குடியிருந்த மக்களின் காணிகள் கைவிடப்பட்டு, பற்றைகள் மண்டி இருந்தாலும் அந்த பற்கைளுக்குள், கொய்யா மரமுந்திரி எலுமிச்சை போன்ற மரங்கள் இன்னும் சாகாத பூ மரங்கள் என, உரிமை கோரப்படாமல் கிடந்தன.

இப்போது சுதனும் சிவாவும் பிள்ளைகளுடன் அந்த பற்றைகளுக்குள் சென்று நிறைய கொய்யாப் பழங்களையும் எலுமிச்சம் பழங்களையும் கொண்டு வந்து சுவைத்தார்கள். முந்திரிவிதைகள் கேட்பாரில்லாமல் மரங்களின் கீழ் சிதறிக்கிடந்தன. சுதன் அவற்றைச் சேர்த்து வைத்தான். அதிலிருந்து விதைகளை எப்படி எடுப்பது என்பது தெரியவில்லை. அடுப்பில் போட்டு சுட்டு உரித்து தின்றார்கள். ஒரு வாரத்திற்கு மேலாகிறது வாழ்க்கை புதிய சூழலில் சுவாரசியமாகப் போய்க்கொண்டிருந்தது.

அவர்கள் புதிய வீட்டிற்கு வந்தபின் சிதறலாக காட்டையண்டி குடியிருந்தவர்களும் முன்புறமாக வந்து கைவிடப்பட்ட வீடுகளை எடுத்துக் கொண்டு அருகருகாக சேர்ந்து வாழ்ந்தார்கள். உறவுகளையும் பலப்படுத்திக் கொண்டார்கள். வார கடைசியில் முத்தவள் மலர் வந்து சேர்ந்தாள். கூடவே வீட்டிலிருந்து முக்கியமான பெறுமதி என அவர்கள் கருதியிருந்த பொருட்களை கொண்டு வந்தனர். கரன் திரும்பவும் கோவில் குளத்திற்குப் போனான். லெச்சிமியின் வெங்காயம் அறுவடையாகி யிருந்தது. அதற்கு இன்னும் வியாபாரிகள் வரவில்லை. அதை இன்றைக்கு சந்தையில் போட்டாவது விற்க வேண்டும் என்று கூறியிருந்தான். கொண்டுவந்த பொருட் களை விட அகதி நிவாரணமாக அரிசி பருப்பு சீனி மாவு என பொருட்கள் கிடைத்தன. எல்லாவற்றையும் பூவரசன்குளம் பலநோக்கு கூட்டுறவு சங்கப் பண்டகசாலையில்தான் சென்று வாங்க வேண்டும். இவர்கள் இருக்குமிடத்தி லிருந்து இரண்டு மைல் தூரம் பூவரசன்குளம். அங்கே பாடசாலை இயங்கியது.

லெச்சிமி மறுநாளே சிவாவையும் சுதனையும் பாடசாலைக்கு அனுப்பினாள். முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த மலரின் மூத்த பிள்ளை தீபா அருகிலேயே இருந்த வேலங்குளம் பாடசாலைக்கு கொண்டு சென்று விட்டு கொண்டு வரும் வேலையை பாப்பக்கா செய்தார் காரணம் அவர்காலையில் பண்ணைக்காரரின் பட்டிக்கு பால் கறக்க போவார். அப்போது கூட்டிச் சென்று பாட சாலையில் விடுவார். பின்னர் மத்தியானம் பாடசாலை ஆசிரியை பிரியா பூவரசன்குளத்தை சேர்ந்தவராதலால் போகிற வழியிலுள்ள லெச்சிமியின் வீட்டில் அவளை விட்டுச் செல்வாள். காலப்போக்கில் ஒரு உண்மையை லெச்சிமி அறிந்தாள். வேலங்குளம் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை இருந்தது. அத்தனை வகுப்புகளிலும் முப்பதுக்கும் குறைவான மாணவர்களே இருந்தனர். ஐந்து வகுப்புகளுக்கும் அலுவலக நிர்வாகத்திற்கும் அந்த ஒரேயொரு பெண் ஆசிரியைதான் இருந்தார். பாடசாலை யில் குழந்தைகள் இருந்து விளையாடும் அழும். அவை தாய்மார் தாம் எங்காவது போவதாக இருந்தால் பாடசாலை யில் படித்துக் கொண்டிருக்கும் பிள்ளையை வேலிக்கு மேலாக கூப்பிட்டு "இந்த தம்பியை வைச்சுக் கொண்டு படி அம்மா முருகையாண்ணை வீட்ட ஒருக்கா போயிற்று வாறன்" என்று கொடுப்பதும். வகுப்பில் படித்துக் கொண்டி ருக்கும் மகனை "தம்பீ ஓடிவாடா இந்த மாட்டை ஒருக்கா மறிச்சு சேனைக்க விடு" என்று கூப்பிடுவதும் அவர்கள் போவதும் தன்னிச்சையாகவே நடக்கும்.பிள்ளைகளின் கல்வி ?

(தொடரும்)

## தொலைந்து போகும் மண்வாசம்...

இறுகிய மனங்களின் குறுகிய
வாழ்வியல்
தொலைந்து போகிறது மண்வாசம்!

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நீர்த்துப்போகின்றன
உன்னதம் புரியாதவர்களின்
கால விரயம்!

வாய்ச் சொல் வீரர்களின் வன்மச் சிறையில்
செயற்படு சிந்தனைகள்
மௌனமாய் விலகுகின்றன!

கூடில்லாப் பறவைகள் வாடகை வீட்டில்
குடியிருப்புச் சிதைவுகளிடையே
கடவுளரின் சொர்க்கம்!

அச்சிட்டப்பட்ட தாள்களின் பெறுமதி
கடலின் கனவு
கரை கடக்க முடியாத தாழமுக்கச் சுழலில்
அலைகளின் ஒப்பாரி!

சுவடுகள் அழிந்த ஒற்றையடிப் பாதையில்
முட் செடிகளின் முகந் திருத்தி
என்னைத் தேடுகிறேன்!

வெடித்துச் சிதறுகின்ற சாராயப் போத்தல்களின்
சிதைவுகளுக்கு நடுவே
எரிந்துகொண்டிருக்கிறது
அடையாளமிழந்த உடலம்.

**- கனகசபாபதி செல்வநேசன்**
**அல்வாய்.**

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்



திருமண அழைப்பிதழ்
காட்சியறை

MATHI
COLOURS



**WEDDING CARD SHOW ROOM**

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.

T.P: 021 2229285, 077 7222259

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.